வார இதழ்

# ஆதவன்

ஒளி: 29
31.12.2000
விலை ரூபா 12.00
Registered as a Newspaper in Sri Lanka

ராவய வெளியீடு
ATHAVAN ආදවන්



# நாடு எங்கே போய்க்கொண்டிருக்கின்றது?

## மூன்று கவிதைகள் ● மூன்று கவிதைகள் ● மூன்று கவிதைகள் ● மூன்று கவிதைகள்

### கலக்கம்

*செனிவிரத்ன கே. பண்டார*

எரிந்த யாழ் நூலகத்தைப்போல்
சோகமாயிருப்பதேன் சொல்!

உனது இனம் அழிகிறதென்றும்
எனது இனம் அழிகின்றது என்றும்
எண்ணி நீ கலங்குகிறாயா?

மல்லிகையும் அலரிப் பூர்க்களும்
பார்! நம் பூஜையறையில் —
இனம் என்ற சொல்
இல்லையே நம் வாழ்க்கை அகராதியில்
ஏன் நீ கலங்குகிறாய்?

இனங்கள் தீப்பிடித்து எரிந்தபோது
குங்குமப் பொட்டுடன்
என்னோடு வந்தாய்...

இனங்கள் பற்றிப் பேசாமலே
நம் மனங்கள் மாத்திரம்
பேசிக்கொண்டதால்
எவ்வளவு அழகாக இருந்தது உலகு
பூக்களைப்போல் பரவியிருந்தோம்
எங்கும் — எதிலும்!

இன்றேன் கலங்குகிறாய்?

கலங்காதே,
உனது இனமோ எனது இனமோ
அழிக்கவோ அழிக்கப்படவோ இல்லை...
அழிவது மனித இனம் மாத்திரமே!

### அன்பானவர்களுக்கு...

*விஜயரத்ன தேனுவர*

லக்ஷ்மி,
வரவில்லை வார்த்தைகள் எனக்கு
வெந்த இதயத்தைப் பிழிந்து
எழுதுகிறேன்...
எங்கள் உறவைப் போன்றே
வறண்டுவிட்டன வார்த்தைகள்...

நிலாவை எத்தனை முறை விசாரித்தேன்
உன் விலாசம் கிட்டவில்லை...
காற்றும் அப்படியே...

எங்கிருக்கிறாய்...
முறிந்த பனைகளின் மத்தியிலா
இல்லை...
ஆயிரமாயிரம் பேருக்கிடையே
அகதி முகாமிலா?

பனை வேலிக்கிடையே தெரியுமே
உன்முகம்....
செவ்வந்திப் பூப்போல...
இப்போது...?

பார்த்து மின்னலாய்ச் சிரித்து
ஓடும்போது ஒலிக்குமே சலங்கை
என் செவிகள் அதைக் கேட்கவே
படைக்கப்பட்டன என்றிருந்தேன்
இப்போது....?

உன் சிரிப்பைக்
காற்றுடன் கலந்து விடுகிறாயா
கேட்கிறேன்
அல்லது
உன் கண்ணீரை
மேகத்துக்கு அனுப்பி வைக்கிறாயா
நனைகிறேன்

தமிழில் : இப்னு அஸுமத்
நன்றி : யாத்ரா ஆண்டு மலர்

### கவிஞன்

*என். எம். நாளக்க இந்திக்க*

நீ கூறுவது மெய்யெனில்
நான் கூறுவது பொய்யாகலாம்
ஒரு வேளை மெய்யும் பொய்யும்
கலந்திருக்கலாம்...

சொல் மலரே நீ கண்டது
நாயின் சடலமா கங்கையில் மிதந்தது
இல்லை என்னைப் போலொரு
கவிஞனின் சடலமா

கவிதை எழுதிய காலக் கதவு திறந்து
அமைதியின் காற்றை சுவாசிக்க நினைத்து
கவிதைகளைப்போன்றே கனவுகளானதால்
கங்கையில் பாய்ந்து
மாண்டவன் சடலம் தானே!

அம்புலியைக் கேட்டேன்
அன்றிரவு அது வரவில்லை என்றது
காற்றை விசாரித்தேன்
கவிதையைப் போல் எதையோ
கண்டதாய்ச் சொன்னது...

கிளைக் கரத்தை நீட்டிக்
கங்கையின்பால் இருப்பதால் கேட்கிறேன்
உன்னைச் சூழ இருக்கும் முட்கள் மீது
சத்தியமாய்ச் சொல்—

நீ கண்டது கவிஞனின் சடலம்தானே..
அவன் முன்பும் பலமுறை செத்துப் போனவன்
மறதியாய் இறுதியில்
கங்கையில் பாய்ந்தானாம்...

சொல்—
அவன் எழுதிய
எழுதவேண்டிய கவிதைகள் அநேகம்...
அனைத்தையும் அச்சிட்டு
அரசியல்வாதிகளிடம் கொடுக்க...

அதிலேனும் இவர்கள்
செத்துத் தொலைக்க!

## நெஞ்சோடு நெஞ்சம்

## தடயம் என்ற நாடகத் தொகுதி இளங்கீரனால் எழுதப்பட்டது. அதற்கான முன்னுரை இது.

உலகில் பல மகா புருடர்கள் தோன்றி மறைந்திருக்கின்றனர். அவர்கள் வாழ்க்கை, மானுடத்துக்கு என்றென்றும் நினைவில் வைத்துப் போற்றக் கூடிய செல்வமாக அமைந்திருக்கிறது என்றால் மிகையில்லை. இந்த வகையில் ஆயிரம் ஆண்டுகளில் ஒரு முறை தோன்றக்கூடிய ஒரு தீர்க்கதரிசியாகவே அமரகவி பாரதி, இந்திய நாட்டில் தோன்றினார் எனலாம். தென் தமிழ் நாட்டில் உதித்து, தாய்மொழியாம் தமிழை, இந்தத் தென்தமிழ் நாட்டின் மூலையை, உலகெங்கும் ஒளிரச் செய்யும் கவிவாக்கினாலும், கருத்துக்களாலும் விளங்க வைத்த அந்த மாமனிதர், சாதாரண மக்களைப் போலவே தோன்றி வாழ்ந்தார். ஆனால் வறுமையும், மிடிமையும் தம்மை வாட்டிய போது அது தனக்கு மட்டும் ஏற்பட்டதென்று சாதாரண மனிதராய் அழுந்தி விடவில்லை. இந்திய நாட்டுக்கும் எங்கெங்கும் அந்நிய ஆதிக்கத்திலும், அடிமைத்தளையிலும் அழுந்திக் கிடக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட சாபக்கேடுகளாகவே கருதினார். அவருடைய உணர்வுகள் மானுடம் முழுதும்தாம் என்ற பிரதிபலிப்பாக, எழுச்சி மிகு கவிக்குரலாக, பாடல்களாக, வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் அவரை இனம் காட்டிக் கொண்டு மலர்ந்தன.

மனிதாபிமானங்களை அழுத்திய சனாதனத்தின் எதிரி அவர். அறியாமை இருட்டிலும் அடிமைத்தளையிலும் அழுத்தப்பட்ட பெண்குலம், மனித மதிப்பெய்த வேண்டும் என்று இடைவிடாது முழங்கிய அந்தக் கவிஞன், தம் இல்லாளுடன் நடத்திய இல்வாழ்க்கை ஏறக்குறைய ஒரு போராட்டக்களமாக இருந்ததென்றே கூறலாம்.

தேசிய எழுச்சி, சுதந்திரத்தின் மாண்பு, அமரத்துவம் வாய்ந்தமானுடம் என்று இலட்சியங்களின் உயர் படியில் கனவுகளுடனும், கற்பனைகளுடனும் வாழ்ந்தவர் அவர். மனைவி செல்லம்மாளோ அன்றாட நடப்பியல் வாழ்வின் சாதாரண ஆதர்சங்களான பொருள் சார்ந்த சமுதாய மதிப்பு, அந்தச் சமுதாயத்தின் தகர்க்க முடியா மரபுகள் ஆகியவற்றோடு, வாட்டும் வறுமையும், நடப்பியலுக்கு உதவாத கணவரின் உணர்ச்சிமயமான ஆவேசங்களின் முரண்பாடுகளுடன் அன்றாடம் போராடியவர். அந்த மனிதரைப் புரிந்து கொண்டு இல்வாழ்வின் மாண்பை உலகுக்கெல்லாம் உணர்த்தும் வண்ணம் இல்லறம் நடத்தியவர்.

பிரிட்டிஷ் அரசின் ஆதிக்கங்களுக்கு அஞ்சி புதுவையில் தலைமறைவாக அவர் வாழ்ந்த காலமே, அவருடைய மொத்த வாழ்நாளின் நெடும் பகுதியை உள்ளடக்கியதும், ஒப்புயர்வற்ற பாடல்களை உலகுக்களித்தகாலமுமாகும்.

அந்த வாழ்வே, ஓர் ஒப்பற்ற இதிகாச வாழ்வாக, என்றென்றும் இந்நாட்டு மக்களுக்கு மகிழ்ச்சியை பிரமிப்பை, அன்பை, நம்பிக்கையை மனங்களில் இசைக்கவல்லதாகும்.

இந்த வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து, அந்த மகாகவிஞரின் வாழ்வைக் கண்முன் தோற்றுவிக்கும் ஓர் அரிய முயற்சியே, இந்த மகாகவி பாரதி என்ற நாடகம்.

இதனைத் தமிழுலகுக்களித்திருக்கும் திரு. இளங்கீரன் அவர்கள், இலங்கையின் முன்னோடி முற்போக்குத் தமிழ் இலக்கியப் படைப்பாளியாவார். தம் எண்ணற்ற வானொலி, மேடை, நாடகங்கள், நாவல்கள், சிறுகதைகள், இலக்கியக்கட்டுரைகள் வாயிலாக சுமார் நாற்பத்தைந்தாண்டுகள் இலக்கியப் பணிபுரிந்துள்ளார். மரகதம் என்னும் கலை இலக்கிய சஞ்சிகையின் வெளியீட்டாளராக, ஆசிரியராக இருந்து பத்திரிகை நடத்தியுள்ளார். தேசாபிமானி, தொழிலாளி, ஜனநாயகம் ஆகிய வாரப்பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராகப் பணிபுரிந்து, பத்திரிகைச் சேவையிலும் ஈடுபட்டு அனுபவம் மிகுந்தவர். இவர் பல்லாண்டு காலமாகப் பாரதியின் பாடல்களிலும், வாழ்விலும் ஈடுபாடு கொண்டு ஆய்வு செய்த அளவில் ஐம்பதுகளிலேயே பாரதிகண்ட சமுதாயம் என்ற நூலினை வெளியிட்டிருக்கிறார். அப்போதே இலங்கை முழுதும் பாரதியை மேடைகளில் தொடர்ச்சியாக எடுத்துக் காட்டியவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர், பாரதி நூற்றாண்டு விழாவினை 1983 முற்பகுதியில் ஏற்பாடு செய்தபோது, அச்சங்கச் செயற்குழு உறுப்பினராக இருந்து எனக்கு இலங்கை விழாவுக்கு வருகை தர அழைப்பு அனுப்பிக் கௌரவித்திருக்கிறார். அப்போது கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் என்னுடன் வருகை தந்திருந்த பேராசிரியர்கள் ராமகிருஷ்ணன், தொ.மு.சி. ரகுநாதன் ஆகியோருடன் மேடையேற்றப்பட்ட மகாகவி பாரதி நாடகத்தைக் கண்டுகளிக்கும் சந்தர்ப்பமும் வாய்த்தது.

பொதுவாக, இந்தியத் தாய் நாட்டு வாசகர்கள் இலங்கை எழுத்தாளர் மொழி வழக்கைப்புரிந்து கொள்ள முடியாமலிருப்பதாகக் குறை கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் என் கண்முன் நாடக உருவில் உயிர்ப்பிக்கப்பட்டு, நான் கண்ட பாரதியை எங்களில் ஒருவரே ஆக்கி இயற்றியதாகவே கண்டு மகிழ்ந்தேன், வியந்தேன். என்னுள் மறக்க முடியாமல் ஆழமாகப் பதிந்த நாடகம் அது. இப்படி இருந்தும் இவ்விவரங்களை நான், எனது இந்தியத்தாய் நாடு திரும்பிய இலங்கைத் தோட்டத் தொழிலாளர் வாழ்வின் பிரச்சினைகளை மையப்படுத்தி எழுதிய மாணிக்க கங்கை நூலின் முன்னுரையில் குறிப்பிடுகையில், அந்நாடகத்தை எழுதிய ஆசிரியர் பெயர் திரு. இளங்கீரன் அவர்கள் என்று குறிப்பிடாமல் வேறொரு பெயரைக் குறிப்பிட்டு விட்டேன். இது மிகப் பெரிய தவறு. சுட்டிக்காட்டப்பட்டதும், இளங்கீரன் அவர்களிடம் வருந்தி மன்னிப்புக் கேட்டு மடல் எழுதினேன். அடுத்த பதிப்பில் திருத்தம் செய்வதாக உறுதியளித்தேன். பிழை எப்படி நேர்ந்தது? ஓர் எழுத்தாளர் இன்னோர் எழுத்தாளரை அறிந்து மறைக்க முடியுமா? நான் அத்தகைய இலக்கியவாதி அல்ல. இலங்கைக்கு நாங்கள் வந்ததும், தங்கியிருந்த பத்து நாட்களும் கவிஞர்களும், எழுத்தாளர்களும் இளம் பத்திரிகையாளர்களும் என்னைச் சூழ்ந்து தங்கள் அன்பால் திணறடித்தார்கள். பல பெயர்களை முகங்களைச் சரியாக நினைவில் இருத்திக்கொள்ள முடியவில்லை. முறையான அறிமுகம், எழுத்து மூலமான விவரங்கள் எங்களுக்குச் செய்யப்பட்டிருக்கவில்லை. அன்பர்கள் அனைவரும் என்னைத் தெரிந்து கொண்டார்கள். அது சிரமமாக இல்லை. எனக்குப் பெயர்க்குழப்பம், ஆள் புரிந்திராத குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. நின்று நிதானிக்க இயலாத கெடுபிடிகளில், பயணங்களும், இலங்கை முழுதுமாக ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களும் நடந்தன. திரும்பி வரும்போது, கட்டுக்கட்டான நூல்கள், கவிதைகள், சஞ்சிகைகள் என்று அன்பான நினைவுகளையும் சுமந்து வந்தேன். ஆழ்ந்து படிக்கவும் படித்தேன். ஆனால் பெயரில் தவறு நிகழந்து விட்டது.

இப்போது, இந்த அரிய நூலுக்கு முன்னுரை எழுதும் ஒரு வாய்ப்பினைத் தந்து, எனது தவறுக்குப் பரிகாரம் செய்து கொள்ள ஓர் அரிய வாய்ப்பினைத் திரு. இளங்கீரன் அவர்கள் அளித்துள்ளார். அன்னாரின் பெருந்தன்மையைப் போற்றி என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தொகுதியில், இன்னம் இரு நாடகங்கள் உள்ளன. ஒன்று உழவர் குலத்தைச் சிறப்பித்து கவியரசர் கம்பர் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வினை வைத்து எழுதப்பட்ட நாடகம். மற்றது, மனுநீதிச் சோழன் வரலாற்றை ஒரு புதிய கோணத்தில் பார்த்து, புதிய பொருளைக் காணும் நாடகம். பல முறைகள் மேடையில் நடிக்கப்பட்டவை என்றாலும் படிப்பதற்கு இலக்கியச் சுவை மிகுந்ததாக உள்ளன. இம்மூன்றும் இந்தியத் தென்தமிழ் நாட்டில் பிறந்த கவிஞர்கள், அரசர் வாழ்வினைச் சித்திரிப்பவை என்ற அளவில் தமிழர்கள் எல்லையால் வேறுபட்டாலும் இதயங்களால் ஒன்றுபடும் இலக்கியப் படைப்பாளிகளாய்த் திகழ்வதை மெய்ப்பிக்கிறது. என் மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

### பாரிஸ் நிதி உதவி பேச்சுவார்த்தை தோல்வி

# அரச நிர்வாகம் சுமுகமாகும் வரை நிதி உதவி இல்லை.

பாரிஸில் நடைபெற்ற நிதிஉதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் இலங்கை அரசு எதிர்பார்த்த அனைத்தும் கிடைத்திருப்பதாக அரச ஊடகங்களின் ஊடாக தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருந்தாலும் கிடைக்க வேண்டியது எதும் இலங்கைக்கு கிடைக்கவில்லை. தேவையான மாற்றங்களைக் கொண்டு வந்தால் மாத்திரமே உதவிகள் வழங்கப்படும் எனும் வாக்குறுதி மாத்திரமே கிடைக்கப் பெற்றிருக்கின்றது.

வெகுசன ஊடகச் சுதந்திரம் உட்பட ஜனநாயகத்திற்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலுடன் நிர்வாகத்தை அரசியலில் இருந்து விடுவித்துக் கொள்ளும் அவசியம், பலவீனமான நிதி, முகாமைத்துவம், இனநெருக்கடி என்பன கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளன. அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்காவின் சமுர்த்தித் திட்டமே கடும் விமர்சனத்திற்குள்ளாகி இருக்கின்றது. சமுர்த்தி திட்டம் உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தின் திருப்தியை பெற்றுள்ளது என அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க பாரிஸிலிருந்து இலங்கை மக்களுக்கு ஆற்றிய உரை உலக வங்கியின் எதிர்ப்பிற்கு உள்ளாகியுள்ளது என தெரியவருகின்றது.

இலங்கைக்கான உதவிவழங்கும் குழுக்கூட்ட, ஆரம்ப உரையை தென் ஆசிய பிராந்தியத்தின் உபதலைவர் மிகோரிஷிமியா நிகழ்த்தினார். அவ் உரை நிகழ்வின் போது ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா நவம்பர் 7ம் திகதி பாராளுமன்றத்தில் நாட்டுமக்களை நோக்கி நிகழ்த்திய உரையின் சாரத்தை முன்வைத்து இலங்கை மக்கள் நாட்டு நிலைமையைப் பற்றி உண்மையாகவே என்ன கூறுகிறார்கள் என வினவினார்.

நிதி உதவிகள் வழங்கும் மகா நாட்டில் வறுமை ஒழிப்புக்காக நடாத்தப்படும் சமுர்த்தி திட்டம் கடுமையான விமர்சனத்திற்குள்ளானது. உடனே இதனை மறு பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

பாரிஸ் மகாநாட்டின் போது உயர்கல்விக்காக கட்டணம் ஒன்று அறவிடுவது தொடர்பாகவும் கருத்துப் பரிமாறல்கள் நடைபெற்றன. ஆசிய அபிவிருத்தி வங்கி அறிக்கையொன்றை சமர்ப்பித்தது. ஆரம்பக் கல்வியை பெறும் 75% மாணவர்களில் 2% மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக்கழக பட்டப்படிப்பு வசதி கிடைக்கப் பெறுகின்றது. இலங்கையில் வர்த்தக, கைத்தொழில் அடிப்படையில் இவர்களுக்கான தேவைகள் குறைவாக இருப்பதால் பட்டதாரிகளில் அநேகர் வேலையற்றோராய் இருக்கின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்க சார்பாகக் கலந்து கொண்ட உயர் கல்வி தொழில் நுட்ப அமைச்சர் இந்திக குணவர்த்தன அரசாங்கம் தொழில்சார் கல்வியை விருத்தி செய் வதற்காக செயற்படுத்தப்படும் மறுசீரமைப்புகளின் படி தொழிற்துறைக் கல்விக்காக தனியார் ஸ்தாபனங்களின் பங்கை, முக்கியமாக தகவல் தொழில் நுட்பத்துறைக்குப் பெற்றுக் கொள்வதற்காக உடன்பட்டுள்ளார்.

# அவுஸ்திரேலியாவில் எழுத்தாளர் விழா

அவுஸ்திரேலியாவில் அனைத்து மாநிலங்களிலும் வதியும் தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள், பொதுசன ஊடகவியலாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் ஒன்றுகூடும் எழுத்தாளர் விழா - 2001 எதிர்வரும் ஜனவரி மாதம் 6ம், 7ம் திகதிகளில் விக்டோரியா மாநிலத் தலைநகர் மெல்பனில் நடைபெறவுள்ளது.

தனிப்பட்ட விருப்புவெறுப்புக்களுக்கு அப்பால் கலை, இலக்கியத்துடன் தொடர்புகொண்ட அனைவரும் ஒன்றுகூடும் நிகழ்வாக இந்த விழா அமையவுள்ளது.

மெல்பன் நகரில் பிரிஸ்ர்டன் நகர மண்டபத்தில் 6ம் திகதி முழுநாள் நிகழ்ச்சியும் இரண்டாம் நாள் 7ம் திகதி பன்டூரா பாக் என்ற திறந்த வெளி பூங்காவிலும் இந்த விழா நிகழ்ச்சிகள் நடைபெறும்.

முதல் நாள் நிகழ்ச்சி காலை 9 மணிக்கு கண்காட்சிகளுடன் ஆரம்பமாகும்.

தமிழ் இலக்கியத்திற்கும் கலைத்துறைக்கும் பணியாற்றி மறைந்த படைப்பாளிகள், கலைஞர்கள், தமிழ் ஊடகத்துறையில் சேவையாற்றி மறைந்த பத்திரிகையாளர்களின் உருவப்படங்கள் கண்காட்சியில் இடம்பெறும்.

அத்துடன், விக்டோறியா மாநில இளம் தலைமுறையினரின் ஓவியங்களும், அவுஸ்திரேலியா ஓவியக்கலைஞர்களின் ஓவியங்களும், புகைப்பட கலைஞர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் புகைப்படங்களும் இடம்பெறும்.

தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளிலும் வெளியாகிய, வெளிவரும் நூல்கள், மலர்கள், இதழ்கள், பத்திரிகைகள் ஆகியவற்றின் கண்காட்சியும், முதல்நாள் இரவு நிகழ்ச்சியில் "மல்லிகை" அவுஸ்திரேலிய சிறப்பிதழ் வெளியீடும் இடம்பெறவிருப்பதனால் மல்லிகைப்பந்தல் வெளியீடுகளின் கண்காட்சியும் நடைபெறவுள்ளது.




# மிருசுவில் பகுதியில் மனித புதைகுழிகள்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு 17 வருட இருள் சூழ் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை தெற்கில் புதைகுழி தோண்டி கவிழ்த்து ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது. தெற்கில் புதைகுழி தோண்டி ஆட்சிக்கு வந்த இந்த அரசு வடக்கு கிழக்கு தமிழர்களை புதைகுழிக்குள் மூடுகின்றது.

மனிதாபிமானம் பேசி ஆட்சிக்கு வந்த அரசு ஏன் இவ்விதம் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்கின்றது.

தொடரும் போரின் காரண மாக எறிகணை வீச்சுக்களுக்கும் பொம்பர், சுப்பர் சோனிக் விமானங்களின் குண்டு வீச்சுக ளுக்கும் பயந்து தமது உயிர்களை பாதுகாத்துக் கொள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கு நடைபெற்ற பரிதாப நிகழ்வு பாதுகாக்க வேண்டியவர்களே பாதுகாப்புத் தேடிச் சென்றவர்களின் தலைக ளை கிள்ளி புதை குழிக்குள் மூடியிருக்கின்றனர். 25.12.00 திங்கள் மிருசுவில் வடக்கில் புதை குழியொன்றில் புதைக்கப் பட்டிருந்த 8 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நாவலர் மடத்தில் இடம் பெயர்ந்து வாழ்ந்தவர்களில் ஒன்பது பேர் தமது இருப்பிடங்களைப் பார்ப் பதற்காக சாவகச்சேரி மீசா லைக்கு சென்ற வேளையில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட வர்கள் கடந்த திங்கட் கிழமை புதை குழிக்குள் இருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இச் சடலங்களின் கழுத்து வெட்டப்பட்ட காயங்களுடனும், அடி காயங்களுடனும் காணப் படுகின்றது.

சொ- தேவகுலசிங்கம் (31 வயது), வில்வராஜா (41வயது) இவருடைய பிள்ளைகளான பிர தீபன் (15வயது) பிரசாந்த் (5வயது) ஞானபாஸ்கரன் (19 வயது), ந.ஜெயச்சந்திரன் (21 வயது), க. ஞானச்சந்திரன் (35 வயது) மகன் சாந்தன் (15 வயது) ஆகியோரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பாக ஒரு இராணுவ அதிகாரியும் ஒன்பது இராணுவ வீரர்களும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவ்வாறாக எத்தனையோ சம்பவங்கள் வடக்கு கிழக்கில் நடைபெற்றுள்ளன. புதை குழிகளும் தோண்டப்பட்டன. சடலங்கள் முதல் எலும்புக் கூடுகள் வரை தோண்டி எடுக்கப்பட்டன. அடையாள அணி வகுப்புகள் நடத்தப்பட்டன. குற்றவாளிகள் என சிலர் நீதியின் முன் நிறுத்தப்பட்டனர், பயன் என்ன? குற்றவாளிகள் தண்டிக்கப் பட்டார்களா? அல்லது இனி மேலும் நடைபெறாமல் இருக்க ஏதேனும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டனவா? இல்லை.

தமிழ் அரசியல் வாதிகளின் இருப்பை தக்கவைத்துக் கொள்ள அறிக்கைகள் விட்டனர், சிலர் வீராவேசமாக பேசினர். அத்தோடு எல்லாம் சரி. பாலியல் வல்லுறவுகள், காணாமல் போதல், படுகொலைகள் தொடர் கின்றன. இதற்கு முடிவே இல்லையா? ஏன் இதற்கு நியாயம் வழங்கப்படவில்லை. தமிழர்கள் என்ற காரணத்தினாலா தமிழ் பாராளுமன்ற அரசியல் வாதிகள் இதனை பாராளுமன்றத்திற்குள் மாத்திரம் ஏன் அடக்கி வாசிக்கின்றனர். இராணுவ வீரர்களின் இந்த மன நோய்க்கு மாற்று வழியே இல்லையா?

இது தொடர்பாக பரந்து பட்ட மக்களால் ஏன் ஆர்ப் பாட்டம் நடத்தப்படவில்லை. மனித உரிமை அமைப்புகள், கௌரவத்திற்கான மன்றங்கள் ஏன் மௌனம் சாதிக்கின்றன. மௌனம் சாதித்தால் செம்மணி, அரியாலை இப்பொழுது மிருசு வில் புதைகுழிகளின் கதைகள் தொடரும்.

**விரைவில் எதிர்பாருங்கள்!**

2001 ஜனவரி 07 முதல் ஆதவன் பத்திரிகை விசாலமாக (Broad Sheet) புதுப்பொலிவுடன் வெளியாகும்!

# அரசை நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கும் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பு

இலங்கையின் இனநெருக்கடிக்கும், உள்நாட்டு யுத்தமோதல்களுக்கும் தீர்வொன்றைக் காண்பதற்கான அமைதிவழிநடவடிக்கைகளுக்கு சர்வதேசரீதியாகவும் உள்நாட்டிலும் முன்னைய காலங்களைவிட நெருக்கடிகள் அதிகரித்துள்ள இன்றைய சூழ்நிலையில் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள ஒரு தலைப்பட்சமான ஒரு மாத கால யுத்த நிறுத்த அறிவிப்பு இலங்கை அரசுக்கு மேலும் ஒரு எதிர்பாராத திடீர் நெருக்குதலை கொடுத்துள்ளது.


இலங்கை அரசு எதிர்பாராத தருணத்தில் விடுதலைப்புலிகள் அறிவித்த அதிரடி நடவடிக்கையான ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பின் உள்நோக்கங்கள் தொடர்பாக பல்வேறுபட்ட விமர்சனங்கள் எழுகின்ற போதிலும், சமாதானச் சூழ்நிலையொன்றை உருவாக்குவதற்கு முன்னெடுக்கப்படும் முன்னோடி நடவடிக்கைகளுக்கு அரசும் - விடுதலைப்புலிகளும் ஒருவருக்கொருவர் சில விட்டுக்கொடுப்புகளையும் நல்லெண்ணமுயற்சிகளையும் வெளிக்காட்டுவதற்கு அல்லது ஆரோக்கியமான ஒரு அரசியல் நடவடிக்கைக்கு யுத்த நிறுத்தம் அவசியமானதொன்றாகும்.

கடந்த 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு யேசுபிரான் பிறந்த புனித கிறிஸ்மஸ் தினத்திலிருந்து ஜனவரி 24ம் திகதி நள்ளிரவு 12 மணி வரை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்த அறிவிப்பானது இலங்கை அரசின் கடும் போக்காளர்களிடமும் இராணுவ உயர் மட்டத்திலும் சிங்கள பௌத்த இனவாதப்போக்காளர்களிடமும் இருந்து எதிர்ப்புணர்வுகளை எதிர்கொண்ட போதிலும், வெளியுலகிலும் நாட்டின் சாதாரண குடிமக்களிடமும், மிகுந்த எதிர்பார்ப்பொன்றையும், வரவேற்பையும் பெற்றுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

இதேநேரம், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனநெருக்கடிக்கு தீர்வொன்றைக்காண்பதற்கு தயாராக இருப்பதாக அறிவித்துள்ள இலங்கை அரசு, விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்த அறிவிப்பை உதாசீனப்படுத்தியுள்ளமையானது, சர்வதேச சமூகத்தின் நல்லெண்ண முயற்சிகளுடன் நோர்வே முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு குந்தகமான விளைவுகளையே உருவாக்குமென மேற்குலக இராஜதந்திர வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

சமாதானப்பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கான நல்லெண்ண சூழ்நிலையொன்றை உருவாக்கும் நோக்குடன் நாம் அறிவித்துள்ள ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்த அறிவிப்பை நிராகரிப்பதற்காக இலங்கை அரசு எடுத்துள்ள முடிவை அது மீள்பரிசீலனை செய்ய வேண்டும். அதேநேரம் ஏற்கனவே அறிவித்தது போன்று எமது போர் நிறுத்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் அதேவேளை, எமக்கெதிராக இலங்கை இராணுவம் மேற்கொள்ளும் தாக்குதல்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை எமக்கிருக்கின்றதொன்றாகும் எனவும் போர் நிறுத்த அறிவிப்பிற்கு பின்னர் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இராணுவரீதியிலான தாக்குதல்கள் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியுமென்ற தனது கொள்கையினை இலங்கை அரசு மாற்றிக்கொள்வதுடன் போரும் சமாதானமும் ஒன்றாக இடம்பெற வேண்டுமென்ற ஏற்க முடியாத வாதமொன்றை இலங்கை அரச முன்வைக்கின்றது. இந்த நிலைப்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இந்த இரு விடயங்களும் ஒன்றுடன் ஒன்று ஒத்துவரமுடியாத விடயங்களாகும். வன்முறைகளுக்கும் கடும்யுத்தத்திற்கும் மத்தியில் நேர்மையானதும் ஆக்கபூர்வமானதுமான சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடைபெற முடியாதென நாம் கருதுவதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.





அதேநேரம், விடுதலைப்புலிகள் அறிவித்திருக்கும் போர்நிறுத்த அறிவிப்பை தேவையற்ற ஒன்றென அரசாங்கம் நிராகரித்துள்ளதை இராணுவத்தினர் வரவேற்றுள்ள அதேவேளை, யுத்த முனையில் தமக்கு இப்போது சாதகமான சூழ்நிலையொன்று தோன்றியுள்ளதாகவும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால், விடுதலைப்புலிகள் போர்நிறுத்த அறிவிப்பை விடுத்த உடனேயே படைத்தரப்பினர் மேற்கொண்ட நாவற்குழியை மீட்பதற்கான கினிகிர - 7 பாரிய படையெடுப்பு பெரும் இழப்புகளுக்கு மத்தியில் கைகூடவில்லையென யாழ்குடாநாட்டிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதெல்லாவற்றிற்கும்பால் தென்மராட்சி மிருசுவில் படித்த மகளிர் குடியேற்ற திட்டப்பகுதியிலிருந்து கடந்த திங்கட்கிழமை 8 குடிமக்களின் சடலங்கள் புதைகுழியொன்றிலிருந்து மீட்கப்பட்ட சம்பவமானது, இலங்கை அரசபடைகளின் இனஅழிப்பு நடவடிக்கையினையும், உச்சக்கட்ட மனித உரிமைமீறல்களையும் சர்வதேச சமூகம் மத்தியில் தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

கடந்த 19ம் திகதி இடம் பெயர்ந்து வந்து வடமராட்சி நெல்லியடியில் வசிக்கும் பொதுமக்கள் பலர் படையினரின் அனுமதி பெற்று போர் நடவடிக்கையின் போது கைவிட்டு வந்த தமது சொந்த இருப்பிடங்களை பார்வையிடச் சென்ற போதே கொடிகாமம் இராணுவ முகாமைச் சேர்ந்தவர்களால் கைது செய்யப்பட்டு தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் 5 வயதுச் சிறுவன் ஒருவனும் படுகொலை செய்யப்பட்டுள்ளான்.

இலங்கை அரச படைகளின் இரக்கமற்ற மனிதப்படுகொலைகளின் புதைகுழிகள் ஏற்கனவே செம்மணி, அரியாலை ஆகிய இடங்களில் நிரூபணமாகியுள்ள நிலையில், மீண்டும் மிருசுவில் பகுதியில் அதுவும் சமாதானச்சூழ்நிலையொன்று எட்டப்படுவதற்கான இன்றைய காலகட்டத்தில் நடந்தேறியுள்ளது.

இலங்கை அரசபடைகளின் இவ்வாறான இன அழிப்பு மனிதப்படுகொலைகள் வடக்கு கிழக்கில் அதிகரித்துள்ள சூழ்நிலையில் போர் நடவடிக்கைகளை முன்னெடுத்த வண்ணம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதென்பது அர்த்த புஷ்டியான அரசியல் நோக்கொன்றிற்கு இட்டுச்செல்லுமென எதிர்பார்க்கமுடியாததொன்றாகும்.

இதேநேரம் கடந்த 18, 19ம் திகதிகளில் பிரான்சின் தலைநகரில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் இலங்கை அரசுக்கு மேலும் நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது.

**செந்தணலோன்**

இலங்கையின் இன்றைய யுத்த மோதல்கள் இனநெருக்கடித்தீர்விற்கான சமாதானமுயற்சிகள் தொடர்பாக வெகுவாக ஆராய்ந்த உதவிவழங்கும் நாடுகள், நிதி உதவி வழங்குவதை தாமதப்படுத்தியுள்ளதுடன். இக்குழுவினர் இலங்கைக்கு சென்று நிலைமைகளை அவதானித்த பின்னரே அது தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கப் படுமென்றும் அறிவித்துள்ளனர்.

அத்துடன், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தொடரில் பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற தமிழ் இளைஞர்கள் மீதான படுகொலைச்சம்பவம் இலங்கையில் அதிகரித்துவரும் மனித உரிமை மீறல்கள், செய்தி ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள் சமாதானப்பேச்சுவார்த்தைகள் மூலம் இன நெருக்கடிக்கு தீர்வொன்றைக் காண்பதற்கான முன்முயற்சிகள் ஆகிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் விதித்துள்ள நிபந்தனைகள், நிதிவழங்குவதற்கான தாமதம் என்பன இலங்கையின் எதிர்கால பொருளாதார மேம்பாட்டில் சடுதியான எதிர்விளைவுகளை உருவாக்கப்போவது மட்டுமன்றி, இராணுவ நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு பெருமளவு பணத்தை செலவிடுவதில் நெருக்கடிகளை எதிர்கொள்ளலாமென்றும் நம்பப்படுகின்றது.

இவ்வாறான பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள இலங்கை அரசுக்கு அயல்நாடான இந்தியாமட்டுமே 100கோடி ரூபா கடனுதவியை வழங்க முன்வந்துள்ளது. இலங்கையின் உள்நாட்டு மோதல்களுக்கு முடிவொன்றைக் காண்பதற்கான சமாதானச்சூழ்நிலை தோன்றியுள்ள இத்தருணத்தில் எந்தவித நிபந்தனையுமின்றி இந்தியா வழங்கும் இராணுவ மற்றும் பொருளாதார உதவிகள், அரசியல் காய்நகர்த்தல்கள் என்பன இலங்கையின் உள்நாட்டு மோதல்களை தணிப்பதற்கான சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு எதிர்மாறான தொன்றாகவேயுள்ளது.

அதேநேரம், இலங்கையின் இன்றைய நிலைவரங்களில் தன்னை நேரடியாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் மற்றொரு நாடான பிரிட்டன் விடுதலைப்புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ளதுடன், இலங்கை அரசும் அதனைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமெனக் கோரியுள்ளதோடு, மேற்குலக நாடுகளின் எதிர்பார்ப்பும் அவ்வாறான ஒரு நிலைப்பாடேயென்றும் தெரிந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் ஒரு நிலைப்பாட்டிற்கு கொண்டு வந்து சமாதானப்பேச்சுவார்த்தைகளுக்கான சூழ்நிலையொன்றை உருவாக்க கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் நோர்வேக்கு புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பை இலங்கை அரசு நிராகரித்துள்ளமையானது பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது.

அதுமட்டுமன்றி, விடுதலைப்புலிகள், இலங்கை அரசு என்ற இரு முக்கிய தரப்புகள் என்பவற்றிற்கப்பால் பிராந்திய மேலாதிக்க சக்தியான இந்தியாவின் முட்டுக்கட்டைகளையும் நோர்வே தாண்டவேண்டிய நிலையிலே சமாதான முயற்சிகள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நீண்டநாட்களாக வெளிநாட்டு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் எடுக்க இருக்கும் முயற்சிகள், நெருக்கடிகள் சிக்கல்கள் முட்டுக்கட்டைகள் நிறைந்தது மட்டுமன்றி இலங்கையின் எதிர்காலம் தொடர்பான பெரும் கேள்வியொன்றையும் எழுப்பி நிற்கிறது.

ஆதவன்

இல-83, பிலியன்தல வீதி மஹரகம
தொலைபேசி எண் - 851672, 851673
விநியோகப் பிரிவு - 851672
தொலைமடல் - 851814

### வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உரிமை ஆதவனுக்குண்டு.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம் எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

# போர் நிறுத்த அறிவிப்பும் அரசும்

கொடூரமான யுத்த கலாசாரத்திற்கு முடிவுகட்டி நல்லதோர் சமாதானச்சூழல் ஏற்படுவதற்கு ஆரம்பக்கட்டமாக சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுப்புகளுடனும் கூடிய நல்லெண்ணசமிக்ஞைகள் அவசியம்.

அதற்கான முதல் கட்டமாக விடுதலைப்புலிகள் தம்பக்கத்திலிருந்து சமாதானப்பேச்சுவார்த்தைக்குத் தயார் எனவும் அதனை வலுப்படுத்தும் வகையில் ஒரு மாத காலத்திற்கு போர் நிறுத்த அறிவிப்பையும் அறிவித்துள்ளனர். இப்போது பந்து அரசின் பக்கம்.

சிலர் இதனை விடுதலைப்புலிகளின் சதி என்கின்றனர். சிலர் போர் அறிவிப்புக்கு பின்பும் விடுதலைப்புலிகள் அதனைமீறியுள்ளனர் என்றும், விடுதலைப்புலிகள் பலவீனப்பட்டுள்ளனர் எனவே தங்களை மீளமைப்புச் செய்ய அவர்கள் எடுத்திருக்கும் தந்திரோபாயமென்றும், மறுபுறத்தில் சர்வதேச ரீதியில் அபகீர்த்திக்கு உள்ளாகியிருக்கும் விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்தில் தங்களின் அரசியல் இலக்கை தக்க வைத்துக் கொள்ளும் நோக்குடன் எடுக்கப்பட்ட முயற்சியெனவும் வர்ணிக்கின்றனர். அடுத்ததாக விடுதலைப்புலிகளுக்கெதிராக அரசுடன் கைகோர்த்து நிற்கும் அரசியல் விபத்துக் காரணமாக பாராளுமன்றம் சென்ற அரசியல் கட்சிகள் ஒருவிதமாக மனதிற்குள் திட்டிக் கொண்டாலும் வெளியே விடுதலைப் புலிகளை எதிர்க்க விரும்பாத தமிழ் கட்சிகள் இன்னொரு விதமாக விடுதலைப்புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை பற்றிய கருத்தினை இவர்கள் ஒரு விதமாகவும் அரசு ஒருவிதமாகவும் அரச இராணுவத்தரப்பிலிருந்து ஒருவிதமான கருத்தும் பேரினவாதிகள் இன்னொரு கருத்தையும் முன்வைக்கின்றனர்.

எது எப்படியாக இருந்த போதிலும், சர்வதேச சமூகமும், சமாதான விரும்பிகளும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யுத்தத்தை எதிர்க்கின்ற மக்களும் விசேடமாக வடக்கு கிழக்கு வாழ் அனைத்து இனமக்களும் இதனை வரவேற்றுள்ளனர். எனவே அரசு சமாதான பேச்சு வார்த்தையையும் போர் நிறுத்த அறிவிப்பையும் கவனத்திலெடுத்து நாட்டின் நலன் கருதி பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இராணுவரீதியான நடவடிக்கை மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது இது உலக வரலாறு கண்ட உண்மையாகும். எனவே வீண்சந்தேகங்களுக்கும் நாட்டுநலனில் அக்கறையில்லாவர்களின் காட்டுக்கூச்சலுக்கும் இடம் கொடுக்காது, விடுதலைப்புலிகளின் அரசியலுக்கேற்ப அரசும் தனது காய்களை சமாதானத்திற்காக நகர்த்த வேண்டும். தொடரும் யுத்தத்தை அரசு நிறுத்த வேண்டும். விடுதலைப்புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை ஏற்று அதற்கேற்றவாறு அரசு அரசியல் ஞானத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

*ஆசிரியர்.*

---

## விக்டர் ஐவன் எழுதுகிறார்

# சிறுபான்மை மக்களின் நெருக்கடியும் உத்தேச சுதந்திர ஆணைக்குழு நான்கும்



தமிழர் விதலைக்கூட்டணியின் செயலாளர் ஆர். சம்பந்தன் அவர்கள் உத்தேச ஆணைக்குழு நான்கைப்பற்றி ஞாயிறு பத்திரிகையொன்றுக்கு சுருக்கமாகத் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார். இந்த நான்கு ஆணைக்குழுக்களை நியமிப்பதனால் மட்டும் ஜனநாயகத்தைப் பாதுகாத்துக் கொள்ள முடியாதெனவும், இதற்குமேலாக சிறுபான்மையின மக்கிளின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியுமான வகையில் அரசியலமைப்புச் சட்டமும் மாற்றப்பட வேண்டுமெனவும் அவர் கூறியிருந்தார்.

சம்பந்தன் அவர்கள் இவை சம்பந்தமாகத் தெரிவித்திருக்கும் கருத்துக்களின்படி தெளிவாவது, நாட்டின் ஜனநாயகப் பற்றிய பிரச்சினையும் இனங்களுக்கடையே நிலவும் பிரச்சினையும் ஒரே பிரச்சினையின் இரண்டு பக்கங்களாகவன்றி, ஒன்றுக்கொன்று வித்தியாசமான இரண்டு பிரச் சினைகளாக அவர் கொள்வதாகவே இருக்கின்றது. தமிழ் மக்களின் பொது அப்பிராயமும் அதுவாகவே இருக்க வேண்டும்.

இருந்தாலும், தென்னிலங்கையில் ... பற்றிய கோரிக்கையும் வடக்கிலிருந்து கிளர்ந்தெழும் சிறுபான்மை இன மக்களின் உரிமை பற்றிய கோரிக்கைகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான இரண்டு பிரச்சினைகளன்றி, ஒன்றோடொன்று பின்னப்பட்ட ஒரே பிரச்சினையின் இரண்டு பகுதிகள் மட்டுமேயாகும். இந்தப் பிரச்சினைகள் தென்னிலங்கை சிங்கள மக்களை இன்னொரு வகையிலும் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்த்துக் கொள்ள முடியாது இந்தப் பிரச்சினையை ஏற்றுக்கொண்டு வித்தியாசமான பிரச்சினைகளாகக் கொள்ளும் அணுகுமுறைகளினாலன்றி, ஒரே பிரச்சினையின் இரண்டு பகுதிகளெனப் புரிந்தகொள்ளும் அணுகுமுறைகளினாலேயேயாகும். இந்த இரண்டு இனங்களையும் ஒன்றாக இணைக்கும் திறன் அவ்வாறான அணுகு முறைகளுக்கு மட்டுமே உண்டு.

இலங்கை காலனித்துவ அரசு முறையிலிருந்து முதலாளித்துவ ஜனநாயக அரசியல் முறையொன்றிற்கு மாறியது வரலாற்று ரீதியிலான இயற்கை தாக்கங்களின் காரணமாக அல்லது அரசியல் தெளிவின் காரணமாகப் பெற்றுக்கொண்ட தாக்கங்களின் காரணமாகவோ அல்ல. ஜனநாயக அரசியல் முறை, முதலாளித்துவம் இலங்கைக்கு அறிமுகப்படுத்திய ஆங்கிலேயர்களால் அனுதாபகரமாக வழங்கப்பட்ட பரிசொன்றாகவே இருந்தது. மேலெழுந்து கொண்டிருந்த புதிய முதலாளித்துவ சமுதாயப் பின்னணியில் சமுதாயம் ஒரு புதிய அரசியல் முறையொன்றினுள் புகுந்து கொண்டாலும், அந்தப் புகுதல் ஏற்படலானது காலனித்துவ சிந்தனையிலிருந்தும் விலகி ஜனநாயகரீதியிலான சிந்தனைகளுக்கு மாறியதன் காரணமாகவல்ல.

பரிசாகக் கிடைத்த புதிய அரசியல் முறையை முன்னெடுத்து செல்வதற்காக இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது மிக முக்கியமானதொன்றாக இருந்த போதிலும், இன்றுவரை அதனை வெற்றி கொள்ள எம்மால் முடியாது போயுள்ளது. சுதந்திரம் அடைந்த போது இனங்களிடையே நிலவிய பிரிவினை மிகவும் சிக்கலான நிலையிலேயே இருந்தன. சிங்களவர்கள் மலைநாட்டுச் சிங்களவர், கரையோரச் சிங்களவர்களெனவும், தமிழர்கள் இலங்கைத் தமிழர்கள் இந்தியத் தமிழர்களெனவும், முஸ்லீம்கள் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் சிங்களப் பிரதேச முஸ்லீம்களெனவும் பிரிந்திருந்தனர். இந்த அனைத்து குழுவினரும் தமக்கான தனித்துவங்களுக்காக வேண்டி முன்நின்றார்களே தவிர, பிற இனத்தவர் எவரும் தமக்கு நெருக்கமான அல்லது சகோதர இனத்தவர்களாக கொள்ளும் மனப்போக்கொண்டு இருக்கவில்லை. அக்கால கட்டத்தில் மலைநாட்டுச் சிங்கள சமூகத்தின் வளர்ச்சிக்கு கரையோரச் சிங்களவர்களே தடையாக இருந்தனர் எனக் கருதினர் அவர்கள் தமிழர்களை அதிகாரிகளாக கணிக்க, இவர்கள் வித்தியாசமான தமது தனித்துவங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சமஷ்டி முறையொன்றை வேண்டி நின்ற முதல் இனக் குழுவினர் இவர்களாகவே இருந்தனர்.

தமிழ் சிங்கள முஸ்லிம் இனத்தவர்களின் வெவ்வேறான இனத்துவ தனித்துவங்களை பாதுகாத்துக்கொடுக்கும் முறையொன்றில் ஐக்கிய இலங்கையர்களாக ஓர் இனமொன்றை உருவாக்கிக் கொள்ள முடியாமல் போன நிலைமைக்கு சிங்களத் தேசியத் தலைவர்களின் ஜனநாயகப் போக்கற்ற சிந்தனைப் போக்குகள் மட்டுமல்லது தமிழ் முஸ்லீம் தலைவர்களின் ஜனநாயக முறையற்ற குறுகிய போக்குகளும் காரணங்களாக இருந்தன. பலம் கொண்ட சுதந்திர மடியில் தவழ்ந்து வளர்ந்த தலைவர்களாததால் சுதந்திரத்தின் மூலம் பெரும் பிரயோசனங்களை இன அடைப்படையில் பங்கு வைத்துக் கொள்வதற்காக இந்த எல்லாத் தலைவர்களும் ஆங்கிலேயர்களிடம் கோள் கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர்.

இக்கால கட்டத்தில் இதற்கு வித்தியாசமானதாக பரந்துபட்ட கொள்கையின் அடிப்படையில் செயற்பட்ட ஒரே அரசியல் அமைப்பாகச் செயற்பட்டது யாழ்ப்பான இளைஞர் பேரவை மாத்திரமேயாகும். தென்னிலங்கை சிங்கள சமுதாயத்தில் அவ்வாறானதொரு அமைப்பு இல்லாமலிருந்த போதிலும், அவ்வாறான சிந்தனைகளுடன் கூடிய

# எழுச்சியுறும் மலையகம்

போராட்டங்களின் மூலம்தான் விடுதலையுணர்வு புடம்போடப்படுகிறது. போராட்டங்களினூடாக செப்பனிடப்பட்டு உருப்பெற்றதே மலையக தமிழ் தேசம். அடக்குமுறைகள் கிளர்ச்சிப் போராட்டங் கள் மீண்டும் அடக்குமுறைகள் மீண்டும் எழுச்சி .... இதுதான் மலையகத்தின் வரலாறு.

வீரம்செறிந்த இத்தேசம், சூழவுள்ள சிங்கள இனவெறி அச்சுறுத்தலையும், சிங்கள பாசிச அரச இயந்திரத்தின் அடக்குமுறைகளையும் துச்சமெனக் கொண்டு இம் றயும் வீறுகொண்டெழுந்தது. பிந்துனுவெவ புனர்வாழ்வு மையத்தில் நடைபெற்ற மானுட விரோத குரூரத்தை எதிர்த்து தமது கோபாவேசத்தை வெளிப்படுத்தியும் வளர்ந்து வரும் சிங்கள பாசிசத்தை உலகின் முன் தோலுரித்துக் காட்டியதாகவும் இவ்வெழுச்சி அமைந்தது.

தமது பிரதேசத்தில் நடைபெற்ற இன அச்சுறுத்தல், தமது தேசத்து இளைஞன் படுகொலை செய்யப்பட்டமை, புனர்வாழ்வெனும் பெயரில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஈழத்தமிழ் இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வெறித்தனத்தினை கண்டித்தல் என ஒருசேர இப்போராட்டம் பன்முக எதிர்ப்பைக் கொண்டிருந்தது. அரச வன்முறையினாலும், சிங்கள இனவெறி காடைத்தனத்தினாலும் நசுக்கப்பட்டாலும் இவ்வெழுச்சியின் அரசியல் கனதி அளப்பரியதாகும். இது சிங்கள அரசை ஒரு உலுப்பு உலுப்பித்தான் விட்டது.

மலையக தமிழ் தேசத்தின் கொந்தளிப்புக் கண்டு சிங்கள அரசு அஞ்சுகிறது. எவ்வழியிலாவது இத்தேசத்தின் துடிப்பான போர்க்குணாம்சத்தை நசுக்கி வைப்பதிலேயே அதன் வன்ம சிந்தனைகள் மையங்கொண்டுள்ளன. 40களில் உழைக்கும் வர்க்க அடையாளத்துடன் மலையக தேசம் இலங்கை அரசியலில் ஆளுமை செலுத்த தொடங்கியதை கண்டுகொண்ட அன்றைய டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான சிங்கள அரசு, குடியுரிமையையும் பிரஜாவுரிமையையும் பறித்ததன் மூலம் அத்தேசத்தின் அரசியல் ஆன்மாவை அறுத்தெறிந்து, தேசிய இருப்பை சிதறடித்தது.

திட்டமிட்ட தேசிய அடக்குமுறைகளையும், அழித்தொழிப்புகளையும் கடந்து, மலையகத் தேசம் உயிர்த்தது. தம்மீது ஏவப்பட்டுவரும் அனைத்து வடிவங்களிலுமான சிங்கள வெறியாட்டங்களையும் எதிர்கொண்டு, அதற்கெதிராக தன்னை தகவமைக்கத் தொடங்கியது. இம்முறை சிங்கள பாசிச குரூரத்திற்கு எதிராக தனது தேசிய அடையாளத்துடன் ஆக்ரோஷமாக ஆர்ப்பரித்து வெளிப்பட்ட மலையக எழுச்சியை கண்டு அஞ்சிய சிங்கள அரசு, மீளவும் 48 இன் பிரஜாவுரிமைச் சட்டத்தினையொத்த "சட்டவழிப்பட்ட" அடிமைப்படுத்தலினூடாக முழு மலையக மக்களையும் அடக்கிவைத்திட எத்தனிக்கிறது.

சிங்கள இனவாத கண்களுக்கு மலையகம் என்பது ஒரு "அடிமை" சமூகமாகவே தெரிகிறது. எனவே புதிது புதிதாக அடிமைத்தனமான அடையாளங்களை மலையகத்தின் மீது திணித்து தமது சிங்கள தேச பொருளாதாரத்திற்கு அடிமை உழைப்பை வழங்கிவிடும் மக்கள் பிரிவாக மலையக தேசத்தை தொடர்ந்தும் கட்டிப்போட்டு வைத்திருக்க முயல்கிறது. இந்த அதிகாரத்துவ ஆக்கிரமிப்பின் வெளிப்பாடுதான் மலையகத் தமிழருக்கு தனியான வதிவிட அடையாள அட்டை வழங்கிட வேண்டும் எனும் சிங்கள அரசின் கபடத் திட்டம்.

70களில் சிறிமாவோ ஆட்சியில் மலையகத் தமிழரை குடும்பங்களைத் துண்டாடி சுதந் சுதர கப்பலில் ஏற்றி நாடுகடத்தியும், தோட்டங்களைவிட்டு துரத்தியடிப்பதிலும் முன்நின்று செயற்பட்ட அதே டி.மு.ஜயரத்ன தான் இம்முறையும் இந்த அநாகரீகமான வதிவிட அடையாள அட்டைத் திட்டத்தை அமுலாக்குவதில் முன்கையெடுத்து செயற்படும் இனவெறியன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலையகத் தமிழர் மீதான சிங்கள பாசிச அரசின் அனைத்து விதமான அடக்குமுறைகளையும், அழித்தொழிப்புகளையும் இந்திய அரசு வெளியில் போலிக்கண்ணீர் வடித்துக்கொண்டு உள்ளே மறைமுகமாக வரவேற்கிறது. 48இல் டி.எஸ் சேனநாயக்க அரசினால் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதை நேரு அரசாங்கம் ஏற்றுக்கொண்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. அதற்குப் பின்னர் மத்தியில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் சிங்கள அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் விதமாக மலையகத் தமிழரை நாடு கடத்தும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டு மலையக தேச இருப்பை சிதறடிக்கும் காரியங்களில் பங்கேற்றன.

இதோ, இம்முறை எத்தனை குரூரமான வெறியாட்டத்தை மலையகத் தமிழர் மீது சிங்கள அரசு மேற்கொண்டுள்ளது. அது பற்றி இந்திய மைய அரசு ஏதாகிலும் ஒரு கண்டனம் விடுத்ததா? தமிழீழ விடுதலைப்போராளிகள் சிங்கள அரசிற்கெதிராக சிறுதாக்குதல் நடாத்தினாலும் "பயங்கரவாத" கூப்பாடுபோடும் இந்த ஆதிக்கச்சதி, தமிழரின் இரத்தத்தால் மலையகப் பிரதேசம் நனைந்து சிவந்தபோது அப்படி எந்த சம்பவமுமே நடவாததுபோல் கண்களை மூடிக்கொண்டுள்ளது.

மலையகத் தமிழரை அடக்கி வைத்திருப்பதில் அப்படி என்ன நன்மைகள் இந்தியாவுக்குண்டு? இன்று மலையகத்தின் பெரும்பாலான தோட்டங்களை இந்திய முதலீட்டு நிறுவனங்கள் உடமைகொண்டுள்ளன. மலையக தோட்டங்களின் பெருமளவு செல்வங்களை சிங்கள அரசின் துணைகொண்டு இந்திய அதிகார வர்க்கம் அபகரித்து வருகிறது. தமிழகத்தின் தேயிலைத்தோட்டத் தொழிலாளரின் போராட்டங்களை காட்டுமிராண்டித் தனமாக நசுக்கியழிக்கும் இந்திய அரசு, மலையகத் தமிழரையும் அவ்வாறே அடக்கி வைத்திருப்பதன் மூலம் இந்திய முதலீட்டு நிறுவனங்களின் நலன்களைப் பாதுகாக்க விளைகிறது.

அத்துடன், மலையகத் தமிழரசின் பிரஜாவுரிமை "நாடற்ற இந்தியர்" பிரச்சினை சார்ந்து இந்திய அரசுக்கு சிறிலங்காவின் அரசியலில் தலையீடு செய்வதற்கான அதிகாரம் ஒன்று இருந்துவருகிறது. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி தேவைக்கேற்ப சிறிலங்கா அரசுக்கு அழுத்தங்களை கொடுப்பது இந்தியாவின் நோக்கம். மலையக தமிழரின் அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படாதிருப்பதில் இந்தியாவின் பிராந்திய ஆதிக்க நலன்களும் பின்னிக்கிடப்பது கவனிக்கத்தக்கது.மலையக தமிழ் தேசத்தை உரிமைகளற்ற அடிமைச் சமூகமாக அடக்கி மிதித்து வைத்திருப்பதன் பின்னணியில் செயற்படும் இந்திய அரசின் சுயரூபம் தோலுரிக்கப்பட்டு வருகிறது. தமது எதிரியாக செயற்படும் இந்திய அரசை மலையக தமிழர்கள் இனிமேலும் நம்பப்போவதில்லை.

அது மாத்திரமல்ல, மலையகம் கொந்தளித்துக் கொண்டிருந்த போது தமிழகத்தில் எந்த சலனங்களும் இல்லை. மலையகத்திற்கும் தமிழகத்திற்குமான தொப்புழ்க் கொடி உறவென்பது முற்றுப்பெற்ற ஒரு வரலாறு. மலையக தேசம் தானே தனது கரங்களின் வலிமையில் உருவாக்கிய மலையக மண்ணில் தனது வேர்களை பாய்ச்சி புதிய வரலாற்றை படைத்துள்ளது.அவ்வகையில் இந்திய அரசு எனும் மாயை மலையகத்தின் இன்றைய யதார்த்தத்தில் கடந்த கால கனவுகளாக இருப்பது கூட மலையகத்திமிழரின் அரசியல்' எதிர்காலத்திற்கு ஆபத்தானதாகும். மலையகம் மண்ணில்தான் படைத்திருக்கும் தனது வரலாற்றிலிருந்து தான் மலையகம் தன்னை அடையாளம் காண வேண்டும். இதுதான் மலையக தேசத்திற்கு வலிமை.

சொந்த போராட்ட பலத்தில் மலையக தேசம் தனது விடுதலையை வென்றுகொள்வதற்கு அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கும் தார்மீகக் கடமை ஈழத்தமிழரான நமக்குண்டு. இன்று ஈழத்தமிழரான எமது தேசிய உரிமைக்காக சர்வதேச மட்டத்திலான அரசியல் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தயாராகியுள்ள நம் தேசமானது, மலையக தமிழ் தேசத்தின் அரசியல் உரிமைகளை உரியமுறையில் பேச்சுவார்த்தை நிழச்சி நிரலில் இடம் பெறச் செய்திட வேண்டும்.

மலையக மக்கள் ஒன்றிணைந்து முன்வைக்கும் அரசியல் கோரிக்கைகளை நாம் ஆதரித்துப்பலப்படுத்த வேண்டும் அவர்களின் அரசியல் தலைவிதியினை தீர்மானிக்கும் உரிமை. சுயநிர்ணய உரிமை முற்றிலும் அம்மக்களுக்கேயுரியதாகும்.

சுபத்திரா



## கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன பார்வையில்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்தது ஏன் என்பதே இப்போது பெரும் பிரச்சினையாகியுள்ளது. அதிசயமான சர்ப்பத்தின், மூளையிலான, மனித இனமொன்றிலிருந்தே புலிகள் இயக்கம் உருப்பெற்றிருப்பதாக கருதிக் கொண்டிருக்கும் இனவாதிகளுக்கு இது ஒன்பதாவது உலக அதிசயமாகவுள்ளது. தமிழ் மக்களின் போராட்டம் நியாயமான காரணங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதல்ல என இந்த இனவாதிகள் கருதுகின்றார்கள். வரலாற்று ரீதியாக நடைபெற்ற தவறுகளைத் தொடர்ந்தும் இவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. அதன் காரணமாக, புலிகள் இயக்கம் உருவாகிய அடிப்படையை விளங்கிக் கொள்ள ஒருபோதும் இவர்களால் முடியாது. அதனால் தான் அவர்கள், புலிகள் இயக்கத்தை அதிசயமான மனித இனமொன்றிலிருந்து தோன்றியதாக எண்ணுகின்றார்கள். ஆனாலும், அரசாங்கம் இதுபோன்ற அர்த்தமற்ற எதனையும் கூறி நழுவிக் கொள்ள முடியாது. அதனால் தான், யுத்தம் பற்றிப் பெரிதாகப் பேசிக் கொண்டிருந்த ரத்னசிறி விக்ரமநாயக்க இது பற்றிய பிரதிபலிப்பொன்றை உடனடியாகத் தெரிவிப்பதாகக் கூறியிருந்தார். அதற்கிணங்க புலிகள் இயக்கத்தின் தந்திரோபாயம் பலித்தது. இப்போது பந்து அரசாங்கத் தரப்பிலேயே உள்ளது. அதனால் அரசாங்கம் அதனை உரிய முறையில் விளையாட வேண்டி இருக்கிறது.

## அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

தமிழ் மக்களிடமிருந்தும் அழுத்தங்கள் வந்ததன் காரணமாகவே விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இந்த யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டனர். இந்த வேளையிலே, தமிழ் மக்களுக்கு முக்கியமான சுயாட்சியொன்றை வழங்க அரசாங்கம் அக்கறை காட்டும் எனத் தமிழ் மக்களில் பலர் நம்புகின்றார்கள். அதனால், அதற்காக அழுத்தங்கள் ஏற்படும் விதத்தில் புலிகள் இயக்கம் நடவடிக்கை எடுத்தால் நல்லது என்ற அழுத்தம் ஏற்பட்டது. இவ்வேளையில், தென்பகுதி இனவாதிகளின் பலம் எத்தகையது என நன்கு வெளிப்பட்டும் இருந்தது. மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டமும் நினைத்த அளவு வெற்றியளிக்கவில்லை. இந்த நத்தார் நேரத்தில் இவ்வளவு பேர் வந்தது கூடப் பெரிய விடயம் என்றே விமல் வீரவங்ச கூறியிருந்தார். ஆனாலும், அவர்களின் கூட்டமோ 13ஆம் திகதியே நடைபெற்றது. அது நத்தார் தினத்துக்கு அவ்வளவு கிட்டிய தினமல்ல. அதனால், கூட்டத்தில் மக்கள் குறைவாக இருந்ததற்கு அந்தக் காரணத்தைக் கூறி மறைக்க முடியாது.

எப்படியும், புலிகள் இயக்கம், அரசாங்கத்தை நம்பி யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதாக எண்ண முடியாது. இப்போது, புலிகளைத் தடை செய்வது பற்றிக் கூக்குரலிடுவதை நிறுத்தி விட்டு, அரசாங்கம் யுத்த நிறுத்தம் பற்றிப் பரிசீலித்துப் பார்க்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அதற்கிணங்க யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்திக் கொண்டு பேச்சுவார்த்தைகளில் இறங்கினால் முதலாவது பிரச்சினையாக வழங்கப்போகும் மாநில அதிகார அலகு எது? என்பதாகும். இப்போதைக்கு, அரசாங்கம் தான் சமர்ப்பித்த (REGIONAL) பிராந்திய அலகு தீர்வுத் திட்டத்தையே இன்னும் சுழற்றி அடிக்கின்றது. அதனைப் புலிகள் இயக்கம் ஏற்றுக் கொள்ளுமா? 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் கூடச் சரிவர உள்ளடக்கப்படாத, இந்தத் தீர்வுத் திட்டங்களுக்குப் பிரபாகரன் மட்டுமன்றிப் பாராளுமன்றக் கட்சிகளும் உடன்படவில்லை என நான் அப்போதே சுட்டிக் காட்டியிருந்தேன். அவ்வாறு, தமிழ்

தொடர்ச்சி 18ம் பக்கம்...



# யுத்த நிறுத்த கோரிக்கையும் இராணுவத்தின் போருக்கான முஸ்தீபும்

விடுதலைப் புலிகள் விடுத்த யுத்த நிறுத்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் அடுத்த கட்டப் போருக்கான முஸ்தீபுகளில் படையினர் இறங்கியுள்ளனர். நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சுக்களை நிபந்தனையற்ற முறையில் நடத்தத் தயாரென இரு தரப்பும் அறிவித்துப் பல நாட்கள் கடந்த நிலையிலும், பேச்சுக்கள் ஆரம்பிக்கும் சூழ்நிலை தென்படுவதாயில்லை. யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்துவதன் மூலம் சில விட்டுக் கொடுப்புகள் மற்றும் நல்லெண்ணச் சூழ்நிலையில் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமெனப் புலிகள் கூறிவந்த போதிலும், பேச்சுக்களுக்காக யுத்தத்தை நிறுத்த முடியாது. பேச்சுக்கள் ஆரம்பமாகி அது சுமுக நிலையில் சென்றால் அது பற்றி ஆலோசிக்கப்படுமென இலங்கை அரசு கூறியுள்ளது. இதனால் பேச்சுக்களில் கலந்து கொள்ளும் இரு தரப்பிற்குமிடையிலுள்ள இடைவெளியைக் குறைக்க முடியாத நிலையில், எப்படிச்சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதென நோர்வேயும் தடுமாறிக் கொண்டிருந்தது. இவ்வேளையில், புலிகள் அறிவித்த ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தமானது மோதல்களைத் தவிர்த்து, சுமுகமானதோர் சூழ்நிலையில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வாய்ப்பொன்றை உருவாக்கியுள்ளதாக நோர்வேயும், பிரிட்டனும் கூறின. ஆனாலும் யுத்தம் ஒரு புறம் தொடர்கையிலேயே பேச்சுக்களும் தொடர வேண்டுமென வற்புறுத்தி வந்த இலங்கை அரசு, அனைவரும் அதிர்ச்சிக்குள்ளாகும் விதத்தில் புலிகளின் யுத்தத்தை நிராகரித்துள்ளது.

முன்னைய காலங்களில் இரு தரப்பிற்குமிடையிலான அவநம்பிக்கைகளும், பரஸ்பர விட்டுக் கொடுப்பின்மையுமே பேச்சுக்களின் போக்கைக் குழப்பி அவை முறிவடையக் காரணமாயிருந்தன. இதனாலேயே சர்வதேசத்தின் அழுத்தத்துடன் மூன்றாந்தரப்பான நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் இந்தப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் முன்முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டன. கடந்த பெப்ரவரி மாதத்தில் புலிகள் தென்மராட்சியினுள் நுழைந்து ஆனையிறவு முகாமைக் கைப்பற்றும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போது, நோர்வேயின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும், மூன்றாந் தரப்பு மத்தியஸ்தருமான நட்வொலிபேக் இந்த முயற்சியில் இறங்கினார். இதற்குப் புலிகள் அப்போதும் ஆதரவு தெரிவித்திருந்தனர். பலம்மிக்க நிலையில், ஆனையிறவு முகாமை அவர்கள் எவ்வேளையிலும் கைபற்றலாமென எதிர் பார்க்கப்பட்ட போது பேச்சுக்களுக்கு அவர்கள் தயாராகவேயிருந்தனர். ஆனையிறவு முகாம் கைப்பற்றப்பட்ட பின்னர், புலிகளின் தலைவரும், ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் விடுத்த செய்திகளில் இதனைத் தெரிவித்திருந்தால் அவர்கள் அன்றும், இன்றும் பேச்சுக்களுக்குத் தயாராயிருக்கின்றார்கள் என்பது தெளிவான விடயமாகும்.

ஆனையிறவைக் கைப்பற்றிய பின்னர் தென்மராட்சியில் பல பகுதிகளையும் கைப்பற்றியவாறு புலிகள் யாழ் நகர் நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கையில், இலங்கை அரசு, நாட்டில் யுத்த நிலைமையைப் பிரகடனம் செய்ததுடன் சர்வதேசத்தின் உதவியையும் அவசரமாக நாடியது. அப்போது, இலங்கை கோரிய இராணுவ உதவியைப் பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் ஏற்றுக்கொண்டு இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கின. சர்வதேசத்தின் இந்த நிலைப்பாட்டால் புலிகள் தங்கள் தாக்குதலை பெரிதும் தணித்த போது, சர்வதேச நாடுகள் வழங்கிய ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட மிக நவீன ரக ஆயுதங்களை வைத்து குடாநாட்டில் படையினர் தங்களை ஓரளவுக்கு ஸ்திரப்படுத்தினர். இந்த நிலையில், தங்கள் தாக்குதலை மீண்டும் புலிகள் ஆரம்பித்த போது நோர்வேயின் விஷேட பிரதிநிதி எரிக் சோல்ஹெய்ம், பிரபாகரனைச் சந்தித்து சமாதானப் பேச்சுக்களில் புலிகளின் பங்களிப்புக் குறித்த உறுதியைப் பெற்றிருந்தார். இதையடுத்து புலிகள் குடாநாட்டில் தாங்கள் ஆரம்பித்த "ஓயாத அலைகள் - 04" தாக்குதலை இடைநிறுத்திய போது, படையினர் தென்மராட்சியில் ஆரம்பித்த "கினிகிர" தாக்குதல் வேகமெடுக்கத் தொடங்கியது. பேச்சுக்களுக்காக யுத்தத்தை நிறுத்தமாட்டோமென அரசு கூறியதுடன், தென்மராட்சியில் அடுத்தடுத்து "கினிகிர" தாக்குதலை நடத்தி இன்று அத்தாக்குதலை உச்ச நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

யுத்த நிலைமை மோசமடைந்து வருகையில், புலிகளும் தங்கள் தாக்குதலை இடைநிறுத்தியிருக்கும் போது, படையினர் தென்மாராட்சியில் தாக்குதலைத் தீவிரப்படுத்தியதால் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்பே அரசு - புலிகளுக்கிடையிலான விரிசல் கூடிக்கொண்டே செல்கிறது. இதனால் அடுத்து என்ன செய்வதென்று நோர்வே தடுமாறிக் கொண்டிருந்த போது, புலிகளின் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பு வெளியானது. மோசமடைந்துகொண்டிருந்த சூழ்நிலையை சீர்செய்ய இதுவொரு நல்ல சந்தர்ப்பமென சர்வதேச நாடுகள் கூறவே, அரசும் சாதகமானதோர் பதிலைத் தெரிவிக்குமென எதிர்பார்த்திருந்தபோது, போர் நிறுத்த அழைப்பை நிராகரித்து அனைவரையும் இலங்கை அரசு பேரதிர்ச்சிக்குள்ளாகியது. 1995ல் யாழ், குடாநாட்டைக் கைப்பற்றப் படையினர் மேற்கொண்ட பாரிய நடவடிக்கையால் ஐந்து லட்சம் மக்கள் ஒரிரு தினங்களில் இடம் பெயர்ந்த போது கைகட்டி மௌனம் சாதித்த சர்வதேசம், புலிகள் அதே குடாநாட்டை மீளக்கைப்பற்றுவதற்காகப் பாரிய தாக்குதலைத் தொடுத்த போது, 30,000 படையினரைக் காக்க உதவிக்கு விரைந்தது. ஆனால் இன்று சமாதானப் பேச்சுக்களுக்கான நல்லதோர் சூழ்நிலையை ஏற்படுத்த விடுக்கப்பட்ட போர் நிறுத்த அழைப்பை நிராகரித்ததன் மூலம், சர்வதேச நாடுகள் இவ்விடயத்தில் இலங்கை அரசு விரும்பும் போது மட்டுமே அவை தலையிடலாமென உணர்த்தியுள்ளது. அரசின் தற்போதைய நிலைப்பாட்டினால் அன்று இலங்கை அரசு ஆபத்தான நிலையிலிருந்த போது உதவிய நாடுகள், இன்று சமாதானத்தின் விரோதிகள் போல் தோற்றம் கொடுக்கின்றனர். அத்துடன் இலங்கையில் நிலையானதோர் சமாதானத்தை ஏற்படுத்த விரும்பாத, வெறுமனே ஆயுத வியாபாரிகளாகவே இவர்கள் ஏனையவர்களால் பார்க்கப்படுகின்றனர்.

தங்களின் போர் நிறுத்த அழைப்பை அரசு நிராகரித்திருப்பது கவலைக்குரிய விடயமெனக் கூறியுள்ள புலிகள், அரசு இதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமெனவும் கோரியுள்ளனர். அதேநேரம் தாங்கள் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கும் போது படையினர் தாக்குதல் நடத்தினால் தற்காப்புச் சமரில் ஈடுபடுவோமெனவும் கூறியுள்ளனர். பேச்சுக்களுக்கான சாத்தியம் குறைவாகவே தென்படும் நிலையில், பேச்சுக்களுக்கு முன்னர் குடாநாட்டில் தங்கள் நிலைகளை ஸ்திரப்படுத்தும் தாக்குதல்களில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். வெளிநாடுகளிலிருந்து அரச கொள்வனவு செய்த இராணுவ தளபாடங்களில் ஐம்பது வீதமானவை வந்து சேர்ந்த நிலையில், தங்கள் கை ஓங்கி வருவதாகக் கருதும் படையினர்,



களநிலைவரம்

கௌதமன்

கொள் வனவு செய்த ஆயுத தளபாடங்களில் ஐந்து வீதமளவிற்குப் புலிகளும் கொள்வனவு செய்து விட்டால் நிலைமைகள் எப்படிப் போகும் எனவும் சில தரப்புக்கள் சுட்டிக் காட்டுகின்றன. மிகக் குறைந்தளவு ஆயுத, ஆட்பலத்துடனே படையினரை கதிகலங்க வைக்கும் புலிகள், மேலும் சில முக்கிய படைக் கலங்களைப் பெறுவார்களாயின் இராணுவச் சமநிலை மேலும் மாற்றமடையும் சூழ்நிலையும் ஏற்படலாம். படையினரும் இதனை நன்குணர்ந்துள்ளனர். எனினும் சர்வதேசத்தின் வேண்டுகோளுக்கு அவர்கள் மதிப்பளிப்பது போல் இலங்கை அரசு மதிப்பளிப்பதாகத் தெரியவில்லை. இந்த சந்தர்ப்பத்தை இரு தரப்பும் நன்கு பயன்படுத்த வேண்டுமெனச் சர்வதேச சமூகம் விரும்புகிறது. புலிகளின் போர் நிறுத்த அழைப்பு நிராகரிக்கப்பட்ட நிலையில், படையினர் மேற்கொள்ளும் பாரிய தாக்குதல்கள், யுத்த நிறுத்தத்திலிருந்து அவர்களை விலகச் செய்து விட்டால் நிலைமை மோசமாகிவிடலாம்.

சர்வதேச அனுசரணையுடனான பேச்சுக்களுக்கான முயற்சிகளே இழுபறிபடும் போது புலிகளின் போர்நிறுத்த அழைப்பும் நிராகரிக்கப்பட்டு மீண்டும் கடும் மோதல்கள் வெடித்தால், அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான இடைவெளி மேலும் அதிகரித்து விடும். எனவே, இந்தப் போர் நிறுத்த அழைப்புக்கு அரசையும் இணங்கச் செய்வதே நோர்வேயின் தற்போதைய கடமையாகும். இந்த ஒரு தலைப்பட்ச போர் நிறுத்த அழைப்பு மூலம் புலிகள் சர்வதேச சமூகத்தின் கவனத்தை தம்வசப்படுத்திவிட்டனர். இலங்கை அரசும் இதனை ஒப்புக் கொண்டுள்ளது.

யுத்த முனைத் தந்திர நடவடிக்கை போல் அரசியல் ரீதியிலும் புலிகள் தந்திரமாகக் காய்நகர்த்தத் தொடங்கியது அரசுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.இதனால்தான் சர்வதேச பிரசாரப் போரில் தோற்றாலும், உள்நாட்டு தரைப்போரில் வெற்றி பெறுவதே தங்கள் நோக்கமெனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை கூறியுள்ளார். புதிதாக இராணுவத்திற்கு 15,000 பேரைத் திரட்டும் முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன. வெறுமனே 2,500 பேர் வரையே சேர்ந்துள்ளனர். இதைவிட யுத்தமுனையிலிருந்து தப்பியோடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதால், அரசு பாரிய ஆட்பற்றாக் குறையையும் எதிர்நோக்குகிறது. புதிதாகக் கொள்வனவு செய்த ஆயுதங்களை நம்பியே களமுனையில் நம்பிக்கை வைத்திருக்கும் படையினர், அதனை பயன்படுத்திப் பார்த்துவிட ஒரு சந்தர்ப்பத்தை எதிர்நோக்குகிறார்கள் போலும். அதுவும் வெற்றியளிக்காவிடின் அடுத்த கட்டம் என்னவென்பது தான் அரசு எதிர்நோக்கப் போகும் பெரும் பிரச்சினையாகும்.

# தொடரும் தடைகளால் பாதிப்புக்குள்ளாகும் யாழ். குடா நாட்டு மக்கள்

இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை வழங்குவதில் அரச அதிகாரிகள் காட்டிய அசிரத்தையால் குடாநாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் பட்ட கஷ்டங்களை சில வாரங்களுக்கு முன் இதே பத்தியில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இப்போது அரசாங்கம் குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

750 ரூபாவுக்கு மேற்பட்ட மாத வருமானத்தைப் பெறுவோர் மற்றும் விவசாய, வர்த்தக முயற்சிகளில் ஈடுபடுவோர், மாத ஊதியம் பெறும் அரச தனியார் ஊழியர்களின் குடும்பங்கள், வாகனங்கள், தொலைபேசிகளை வைத்திருப்போர் மற்றும் மீன்பிடி வள்ளங்கள் படகுகளை வைத்திருப்போர் நிவாரணம் பெற முடியாது என அரச செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

அரசு புதிய விதிமுறைகளை அமுல் செய்வதன் மூலமாக நிவாரணம் பெறுவோரில் சுமார் 65 சதவீதத்தினர் நிவாரணங்களை இழக்கப் போகின்றனர். தென்மராட்சியில் அனைத்தையும் இழந்து இடம் பெயர்ந்திருப்போரா கூட இன்னும் சில மாதங்களே நிவாரணத்தைப் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடரும் மோதல்கள், ஓயாத இடப்பெயர்வுகள், தொழிலின்மை, தொழில் மூல வளங்களின் இழப்பு, பாதுகாப்புக் கெடுபிடிகள் என்று வருமானத்தை ஈட்டிக் கொள்ள வாய்ப்புக்களைக் குடா நாட்டு மக்கள் இழந்துள்ள நிலையிலும், இங்கு பொருட்களின் விலை பெருமளவில் உயர்ந்து வாழ்க்கைச் செலவு உயர்ந்து போயுள்ள நிலையில், அரசு வழங்கும் நிவாரணத்தை நம்பி சீவியம் செய்த மக்கள் இப்போது பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

750 ரூபாவுக்குள் வருமானமுடையவர்களே நிவாரணம் பெறத் தகுதியானவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளதும், வள்ளங்கள், படகுகளை கடலில் இறக்கி மீன்பிடிக்க அனுமதியில்லாத நிலையில் அவற்றை வைத்திருப்போருக்கு நிவாரணம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதும் ஒட்டு மொத்தத்தில் குடாநாடடு மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை கிட்டத்தட்ட முற்றாகவே வெட்ட முனையும் செயலாகவே தெரிகின்றது.

அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டின் மூலமாக தற்போது மாதாந்தம் சுமார் 10 கோடி ரூபா செலவிடப்படும் நிவாரண விநியோகத்தை நிறுத்தி அப்பணத்தை பாதுகாப்புச் செலவினத்துக்கு ஒதுக்கும் முயற்சியாகவே தெரிகின்றது. இதே நிலையில், வட கிழக்கு புனரமைப்புக்கென வெளிநாட்டு உதவிகளை ஜனாதிபதி அண்மையில் கோரியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளிடம் இருந்து நிவாரணத்துக்காக வழங்கப்படும் பணத்தை இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்காமல் அதை வேறு தேவைக்குப் பயன்படுத்த முனையும் செயல் குறித்து அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ்க் கட்சிகள் வாய்கூடத்திறக்கவில்லை. வட-கிழக்குத் தமிழ் விவகார, புனரமைப்பு அமைச்சராகத் தமிழர் ஒருவரே பதவிவகிக்கும் நிலையிலும் கூடத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தடுத்து நிறுத்த முடியாதிருப்பது யாருடைய கையாலாகாத்தனம்? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அண்மையில் பொதுத்தேர்தல் பிரச்சாரத்தின் போது இரு தமிழ் கட்சிகள், நிவாரண விநியோகத்தைத் தமக்கு வாக்களிக்காது விட்டால் இழக்க நேரிடும் எனக் கூறிக் கொண்டதாகச் சர்ச்சைகள் நிலவியிருந்தன. தற்போது நிவாரண மீளாய்வுக்குழுவில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் பங்கேற்க இருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றதும், பெருமளவு மக்களுக்கு நிவாரணம் வெட்டப்பட்டு இருப்பதும் அரசியல் பழிவாங்கல்களோ என்ற கருத்தை உருவாக்கியிருக்கின்றன.

இவ்வாறு இருக்க, குடாநாட்டில் மீனவர்கள் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகளும் தொடர்ந்தும் அதிகரித்தபடி உள்ளன. ஒரு காலத்தில் தென் பகுதிக்கு பெருமளவு மீன்களை அனுப்பிக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்திற்கு இன்று கப்பலில் கருவாடு எடுத்து வரும் நிலை உருவாகியிருக்கிறது. படையினரின் பூரணமான கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளில் மீனவர்கள் சுதந்திரமான முறையில் மீன்பிடிக்க அனுமதிக்கப்படுவதில்லை.

வடமராட்சி வடக்கு கடலில் காலை 6 மணி முதல் 10 மணி வரையே அதுவும், 500 மீற்றர் தூரத்துக்குள் மீன்பிடிக்கவே படையினர் அனுமதி அளித்துள்ளனர். 500 மீ. தூரத்திற்குள் இராணுவத்தினர் அனுமதித்தாலும் 500 மீற்றர் தூரத்துக்கப்பால் செல்லும் மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்திவருகின்றனர். இவ்வாறான சம்பவங்களில் பல மீனவர்கள் காயமடையவும் நேரிடுகின்றது.

காலை 6 மணிமுதல் 10 மணிவரை தொழில் செய்ய வசதியில்லாததொரு காலம் எனவும், இதன் மூலம் போதிய வருமானத்தைப் பெற முடியாதிருப்பதாகவும் மீனவர்கள் புகார் செய்கின்றனர்.

இதேசமயம் யாழ். குடாக் கடல் பரப்பில் மீனவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள 1கி.மீ. தூரத்துக்குள் மீன்களே இருப்பதில்லையாம். சுமார் 1 முதல் 2 அடி ஆழமுள்ள இக்கடலில் எப்படி மீன்பிடிக்க முடியும் எனக் கேள்வி எழுப்பும் மீனவர்கள், இதனால் தாம் சிலவேளைகளில் படையினரின் எல்லைக் கோடுகளை மீறிச் செல்வதாகவும் இதுவே பலசந்தர்ப்பங்களில் ஆபத்தானதாக முடிந்து விடுவதாகவும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

படையினரின் எல்லைகளை மீறிச் செல்லும் மீனவர்களின் பாஸ்களை பறிமுதல் செய்து அவர்களின் தொழில் உபகரணங்களையும் எடுத்துச் சென்று விடுகின்றனர். இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள், மற்றும் உபகரணங்கள் மீளவும் ஒப்படைக்கப்படவில்லை. இதற்குப் படையினர் தாங்கள் கடலுக்குள் தான் போட்டோம் என்று சொல்லி விடுகிறார்களாம்.

இதே வேளை மீனவர்கள் இப்பகுதியில் தொழிலுக்காக நாட்டும் கம்புகள், பைப்புகளைக் கூடப் படையினர்



எடுத்துச் சென்று விடுவதாகவும், இவற்றைத் தீவுப் பகுதி மீனவர்களுக்கு கடற்படையினர் விற்றுள்ளதாகவும் கூட அண்மையில் நடந்த கூட்டமொன்றில் மீனவர்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்க காட்டியிருந்தனர்.

குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு

**அரவின்**

நினைத்த நேரத்தில் அனுமதிப்பதும் பின்னர் நீண்ட நாள்கள் அனுமதிக்கப்படாமலிருப்பதும் தொடர்கதையாகவே போய்விட்டது. இப்போது கடலுக்குச் செல்லும் மீனவர்கள் உணவுப் பொதிகளை எடுத்துச் செல்லக் கூடாது என்றும் படையினர் அறிவித்துள்ளனர். அதைவிட கடலில் இறங்கும் மீனவர்கள் உள்ளாடையுடன் மட்டுமே செல்ல வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இவ்வாறான உத்தரவு சில காலம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததும் பின்னர் எழுந்த எதிர்ப்புக்களையடுத்து இந் நடைமுறையைப் படையினர் தளர்த்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

மீனவர்களைப் பொறுத்தவரையில் சுயாதீனமாக கடலில் இறங்கக் கூடிய அனுமதி படையினரால் இதுவரை வழங்கப்படாததால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அரச படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பிரதேசங்களில் இல்லாத நடைமுறைகளைப் படையினர் குடாநாட்டில் மட்டுமே செயற்படுத்தி வருகின்றனர்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக மீனவர் சங்கங்கள் அரசியல் கட்சிப் பிரமுகர்கள், தலைவர்களுடன் அடிக்கடி பேச்சு நடத்தியுள்ள போதும், எந்த விதமான சாதகமான முடிவுகளையும் அவர்களால் பெற்றுக் கொள்ள முடியாதிருக்கிறது. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது அலுவலகத்துக்கு மீனவர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பிரச்சினைகளைக் கேட்டறிந்த போதும், அதை நிவர்த்தி செய்யக் கூடிய வழிவகைகளை அவர் செய்யவும் இல்லை. செய்யவும் முடியாது.

ஏனென்றால், இந்த விடயம் முற்றிலும் படையினரின் கைகளில் உள்ள விவகாரமாகும். மீனவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொள்ள மீன்பிடித்துறை பிரதி அமைச்சர் யாழ்ப்பாணம் வரத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அமைச்சர் வந்தால் கூட படையினர் தமது முடிவுகளை மாற்றிக் கொள்ளா விடில் எந்தப் பிரயோசனமும் கிடையாது. அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ்க்கட்சிகள் ஒரு புறம் இவ்வாறான தடைகளை அனுமதிக்கும் அவசர காலச்சட்டத்தை ஆதரித்துக் கொண்டே மறுபுறத்தில் மீனவர்களின் பிரச்சினைகளை நிவர்த்திசெய்யவென்று குறைகளை கேட்டறிய முற்படுவது எந்தவகையிலும் பொருத்தப்பாடானதாகத் தெரியவில்லை.

இதேவேளை சமீப காலங்களில் மேலதிகமாக வள்ளங்கள், படகுகளை, கடலில் இறக்க அனுமதி இல்லாத நிலையில், அரசாங்கம் இவர்களின் நிவாரணங்களை வெட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கிறது. மீனவர்கள் தமக்கு நிவாரணம் தேவையில்லை என்று தான் சொல்கிறார்கள். தம்மைச் சுதந்திரமாக தொழில் செய்ய அனுமதித்தால் தாமே நிவாரணம் வழங்கத் தயார் என்றும் இவர்கள் கூறியுள்ளனர்.

இவை இவ்வாறிருக்கும் போது, குடாநாட்டு மீனவர்கள் அதற்குமாறாக மீன்பிடித்தலுக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாவிட்டாலும் மீனவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கவாவது- புதிய விதிமுறைகளைத் தளர்த்த அரசுடன் இணைந்து செயற்படும் தமிழ்க் கட்சிகள் முன்வராதிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிச்சை புகினும் யுத்தம் நன்றே

இந்து சமுத்திரத்தின் முத்து. படித்தவர் வீதாசாரம் கூடிய நாடு, உலகின் முதலாவது பெண் பிரதமரை உருவாக்கிய நாடு. தாயும் மகளும் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் ஒரே நேரத்தில் பதவி வகித்த நாடு என பல சாதனைகளை கொண்ட இலங்கையின் இன்னொரு சாதனை தான் சந்திரிகா அரசு நடத்தும் சமாதானத்திற்கான யுத்தம்.

தம் சொந்தநாட்டின் இன்னொரு பகுதி மீது தரை, கடல், ஆகாய மார்க்கமாக மூர்க்கத்தனமான தாக்குதலை, ஏதோ எதிரி நாட்டின் மீது நாடாத்துவது போல் நடாத்தி தன் சொந்தமக்களையே அகதிகளாக்கி, அனாதைகளாக்கி, ஊனமுற்றவர்களாக்கி ஒன்றும் இல்லாதவர்களாக்கும் இந்த வீரதீர செயலுக்கு சந்திரிகா அரசு வைத்த அலங்காரப் பெயர் தான் சமாதானத்திற்கான யுத்தம்.

உலகின் எந்தப் பகுதியிலும் காணமுடியாத ஒரு சிறப்பு அம்சம்தான் சமாதானத்தை ஏற்படுத்த என யுத்தம் புரிவது. பேச்சுவார்த்தைகள் மூலமும் விட்டுக் கொடுப்புகள் மூலமும் தான் சமாதானம் ஏற்பட்டிருக்கின்றன என்பதே வரலாறு. உலகின் எந்தப் பகுதியிலும் கூட யுத்தத்தில் சமாதானம் ஏற்பட்டதாக வரலாறு இல்லை. ஒன்றில் யுத்த வெற்றியால் வென்றவர் சமாதானம் அடைந்திருக்கலாம்; அல்லது யுத்த தோல்வியால் தோற்றவர் சமாதானத்திற்கு சென்றிருக்கலாம். ஆனால் இருவரதும் உள்ளார்ந்த யுத்த சூழல் நீறுபூத்த நெருப்பாகவே இருந்து கொண்டிருக்கிறது.

ஆக யுத்தவெற்றியால் சமாதானத்தை ஏற்படுத்த தலைகீழ் பிரயத்தனம் செய்யும் சந்திரிகா அரசு யுத்தச் சுமையை தாங்க முடியாமல் உதவி வழங்கும் நாடுகளை நோக்கி தட்டேந்தி பிச்சை கேட்கும் தரம் கெட்ட நிலைக்கு தள்ளப்பட்டது தான் கண்ட மிச்சம் ஆகும்.

நாட்டின் அபிவிருத்திக்கு அடிப்படையான கல்வி, வீட்டு வசதி நீர்ப்பாசன வசதி, போக்குவரத்து வசதிகள், வேலைவாய்ப்புக்கள் என ஏற்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றையும் இடைநிறுத்திவிட்டு, வரிந்துகட்டிக் கொண்டு யுத்த முழக்கமிட்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கக் கூடிய உள்நாட்டு பிரச்சினையை யுத்தத்தால் அடக்க முனைந்ததால் தான் இன்று உலக நாடுகளை நோக்கி பிச்சை புகும் நிலை.

சந்திரிகா அம்மையார் இம்முறை தன் இணைப்பிரதிநிதி அமைச்சர்களுடன் மேலதிகமாக அமைச்சர்கள் மேலதிகாரிகள் என ஒரு படையணியுடன் பாரிசில் முகாமிட்டார். எப்பாடுபட்டாவது தட்டை நிரப்பமுயன்றும் முழுமையான வெற்றி கிட்டாவிட்டாலும் அவர்களின் மூர்க்கத்தனமான யுத்தவெறி மட்டும் தீரவில்லை.

யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பித்து, இனப் பிரச்சினைக்கு நிரந்தரதீர்வு ஏற்படுத்தப்படல் வேண்டும் என்ற உதவி வழங்கும் நாடுகளின் கோரிக்கைகளுக்கு அம்மையார் கூட்டணி ஆமாம் போட்டு தட்டை நிரப்ப முயன்று கொண்டிருக்க இங்கே பிரதமர் தன்பங்கிற்கு யுத்தத்தின் தேவையை வலியுறுத்தி குரல் எழுப்பியதுடன், உலக நாடுகளின் உள்ளக் கிடக்கையை வெளிப்படையாக்கியுள்ளார்.

"உலக நாடுகள் இலங்கையில் யுத்தம் நிற்பதை உண்மையில் விரும்பவில்லை. அவர்களின் ஆயுத விற்பனையை தொடர இங்கு யுத்தம் தொடர்வதையே விரும்புவார்கள்" என திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

அவர் அதற்கு மேலும் ஒரு படிமேலே போய் புத்தபிக்குகளிடம் ஒரு வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.



எல்லா பௌத்த விகாராதிபதிகளும் தங்கள் பங்கிற்கு இராணுவத்திற்கு ஆட்களை சேர்க்கும் பணியை ஆரம்பிக்க வேண்டும், பத்தாயிரம் மேலதிக இராணுவம் இருந்தால் பிரபாகரனை பிடிக்கலாம், புலிகளை அழிக்கலாம் என வீர முழக்கம் இட்டுள்ளார்.

புலிகளை தோற்கடிக்கும் வரை பேச்சுவார்த்தைக்கு செல்லக்கூடாது என சிஹல உருமய உறுமியிருக்கிறது. நோர்வே, அமெரிக்க ஏகாதிபத்திய கூட்டுச்சக்தி தான் புலிகளுடன் பேசுமாறு அரசை தூண்டும் செயல்; இது நாட்டை துண்டாடவே வழிகோலும் என ஜே.வி.பி.யும் தன் பங்கிற்கு கூட்டமும், போராட்டமும் நடாத்தியது.

ஆக, அங்கே "அம்மையார் அன்கோ" சமாதான முயற்சிக்கு பிச்சை ஏந்தல் இங்கே யுத்தத்தை தொடரும் வீரப்பிரதாபங்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இம்முறை உதவி வழங்கும் நாடுகள் இந்நாட்டில் தொடரும் யுத்தத்தை காரணம் காட்டி உதவ மறுக்க, "ஐயோ நாம் இம்முறை உங்களிடம் கேட்பது யுத்தத்தை நிறுத்த சமாதானம் முயற்சியை ஏற்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளிற்கே உதவி கோருகிறோம் என அம்மையார் அன்கொம்பனி இரந்துள்ளது. தான், கெஞ்சிக் கூத்தாடி பெற்ற உதவியுடன் அளவைக் கூட பகிரங்கமாக கூறமுடியாத இரண்டும் கெட்டான் நிலையில் இரு பிரதிநிதி அமைச்சர்களும் இருப்பது அதைவிட வேடிக்கை யானது.

கால அவகாசம் விதித்து சமாதான முயற்சியின் முன்னேற்ற கரமான நிகழ்ச்சி நிரலை பார்த்துத்தான் நிதி வழங்கப்படும் என்றும் ஒரு செய்தி. ஆனால் எதைப் பற்றியும் கவலைப்படாத யுத்த அமைச்சர், "நாம் சர்வதேச பிரச்சாரத்தில் தோற்றாலும் உள்நாட்டு யுத்தத்தில் வெற்றி வாகை சூடுவோம் என சூளுரைத்துள்ளார். அனுருத்த அருளிய அந்த வாக்கு தேவ வாக்காகி இன்று புலிகள் ஒரு மாதத்திற்கு கடைப்பிடிக்க உள்ள யுத்த நிறுத்தம் கூட இனிஹிர படை நகர்வு மூலம் கேள்விக் குறியாகியுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு தயார் என புலிகள் அறிவித்த நாள் முதலே அரசும் அதன் அமைச்சர்களும் பலவிதமான அறிக்கைகளை வெளியிட்டு வந்தனர், இவ் அறிக்கைகளில் பெரும்பாலானவை புலிகள் மீதான நம்பிக்கையீனத்தை தெரிவிப்பதாக தோன்றினாலும் உண்மையில் அரசின் விருப்பமின்மையே உள் காரணமாக கொண்டிருந்ததென்பது தெளிவானது.

பலதடவைகள் இனப்பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட மாறி மாறி அரசிற்கு வந்த கட்சிகள், தமிழர் தரப்பு கேட்ட எந்த அடிப்படை கோரிக்கைகளையும் நிறைவேற்றாமல் தட்டிக் கழித்த நிகழ்வே இலங்கையின் இனமோதல் வரலாறாகும்.

கேட்பதை கொடுப்பதல்ல; தாம் கொடுப்பதை ஏற்கும் நிலையில் இருந்தால் தான் அரசிற்கு பேச இயலும்.

**நட்டாமுட்டியன்**

இந்நிலையில் ஆயுத ரீதியான பலமும், சர்வதேச சமூகத்தின் பார்வையும் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளிற்கு வலுவூட்டும். இந்த நேரத்தில், பேச்சுவார்த்தை ஆரம்பித்தால் பேரினவாதிகளின் கூக்குரலுக்கும், குழிபறிப்பிற்கும் ஆழாகாமல் தம்மை தக்கவைக்க வேண்டிய நிலை அரசிற்கு உள்ளது.

ஆட்சி அதிகாரம் நிலைக்க வேண்டுமென்பதற்காக அடைய முடியாத வெற்றியைப் பற்றி கால அவகாசம் குறிப்பிட்டு மூன்று வருடங்களில் வெற்றி நிச்சயம் என மாண்புமிகு பிரதமரே பறை அடித்துள்ளார். யுத்த நிறுத்தம் பற்றிய புலிகளின் அறிவிப்பின் நம்பகத்தன்மையை கேள்விக் குறியாக்கியிருக்கும் பிரதமர் முறையாக அவர்களின் தலைமைப் பீடம் இதனை அறிவிக்கவில்லை எனவும்; வெளிவிவகார அமைச்சரோ பேச்சுவார்த்தை ஆரம் பித்து அதன் சீரான நகர்வின் படி தான் படை நகர்வு தீர்மானிக்கப் படும் என்றும் கூறுகின்றார்.

ஆக யுத்தம் தொடரும்; அழிவுகள் நிகழும், நம்பிக்கையீனம் வளரும் என்பது மட்டுமே சர்வ நிச்சயம்.

புலிகளின் நிதி மூலங்கள் உள்ள இடங்களையெல்லாம் கண்டுபிடித்து தடைசெய்ய ஓடித்திரியும் அரசு, அவர்களின் வளங்களை அற்றுப்போக செய்வதன் மூலம் வெற்றியை நிச்சயமாக்க விளையும் அதே நேரம், உள்நாட்டு யுத்தத்தால் வீணாக்கப்படும் கோடிக்கணக்கான பணம் நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் தடையாக இருப்பதைப் பற்றி ஏனோ சிந்திப்பதில்லை. முதலையும், மூர்க்கனும் இந்த அரசும் இந்த விடயத்தில் ஒன்றாகவே காணப்படுகின்றனர்.

நாட்டின அபிவிருத்தி பற்றியோ, மக்களின் நல்வாழ்வு பற்றியோ எந்தவித கரிசனையுமின்றி வெல்ல முடியாத யுத்தத்தை நடாத்த உதவிவழங்கும் நாடுகளிடம் வசதியான கதைபேசும் அரசும், அம்மையாரும் பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்கத்தான் போர் நிறுத்தத்திற்கு உடனடியாக உடன்படாது கினிஹிரவை முடுக்கி விட்டுள்ளார்கள் என்பது முற்றிலும் உண்மை.

ஏனென்றால் பேச்சுவார்த்தை மேசையில் சமபலத்துடன் பேச அரசு விரும்பவில்லை. குடா நாட்டில் மட்டுமல்ல வடக்கு, கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் கணிசமானதை கைப்பற்றினால் தான் தங்கள் கை ஓங்கும் என அரசு கணக்குப் போடுகிறது.

வாய் நிறைய சமாதானப் பேச்சும், நெஞ்சு நிறைய யுத்த வெறியும் கொண்ட இரட்டைப் போக்கில் தான் அரசு உதவி வழங்கும் நாடுகளிடம் இரக்கப் போயிருக்கிறது. கூடியவரை புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு வராமல் செய்யும் செயலைத்தான் அரசும் அதனை வழிநடத்தும் பேரினவாதிகளும் செய்யப் போகிறார்கள்.

எத்தனை சமாதான புறாக்களை பறக்க விட்டாலும், ஊர் ஊராக கழுதைகளை (தவளம) ஓட்டிச் சென்று இனப்பிரச்சினை பற்றிய கூத்து நடாத்தினாலும், வெண்தாமரைகளை மலரச் செய்தாலும் உலகெங்கும் தம்மை சமாதானத்திற்கான யுத்தம் நடாத்துபவர்களாக காட்டிக் கொண்டாலும் எல்லாமே பிச்சை புகும் நிலை மட்டுமே. மறு பக்கம் அவர்களின் செயல் நிரல் யுத்தத்தினால் கிடைக்கும் வெற்றி பற்றிய கனவேயாகும். அதன் அடிப்படையில்தான் காஷ்மீர் பிரச்சினையில் ஒரு தளர்வுப் போக்கைக் கடைப்பிடிப்பதற்கு அவர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகின்றது.

சவுதி அரேபியா போன்ற நாடுகளின் ஆலோசனையை ஏற்று ஆயுள் கைதியாக வைக்கப்பட்டிருந்த அந்நாட்டின் முன்னாள் பிரமர் நவாஸ் ஷெரிப் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நாட்டை விட்டு வெளியேறி சவுதி அரேபியாவில் வசிப்பதற்கு முஷாரப் அனுமதி வழங்கியுள்ளார். ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் அவரது சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதுடன் இருபத்தைந்து வருடங்களுக்கு அரசியலில் ஈடுபடக் கூடாது எனவும் அவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. முஷாரப்பின் மற்றொரு அரசியல் எதிரியான பெனாஸிர் பூட்டோ, ஏற்கனவே லண்டனில் அடைக்கலம் புகுந்திருக்கின்றார். அவர் மீதும் லஞ்சக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. பாகிஸ்தானில் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கக் கூடிய இந்த இரு தலைவர்களும் அஞ்ஞானவாசம் அனுப்பப்பட்டிருப்பது முஷாரப்புக்கு சாதகமான ஒரு பாகிஸ் தானில் அரசியல் போட்டிகளை அவர் இப்போதைக்கு எதிர்கொள்ள வேண்டிய நிலை இல்லை. இதனால் காஷ்மீர் பிரச்சினையை வைத்து அரசியல் நடத்த வேண்டிய தேவை அவருக்கு இன்றைய நிலையில் ஏற்படப் போவதில்லை என்றே கருதப் படுகின்றது.

இதனைவிட, பின்லேடன் விவகாரத்தில் ஆப்கானிஸ்தானை எச்சரித்திருக்கும் அமெரிக்கா, இவ்விடயத்தில் பாகிஸ்தானையும் சந்தேகக் கண்களுடனேயே நோக்குகின்றது. இவை அனைத்தும் தன்னுடைய தீவிரவாத இஸ்லாமிய நிலைப்பாட்டை தளர்த்திக்கொள்ள வேண்டிய தேவையைத்தான் பாகிஸ்தானுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இதனால், எதிர்வரும் மாதங்களில் காஷ்மீர் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே தொடரும் சர்ச்சைகளுக்கு முடிவு கட்டப்பட்டு, அமெரிக்காவின் ஆலோசனைப்படி எல்லைக் கட்டுப் பாட்டுக்கோட்டையே இரு நாடுகளுக்கும் இடையேயான நிரந்தர எல்லையாக மாற்றியமைக்கக் கூடியவிதமாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப் படலாம் என்றே புதுடில்லி வட்டாரங்கள் நம்புகின்றன..!

# பெண்நிலைவாதத்தின் புதிய தளம் நோக்கிய விவாதம்

ஒரு நூலினை, அதன் உள்ளார்ந்த விஷயங்களை அப்படியே வாசகனுக்கு எடுத்துச்சொல்லும் விதத்தில் சிறப்பாகத் தொகுத்துள்ள கட்டுரைத் தொடரை எழுதிய சுதர்ஷினி பாராட்டுக்குரியவர், "ரீடர்ஸ் டைஜஸ்ட்" என்ற ஆங்கில இதழிலும், பழைய "மஞ்சரி" இதழிலும் வெளியான புத்தகச் சுருக்கங்களைப் படித்தால், அந்தப் புத்தகத்தையே படித்த நிறைவை அடையமுடியும் என்ற அபிப்பிராயம் கூறப்படுவதுண்டு. "சுதர்ஷினி" தொகுத்த கட்டுரையும் இந்த அபிப்பிராயத்துக்கு உட்படும். இது போல சிறந்த நூல்களின் புத்தகச் சுருக்கங்களை வாசகர்களுக்கு வழங்கலாம்.

பெண்நிலைவாதியும், வரலாறு, மானிடவியல் ஆய்வாளருமான கலாநிதி செல்வி திருச்சந்திரனால் எழுதப்பட்ட நூலின் சுருக்கமே கட்டுரைத் தொடராக வெளியாகியது. இன்றைக்குப் பெண்நிலைவாதம் என்ற எல்லையைச் சமூகவியல் வரலாறு ஆகிய பரந்த பரப் பிற்குப் பலர் விரிவுபடுத்தி ஆய்வு செய்கிறார்கள். பல முரண்கள், தவறுகள் என்பன இருந்தபோதிலும் இவர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்கள் அம்பை, ராஜம் கிருஷ்ணன், கலாநிதி செல்வி திருச்சந்திரன், பாரதி, சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர். இவர்களுடைய ஆய்வுகள் பெண்நிலைவாதமும், அதன் விரிந்த வரலாற்று எல்லைகளையும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் முயற் சிகளுக்கு அடியெடுத்துக் கொடுத்திருக்கின்றன.

ஆதிகால இந்தியச் சமூகக் கட்டமைப்பு எவ்விதம் மார்க்ஸ், ஏங்கல்சாலும், பச்சோர்பன் போன்ற ஆய்வாளர்களாலும் விளங்கிக் கொள்ளப்பட்டதென்ற விவாதத்தோடு தொடங்குகிறது நூல். சங்ககால வாழ்விலிருந்து பெண்ணின் நிலை எத்தகைய மாறுதலுக்குள்ளானது, தாய்மை, கற்புடமை பற்றிய கருதுகோள்கள் எவ்விதத்திலே "தாயம்" என்ற சொற்பதத்தில் அறியப்ப டுத்தப்படுகிறது என்பதும் விளக்கப்படுகிறது. வெறும் இலக்கியக் கருதுகோள்களை வரலாறு, மானிடவியல் தளங்களூடே பொருத்திப் பார்க்கிறபோதே சரியான முடிவுகளைப் பெற முடியும் என்ற நவீன ஆய்வுமுறை இலக்கியத்துறை சார்ந்தோரிடையே பலத்த அதிர்ச்சியையே உருவாக்கும், இன்னும் சொன்னால், பல்கலைக்கழகம் போன்ற புலமைசார் தளத்திலுள்ள மரபு ஆய்வாளருக்கு இந்தக் கருதுகோள்கள் சினத்தையும், பதில் கூறமுடியாத சங்கடங்களையும் உண்டாக்கும். சங்க காலம் தொட்டு அதன் பிற்காலம் வரை ஆணுக்கும், பெண்ணுக்குமிடையிலான நிலை பற்றிய முடிவு இதற்கு உதார ணம்.

தொல்காப்பியர் வகுத்த கற்பு, பின்னர் எவ்வெவ்வித அர்த்தம் பெற்று, சிலப்பதிகாரத்தில் அழுத்தப்பட்டதென்று விளக்கப்படுகிறது. பத்தினியராகப் போற றப்பட்டோரின் வாழ்வினூடே அது சோடனை என்ற கருத்தினை இன்றைய பெண்கள் அறியாம லிருக்கிறாரே என ஆசிரியை அங்கலாய்க்கி றார். கட்டமைப்பை மீறிப் பெண்கள் கிளர்ந்தெழுந்தனர், கற பின் கனவியராய் முறைமைகளை மீற 'னர் என்ற ஆய்வையும் இலேசில் புற ந்தள் ளிவிட முடியாது. இந்தக் குரலின் உச்சத்தையே "கற்பு நிலை" என்று சொல்ல வந்தால் அதை இருவர்க்கும் பொதுவில் வைப்போம் என்ற பார தியின் குரலிலே கேட்கமுடிகிறது. புதிய வரைவிலக்கணத்தினைக் கற்பு என்பதற் குக் கொடுக்க வேண்டுமென்ற கருத்து எந்தத்தளத்திலிருந்து எழுப்பப்படுகிற தென்பது முக்கியமான விஷயம். கற்பு என்பது இந்தக் கேடுகெட்ட சமுதாயத்தின் வெறும் பொய்ச்சம்பிர தாய அணுகுமுறைகள் என்று கூறிவரும் பெண்ணிய ஆய்வாளர்கள் ஏன் அதற் குத் திட்டவட்டமான வரையறையைக் கொடுக்க மறுத்து வருகின்றனர் என்ற கேள்விக்கான பதிலும் ஏற்கெனவே சொல்லப்பட்டதுதான். எந்தத்தளத்திலிருந்து ஒரு கேள்வி எழுப்பப்படுகிறதோ அதன் சூழல் நிலைப்பாட்டுக்கு அமையவே பதில் கிடைப்பதும், கிடைக்காமல் விடுவதும் ஆகிப்போகலாம். மத்திய, மேல்த்தர ஆய்வாளர்களின் வர்க்க நிலைப்பாடும் சூழலுமே அவர்களது வாழ்நிலைக்கான வரைவிலக்கணத்தை வெளிப்படுத்தும் சிந்தனையில் அழுத்தம் கொடுக்கின்றன.

தேவதாசி – சுமங்கலி பற்றிய அய்வின் விரிவு, இதுவரை வெளிப்படுத்தப்படாத ஆதாரபூர்வமான முடிவுகளை சங்க காலத்திலிருந்து தெளிவுபடுத்துகிறது. யாழ்ப்பாணச் சமூகத்தின் வாழ்வில் தேவதாசி வகித்த பாத்திரமும் அவல நிலையும் நுணுக்கமான தகவல்களோடு நிறுவப்படுகின்றது. வரையறையற்ற புணர்ச்சிக்குப் புனிதங் கற்பிக்கப்பட்ட அதேவேளை அவள் "தேவடியாள்" ஆகக் கேவலப்பட்ட முரணை ஏற் படுத்திய ஆண்மேலாதிக்கப்போக்கு, இப்போது வேறு விதத்தில் அமைப்பது தொட்டுக் காட்டப்படுகிறது. இதேவேளை தஞ்சைப் பெருங்கோயிலோடு பிணைக்கப்பட்ட தேவதாசியரின் பரம் பரை இன்றும் அதே கவலையும், அவலமும் இழிவுமாய் வாழ்வதும் நினைவுகொள்ளத்தக்கது.

அறிவாளிகள் குழு செய்துமுடிக்க வேண்டிய ஆய்வொன்றினைத் தனியாளாகச் செய்து முடித்த ஆசிரியை பெரிதும் பாராட்டப்படவேண்டியவர். விரிந்த தளத்தில், விஞ்ஞான ரீதியான கண்ணோட்டத்தில் செய்யப்பட்ட இந்த ஆய்வின், மூலநூலைப் படிக்கிறபோதே இன்னும் பல கேள்விகள் எழமுடியும், சரியான பெண்நிலைவாதக் கண்ணோட்டத்தை உருவாக்க இதனோடு தொடர்பான ஆரோக் கியமான விவாதங்கள் உருவாக முடியும்.

அதற்கு முன் சில கேள்விகள் எழுகின்றன.

பெண்நிலைவாதச் சிந்தனை எந்தத்தளத்திலிருந்து உருவாக முடியும்?

பெண் விடுதலை என்பது தலையைக் "கிராப்" அடித்து, மார்க் கச்சை அணியாமல், சிகரெட் பிடித்து, மதுபான விருந்தில் தத்துவம் உருவாக்குவது, எவனோடும் படுப்பதை நியாயப்படுத்துவது என்ற நிலையை மேனாட்டு மேல்தட்டுப் புத்திஜீவிப் பெண்கள் சத்தமிட்டுச் சொல்லிப் பெண் நிலைவாதம் கொச்சைப்படுத்தப்பட்ட காலம் ஒன்று இருந்தது. சாதாரண, அடிமட்ட வர்க்கநிலைசார்ந்த பெண் இயக்கங்கள் இந்தப் பொய்ம்மைகளை அடித்து நொருக்கின. புதிய தடத்தை உருவாக்கின. ஆனால் இந்தப்பொய்ம்மை அதே மேல்தட்டு, அறிவு ஜீவிகள் மூலம் புதிய ரூபத்தில். சர்வதேச மட்டத்திலும் சல்வீனாச் செடியாகப் பரவுகிறது. இது பெண்நிலைக்கு இடையூறானது.

தொழிலாளி, விவசாய, உதிரி, சாதாரணதரப் பெண்களே போர்க்குணமிக்கவர்கள், சுமைகளால் அழுந்தி, நெருக்குதல்களால் அவலப்படுபவர்கள், இந்த வர்க்கமே மானிட விடுதலையையும் தீர்மானிப்பது. இவர்களின் வாழ்வினூடாகவே பெண்நிலைவாதக் கண்ணோட்டமும் கருதுகோளும் உருவாக முடியும். மத்தியதர வர்க்கம் இதைத் தொடர முடியும்.

இவையெல்லாவற்றையும் விட இன்றைய நிலையிலுள்ள எமது பெண்பாதியின் நிலையைப் பார்ப்பது காலத்தின் அவசிய தேவை. இந்தத் தேசத்தில் அவர்கள் மேல்திணிக்கப்படுகின்ற கொடூரத்தை முதலில் பெண்நிலைவாதிகள் சர்வதேசமட்டத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். தங்கள் ஆய்வுகளை இந்தக் கொடூரங்களையும், மிலேச்சத்தனங்களையும் வெளியுலகிற்குக் கொண்டு போகச் செய்யத்தக்கதாக மாற்றவேண்டும். இதற்குப் பிறகு பெண்நிலைவாதக் கருத்தைச் சரியான தளத்தில் இருந்து உருவாக்க முடியும். அல்லாவிடில் றோம் நகரம் பற்றி எரிய நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையை விட மோசமான கதையாகிவிடும்.

**சஞ்சயன்**



## பெண்நிலைவாதம் : எங்கிருந்து?

**இன்றைய நிலையிலுள்ள எமது பெண்பாதியின் நிலையைப் பார்ப்பது காலத்தின் அவசியத் தேவை. இந்தத் தேசத்தில் அவர்கள் மேல்திணிக்கப்படுகின்ற கொடூரத்தை முதலில் பெண்நிலைவாதிகள் சர்வதேசமட்டத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். தங்கள் ஆய்வுகளில் இந்தக் கொடூரங்களையும், மிலேச்சத்தனங்களையும் வெளியுலகிற்குக் கொண்டு போகச் செய்யத்தக்கதாக மாற்றவேண்டும். இதற்குப் பிறகு பெண்நிலைவாதக் கருத்தைச் சரியான தளத்தில் இருந்து உருவாக்க முடியும். அல்லாவிடில் றோம் நகரம் பற்றி எரிய நீரோ மன்னன் பிடில் வாசித்த கதையை விட மோசமான கதையாகிவிடும்.**

எதிர்வினை 1

# பூர்வீக நியாயப்பாடுகள் தமிழ்த் தேசிய அரசியலை பலவீனப்படுத்தும்

**தமிழ்த் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை**

**அரசியல் தொடர் 29**

- ஆதிசங்கரர்-

தமிழர் அரசியலின் முதலாவது காலகட்டம் தொடர்பாக இதுவரை வெளிவந்த தொடர்பற்றி எழுத்து மூலமாக எதிர்வினைகள் மிகக் குறைவாகவே வந்துள்ளன. வாய்மூலமான எதிர்வினைகளே சற்று கணிசமானளவு வந்துள்ளன. வந்த எதிர்வினைகள் கூட தெளிவாக திட்டவட்டமாக முன்வைக்கப் பட்டதாக இருக்கவில்லை.

இப்போக்கு தமிழ்ச் சூழலுக்கு நல்லதல்ல. இதில் இரண்டு விடயங்கள் உள்ளது. ஒன்று தமிழ்ச் சூழலில் நிலவுகின்ற புலமைத் துறைச் சோம்பேறித்தனம். இரண்டாவது அக்கறையின்மை. அக்கறையில்லாதவர்களை விட்டு விடுவோம். அக்கறையிருந்தும் சோம்பேறித்தனத்தினால் இவை பற்றிப் பேசாமல் விடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதில் சம்பந்தப்பட்டவர்கள் அதிலிருந்து மீள்வதற்கு முயற்சிக்க வேண்டும். இச் சோம்பேறித்தனத்தினால் தான் தமிழ்த்தேசிய அரசியல் ஆயுத ரீதியாக வளர்ந்தளவிற்கு அரசியல் ரீதியாக வளரவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இது விடயத்தில் உள்ள வரலாற்றுப் பொறுப்புணர்வை புலமையாளர்கள் தட்டிக்கழிக்க முற்படக் கூடாது.

எதிர்வினைகளில் எழுத்து மூலமாக வந்த எதிர்வினைகளுக்கு பதில் அளித்தலே புலமை மரபு. வாய்வழி எதிர்வினைகளுக்கெல்லாம் பதில் அளிப்பது புலமை மரபல்ல. ஆயினும் வந்த எதிர்வினைகளின் சமூக முக்கியத்துவம் கருதி அவற்றிற்கும் பதில் அளிக்கலாம் என்றிருக்கிறேன்.

எதிர்வினைகளுக்கு பதில் அளிப்பதற்கு முன் தமிழ்த் தேசிய அரசியல் தொடர்பாக எனது கருத்து நிலை பற்றியும் குறிப்பிட வேண்டும். "தமிழ்ச் சமூகத்திலுள்ள அனைவரும் இணைந்து தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுத்தல், கிடைக்கும் விடுதலையை அனைவரும் சமத்துவமாக பங்கிட்டுக் கொள்ளுதல்" என்பதே தமிழ்த் தேசியம் தொடர்பான எனது மைய கருத்துநிலையாகும். தமிழ்ச் சமூகத்தின் மேல் நோக்கிய அசைவியக்கியக்கத்திற்கு பேரினவாதமும் அதன் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட சிங்கள அரசும் தடையாக இருப்பதினாலேயே தமிழ்த்தேசிய அரசியலை நாம் முன்னெடுத்தோம். எனவே கிடைக்கும் விடுதலை தமிழ்ச் சமூகத்தின் ஆதிக்கப்பிரிவிற்கு மட்டும் செல்லத்தக்கதாக இருப்பது எந்த வகையில் நியாயமானது.

இவ்வாறு தேசியமும், சமூக மாற்றமும் இணைந்த அரசியலைப் பற்றிப் பேசும் போது தான் தமிழ்ச் சமூகத்தின் புற எதிரிகளையும் அகஎதிரிகளையும் பற்றிப் பேச வேண்டியுள்ளது. பேரினவாதமும், அதனை முன்னெடுக்கின்ற சிங்கள அரசுமே புறஎதிரி. அவற்றைப் பற்றிப் பேசும் போது நான் அதிக எதிர்ப்பினைச் சம்பாதிக்கவில்லை. தமிழ்ச்சமூகத்தின் ஆதிக்கப் பிரிவினரும் அக்கருத்துக்களுக்கு மிகுந்த ஆதரவினைத் தருகின்றனர். ஆனால் அக எதிரிகளான யாழ். சைவ, வேளாள ஆண் ஆதிக்கம் பற்றிப் பேசும் போதே ஆதிக்க சக்திகள் எனது கருத்துக்களுக்கு எதிராக போர்க்குரல் எழுப்புகின்றனர். தமிழ்த் தேசத்தின் துரோகி என்று கூட கூற முற்படுகின்றனர். இவர்களின் கூக்குரலுக்காக எனது சமூகப் பொறுப்பிலிருந்து நான் விலகி விட முடியாது.

தமிழ்ச் சமூகத்தின் அக எதிரிகளைப் பற்றிப் பேசி அதிக கல்லெறிகளை வாங்கியவர்களில் முக்கியமானவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் அவரின் தொடர்ச்சியை பின்பற்ற விரும்புகின்ற அவருடைய பணிவான ஒருமாணவன் என்ற வகையில், இக்கல்லெறிகளை வாங்குவதில் எனக்கும் தயக்கம் கிடையாது.

ஒரே நேரத்தில் தமிழ்த் தேசியவாதியாகவும், சமூகமாற்ற வாதியாகவும் இருப்பதே இன்றைய காலத்தின் தேவை. ஆனால் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை அது தான் மிகவும் கடினமானது.

இனி எதிர்வினைகளுக்கு வருகின்றேன்.

முதலாவதாக எழுத்தாளரும் கவிஞருமான நண்பர் அ.யேசுராஜா முன்வைத்த தமிழர் பூர்வீகம் தொடர்பான எதிர்வினை பற்றிப் பார்ப்போம். இது பற்றி எழுத்து மூலமாக எனக்கு கிடைக்கவில்லை. வாய் மூலமாகவே கிடைத்தது. அ.யேசுராஜாவின் நண்பரான எழுத்தாளர், குப்பிழான் ஐ. சண்முகன் கொழும்பு வந்தபோது இதனைத்தெரிவித்திருந்தார். இது விடயத்தில் நண்பர் யேசுராஜாவின் எதிர்வினை மிகவும் காரசாரமாக இருந்து என்றும், "தமிழர் பூர்வீகம் தொடர்பான எனது கட்டுரையைப் பார்த்துவிட்டு எனது எழுத்துக்களிலுள்ள மரியாதையே தனக்கு இல்லாமல் போய் விட்டது", என்றும் யேசுராஜா குறிப்பிட்டதாக சண்முகன் தெரிவித்திருந்தார்.

அக்கட்டுரையில் தமிழ்த்தேசிய அரசியலின் நியாயத்தன்மையை வலியுறுத்துவதற்கு தமிழர்களின் பூர்வீகத்தை ஒரு காரணமாகக் காட்டத் தேவையில்லை என்பதையே நான் வலியுறுத்தியிருந்தேன்.

அதற்கு இரண்டு காரணங்கள் பிரதானமாக இருந்தன. ஒன்று தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஒடுக்கப் பட்டமையினால் அவர்களுடைய மேல்நோக்கிய அசைவியக்கம் தடைப்பட்டது. இவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்காகத்தான் அவர்கள் தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்தார்களே ஒழிய தாங்கள் பூர்வீகமாக வாழ்ந்தார்கள் என்பதற்காகவோ, அல்லது ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆளவேண்டும் என்பதற்காகவோ தனி நாட்டுக்கோரிக்கையை முன்வைக்கவில்லை.

இது தவிர, உலகில் போராட்டங்களை நடாத்தி தனியான அரசுகளை அமைத்துக் கொண்ட தேசிய இனங்களோ அல்லது போராட்டத்தை நடாத்தும் தேசிய இனங்களோ பூர்வீகத்தை ஆதாரமாகக் கொண்டவை என்று கூற முடியாது. இலங்கையில் வாழும் மலையக மக்களுக்கு இங்கு பூர்வீகம் இல்லை என்பதற்காக அவர்களின் உரிமைப் போராட்டங்களை நாம் கொச்சைப்படுத்தி விட முடியாது.

இரண்டாவது, இப்பூர்வீக நியாயப்பாட்டை முன்வைக்கும் கோரிக்கை புறரீதியிலும், அகரீதியிலும் மிகவும் பலவீனமானது என்பது என் கருத்து.

புறரீதியில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர்களில் ஒரு பகுதியினர் தான் பூர்வீகமாக இங்கு வாழ்ந்துள்ளார்கள் என்பதை நிரூபிக்கலாமே தவிர, முழு மக்களும் பூர்வீகமானவர்கள் என்பதை எம்மால் நிரூபிக்க முடியாது. தமிழ நாட்டிலிருந்து தமிழர்களின் இடப்பெயர்வு மன்னர் காலத்திலிருந்து வெவ்வேறு காலகட்டங்களில் ஆங்கிலேயர் காலம் வரை நடைபெற்றிருக்கின்றது.

இலங்கையில் தமிழர் ஆட்சி என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கின்ற யாழ்ப்பாண இராச்சியத்திற்குள் கிழக்குப் பகுதி முழுமையாக உள்ளடங்கவில்லையென்பது தான் வரலாறு. எனவே இன்று தமிழர் தாயகம் என நாம் கூறுகின்ற முழு வடக்கு- கிழக்குப் பிரதேசத்தையும் உள்ளடக்கிய தமிழர் ஆட்சி என்பது வரலாற்றில் இருக்கவில்லை. இது தவிர கிழக்கின் சில பகுதிகள் ஒரு குறிப்பிட்ட காலம் கண்டிராச்சியத்தின் கீழும் இருந்திருக்கின்றது.

அகரீதியில் இக்கருத்தின் தாக்கம் மிக அதிகமானது. இக்கருத்துக்களுக்கு பின்னால் யாழ்ப்பாண மேலாதிக்கம் கோலோச்சுகின்ற நிலைமை காணப்படுகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தையும் குறிப்பாக சங்கிலி மன்னனையும் உயர்த்திப் பிடிக்கின்ற போது, அதன் சின்னங்களை தமிழ் தேசியத்தின் சின்னங்களாக பொறிக்கின்ற போது, இவ் இராச்சியத்திற்குள் வராத மக்கள் புறந்தள்ளப்படுகின்றார்கள். குறிப்பாக கிழக்கு, மக்களும் வன்னி மக்களும் புறம்தள்ளப்படுகின்றார்கள். வன்னி மக்கள் வன்னிக்கு குறுநில மன்னர்களின் ஆட்சியின் கீழ் நீண்டகாலம் இருந்திருக்கின்றார்கள். அவ்வப்போது இக்குறுநில மன்னர்கள் யாழ்ப்பாண அரசர்களுக்கு திறை செலுத்தி அவர்களின் ஆதிக்கத்தினை ஏற்றிருந்தனர்.

இதை விட கிறிஸ்தவ மக்களையும் இக்கருத்துக்கள் புறந்தள்ளுகின்றன. கிறிஸ்தவ மக்கள் சங்கிலி மன்னனை ஏற்றுக் கொள்ளவில்லை. கத்தோலிக்க மதத்திற்கு மதம்மாறியதற்காக நூற்றுக்கணக்கான கத்தோலிக்கர்களை வெட்டிக் கொலை செய்த சங்கிலி மன்னனை எவ்வாறு கிறிஸ்தவ மக்களால் ஏற்றுக் கொள்ள முடியும்.

உண்மையில் இந்தத்தவறு தமிழரசுக் கட்சி காலம் தொடக்கமே நடைபெற்று வருகின்றது. தமிழரசுக் கட்சி இலங்கைத் தேசியக் கொடிக்கு பதிலாக சங்கிலி மன்னனின் கொடியாகிய நந்திக் கொடியை தமிழரின் கொடியாக ஏற்றியது. தந்தை செல்வா நந்திக் கொடியை தனது காரில் கட்டிப் பறக்க விட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சின்னத்திலும் நந்தியே இடம்பெற்றுள்ளது. நந்தி சைவ மதத்தின் பிரதான சின்னங்களில் ஒன்று என்பதையும் கவனத்தில் எடுத்தால் இதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். இவையெல்லாம் யாழ். சைவர் அல்லாத ஏனையவர்களை தமிழ்த் தேசியத்திலிருந்து அந்நியப்படச் செய்பவை.

தமிழ்த்தேசியத்திற்கென கருத்து நிலைகளை உருவாக்கும் போது அது அத்தேசியத்திற்குள் அடங்கும் எல்லோரையும் இணைப்பவையாக இருக்க வேண்டும். கருத்து நிலைகளை வலியுறுத்தும் சின்னங்கள் முழுத் தமிழ்ச் சமூகத்திற்கும் பொதுவானவையாக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாண மன்னனின் சின்னத்தோடு வன்னி மன்னர்களினதும், கிழக்கு வன்னிமைகளினதும் சின்னங்களையும் இணைத்து ஒரு பொதுச் சின்னத்தினை உருவாக்கியிருந்தால் இது கூட வரவேற்கப்படக் கூடியதாக இருந்திருக்கும்.

இங்கு மரபுக்குறியீடுகள் மக்களை அணிதிரட்டுவதற்கு உதவியாக இருக்கும் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் அக்குறியீடுகள் முழு மக்களுக்கும் பொதுவானவையாக இருக்க வேண்டும் என்பதையே நான் வலியுறுத்த விரும்புகின்றேன்.

இந்த இடத்தில் நான் மிகவும் வன்மையாக வலியுறுத்தும் விடயம் இது தான். "தமிழ்மக்களின் வரலாறு என்பது வெறுமனே யாழ்ப்பாணத் தவரின் வரலாறு அல்ல. மாறாக யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு மக்களின் வரலாற்றோடு இன்று வடக்கு- கிழக்கில் குடியேறியுள்ள இந்திய வம்சாவழி மக்களின் வரலாறும் இணைந்ததே தமிழ் மக்களின் வரலாறாகும்."

இறுதியாக இவ் எதிர்வினைகளுக்கு பதில் கூறுவதற்காக முன்னர் கூறியவற்றில் சிலவற்றையும் திரும்ப கூற வேண்டி ஏற்பட்டுள்ளது. இதற்காக வாசகர்கள் என்னை மன்னிக்க வேண்டும். நண்பர் யேசுராஜா வாய்மொழி மூலமாக கூறிய எதிர்வினைக்கு இவ்வாறு நீண்ட பதில் அளிப்பது சரியா? என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. இது தவறு என்று அவர் நினைப்பாராக இருந்தால் என்னை மன்னிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். இக்கருத்தின் சமூக முக்கியத்துவம் கருதியே இந்நீண்ட பதிலை என்னால் எழுத வேண்டி ஏற்பட்டது.

நண்பர் யேசுராஜா தன்னுடைய கருத்துக்களை எழுத்தில் வைத்து விவாதித்தால் அது வாசகர்களுக்கும் எனக்கும் பேருதவியாக இருக்கும்.

தொடரும்...

# படைப்பாளி எஸ். அகஸ்தியர்



> இலக்கியங்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதிலிருந்து கருத்துருவங்களைத் தாங்கி வாழ்க்கைக் களத்திலே உருவாக்கப்பட்டதால் அவை கடந்தகால எச்சரிக்கையாக, நிகழ்கால விமர்சனமாக, எதிர்கால வழிகாட்டலாகத் திகழ்கின்றன

மக்களிடம் கற்று அதனைப் படம் போட்டு மக்களுக்கு அளிப்பது என்பதே என் இலக்கியக் கொள்கை என அறைகூவல் விடுத்து இலக்கியப் பணி புரிந்தவர் அகஸ்தியர். மக்கள் மத்தியில் நிபந்தனையற்று வாழ்ந்து அவர்களின் வாழ்க்கைப் போராட்டங்கள் அனைத்திலும் தன்னை இணைத்துக் கொண்ட போராளி அகஸ்தியர். தனது ஆயுதமாகப் பேனாவைத் தூக்கிட, மாண்டிட விடுதலை பற்றியே தினம் தினம் சிந்தித்துத் தான் இறக்கும் வரை எழுத்தைத் தன் போராட்டப் பாயாக விரித்துக் கொண்டார். பல போராட்டங்களில் இணைந்து கொண்டதால் அப்போராட்ட இயக்க முறைமைகளை தனது இலக்கிய உலகிற்கு உந்துசக்தியாகக் கொண்டார். சிங்கள, முஸ்லிம் இலக்கியவாதிகளுடன் இறுக்கமாக இணைந்தவர். பலமொழித்தேர்ச்சியும், பல்லின மக்களுடன் சரளமாகப் பழகும் பண்பும், சிறிய விடயங்களையும் கூர்ந்து அவதானித்து ஆராயும் போக்கும் நாடறிந்த எழுத்தாளனாக அவரை ஆக்கிற்று. குறிப்பாக மலையக மக்களின் பிரச்சினைகளை, மலையகம் சாராத எழுத்தாளர்களில் அதிகமாக எழுதியவர் அகஸ்தியர். அதற்கு அவர் மலையகத் தலைநகராம் கண்டியில் 17 வருடங்கள் பணியாற்றியதும் ஒரு காரணமெனலாம். மலையக மக்களிடம் மிக நெருக்கமாக வாழ்ந்தேன், மலையக மக்களிடமிருந்து அதிகம் கற்றுக் கொண்டேன் என்ற அகஸ்தியரின் கூற்றும் கவனிக்கத்தக்கது.

அகஸ்தியர் தொழிலாள-விவசாய வர்க்கப் பார்வையுடன் அவர்களின் மீட்சிக்காகவும் எழுதியவர். முற்போக்கு எழுத்தாளர்களின் அதிகமான சிறுதைகளை எழுதியவராக மட்டுமல்லாது, புதிய, நவீன உத்திகளிலும் பலதரப்பட்ட பரிசோதனை வடிவங்களிலும் தாக்கமான பிரச்சினைகளையும், மத சம்பந்தமான அர்த்தமற்ற ஆசாரங்களையும் யாருமே தொட அஞ்சும் விஷயங்களையும் துணிவுடன் வேகமாகவும், கனதியாகவும் கொள்கை தவறாமல் நேர்மையாக எழுதியவர் அகஸ்தியரே என்று ராகுதாசன் ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார். அகஸ்தியரின் சிறப்புகளில் குறிப்பிடக்கூடிய ஒன்று எந்தப் பத்திரிகையின் கருத்துக்கும் வளைந்து கொடாமல் தன் கருத்தை அழுத்துபவரும் அகஸ்தியர் ஒருவர் தான் என்பதே, அது. அகஸ்தியரது மறைவின்போது முற்போக்கு இலக்கிய உலகிற்கு ஒரு பேரிழப்பு என்ற குறிப்பிட்டதுடன், தனது வாழ்நாளில் என்றுமே இலக்கிய உறங்கு நிலைக்கு இவர் உட்படவே இல்லை என்றும் முற்போக்கு இலக்கிய எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளர் பிரேம்ஜி குறிப்பிடுகிறார். ஐம்பது ஆண்டுகள் இலக்கியப் பணி புரிந்த அகஸ்தியர், தனது ஆரம்ப நாள் முதல், இறுதி நாள் வரை தான் வரித்துக் கொண்ட இலக்கியக் கோட்பாடுகளிலிருந்து, விசாலித்த சித்தாந்தங்களிலிருந்து சற்றேனும் தடம் பிறழாது, சீரிய வாழ்க்கையை வாழ்ந்தவர். அகஸ்தியர், ஒரு அசுர எழுத்தாளர் என்பதில் இக்கருத்துக்கு இடமில்லை.

உழைப்பவர் வாடவும்
உன்மத்தன் தேடவும்
உருக்கொண்ட உலகத்தை
மாற்றிடுவோம்
பிழைத்திட வழியற்ற பிற்போக்கு
அமைப்பினைப்
பிளந்திடுவோம் பொது
அரசமைப்போம் என்று

அகஸ்தியரின் மறைவின் போது கவிஞர் மலைத்தம்பி எழுதினார். இக்கவிதையின் இறுதியில், இதுவே அகஸ்தியர் தம் உணர்வுப்பாட்டை இனிவரும் யுகத்துக்குப் புதிய சாட்டை என்றும் குறிப்பிட்டிருந்தார் கவிஞர். உண்மையில் அகஸ்தியர் எழுத்துக்கள் புதிய யுகத்திற்குச் சாட்டை அடிகளையே கொடுத்தன. அகஸ்தியர் இறக்கும் தறுவாயில் எழுதிய கடைசிக் கட்டுரை புகலிட மாகத்மியம். இக்கட்டுரையைத் தொடராக எழுதும் எண்ணத்தில் பிரான்சிலிருந்து வெளிவரும் ஈழகேசரியில் முதலாவது அத்தியாயம் எழுதிய நிலையில் அவரது பூதவுடல் மறைந்து விட்டது. ஆனால் அவருடைய எழுத்தின் எண்ணிக்கையும், தரமும் அவரது புகழுடலை மறையவிடாது என்ற நம்பிக்கையை நாம் அவருடைய எழுத்துக்களைப் படிக்கும்போது புரிந்து கொள்ளலாம்.

இந்தப் புகலிட மகாத்மியம் என்ற கட்டுரையில் வாக்கில் ஒன்றும், நாக்கில் வேறொன்றும், நோக்கில் மற்றொன்றும், போக்கில் மாறுபட்டும், தொலை வாங்கியில் மற்றொன்றுமாக வாழும் எமது மக்கள் எனக் குறிப்பிட்டு சாட்டை அடிகொடுக்கின்றார். அகஸ்தியர் கையில் பேனை, கருத்தில் சாட்டை தன் மனதில் பட்டதைப் பட்டெனச் சொல்லும் துணிச்சல் அகஸ்தியருக்கு கைவந்த கலை. அதற்குத் துணை அவரது மொழிநடை. உதாரணத்திற்குப் பட்டம் பெற்ற விட்டதாரிகள் மாரீச அறிஞர்கள் போகக் கலை இலக்கியச் சாம்ராட்டுக்களும், நடுநிலைச் சஞ்சிகைத் தர்மிகளும் காட்டுக்குள் கள்ளர் கடைவைத்த சங்கம் ஆணையாளர் மாறி ஒரே கை ஒலியைப் பேரியக்கமாக வளர்ப்பதே வேட்கையாகிறது என்று குறிப்பிடுவதைக் கூறலாம். இன்னும் பத்திரிகைக்காரர் அளவுகோலை வைத்துக் கொண்டு எழுதுகிறவனின் சிருஷ்டிகளைக் குறைப்பிண்டங்களாக்கி விடும்போது வெளியே அந்தப்பழி தெரிவதில்லை. அது படைப்பாளனையே வந்து சேர்கிறது. எழுதுகிறவன் வழக்காடுகிற அப்புக்காத்தனல்ல என்று பத்திரிகைக்காரர்களுக்குத் தெரிவதால் அவர்கள் நீதிபதிகளாகிவிடுகிறார்கள் என்று அகஸ்தியர் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வாறு துணிச்சலோடும், நேர்மையோடும் தனது எழுத்து ஊழியத்தை வெற்றிகரமாகக் கொண்டு சென்றவர் அகஸ்தியர்.

அகஸ்தியர், மொழிப்பற்றும் தன் கருத்தை மொழிவதற்கு அதனை விளைத்திறனுடன் கையாளும் பாங்கும் அவரது எழுத்தின் தனித்துவத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இலக்கியங்கள் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதிலிருந்து கருத்துருவங்களைத் தாங்கி வாழ்க்கைக் களத்திலே உருவாக்கப்பட்டதால் அவை கடந்தகால எச்சரிக்கையாக, நிகழ்கால விமர்சனமாக, எதிர்கால வழிகாட்டலாகத் திகழ்கின்றன என்பதற்கேற்ப அகஸ்தியரது எழுத்துக்கள் திகழ்கின்றன. அவர் ஓரிடத்தில் மக்களின் அவல வாழ்க்கையை நகல் எடுத்து, ஜனரஞ்சகம் என்ற மாய மோகினியில் தஞ்சமாகி, வெறுங்கதைகளை ஆபாசமாக உற்பத்தி பண்ணி, தனேஸ்வரப் பெருச்சாளிகளால் பிரபல்யப்படுத்தலையே இலக்கியத் தளமாகக் கருதி இலக்கியத்தரம் என்ற மேன்மையிலிருந்து, வணிக இல்கியம் என்ற படுகுழியில் வீழ்கின்ற பாவாத்துமாக்களுக்கு இந்த மக்களின் பரிதாப வாழ்க்கை ஒரு வேடிக்கையாக, வினோதமாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை இந்த மக்களே என் ஆத்மா என்பேன். எனது கதைகளில் அத்தகைய ஆத்மாவை மக்கள் எப்போதும் தரிசிப்பார்கள் என்று கூறுகிறார். அவரின் சிந்தனை சால் செயல் மூன்றினையும் சமூகத்தின் மேம்பாட்டுக்குப் பயன்படுத்தி, அவலங்களை ஆழப்புதைத்து விடவேண்டும் என்று தான் மானிடம் சிறக்கும் என்ற கொள்கைப் பிடிப்போடு, மானிடநேயம் பாடிய வானம்பாடி அகஸ்தியர் என்றே கூற வேண்டும்.

கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் அவரது எழுத்தில், அவரது உடற் தளர்ச்சியின் சாயலைக் காண்பது கடினம் என பேராசிரியர் சி. சிவசேகரம் கூறியிருக்கிறார். ஈழகேசரியில் கணக்கில்லாப் பக்கங்களை நிரப்பத் துவங்கிய கரங்கள், இறுதித் தொடரின் முதல் பகுதியிலேயே ஓய்வு பெற்றது என்று அவரது நிறைவு மலரான அகத்தியதைத் தயாரித்தவர்கள் குறிப்பிடுகின்றனர். சாகுந்தறுவாயிலும் சாகாத கொள்கைப் பிடிப்பில் நின்று தளராது நிமிர்ந்தவர். நடுங்கும் கரத்தின் ஐந்து விரல்களுக்குள் அகப்பட்ட ஆறாவது விரல் சாதித்தது எண்ணற்றவை என்று கி. கிறிஸ்டியன் குறிப்பிடுகிறார். எழுதாமல் இருப்பது என்பது அகஸ்தியருக்கு இயலாத காரியம். பல்லின மக்கள் மத்தியில் நிபந்தனையின்றி வாழும் பக்குவத்தையும் இந்த எழுத்து எனக்கு அளித்திருக்கிறது எனக் கூறும் அகஸ்தியர், மக்களுடன் நெருங்கிப் பழகும் அவாக் கொண்டவர். லெ. முருகபூபதி குறிப்பிடுவது போல ஆக்க இலக்கியத்துறையில் அவர் தீவிரமாக ஈடுபட்டிருந்தாலும் தனது அருமை நண்பர்களுக்குக் கடிதம் எழுதுவதிலும் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார் என்பதும், பழகுவதற்கு இனிய மனிதராக அவரைக் காட்டுகிறது. அகஸ்தியர் எழுத்தாலும், எண்ணத்தாலும், சொல்லாலும் என்றென்றும் என்போன்றவர்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிப்பார் என்று இரா. அ. இராமன் குறிப்பிடுகிறார். இவ்வாறான சிறப்பு இயல்புகளைக் கொண்டிருந்ததாற்றான் தான் வாழ்ந்த சமுதாயத்திலே காணப்பட்ட வறுமை, அறியாமை, அடிமைத்தனம், சுரண்டல் முதலானவற்றைப் புறங்கண்டு சமத்துவமே சமாதானமும், சகோதரத்துவமும் பொருந்திய ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று எழுதுகோலைத் தூக்கினார். சமுதாய மேம்பாட்டுக்கு எழுத்தாளர் உதவவேண்டும் என்ற கொள்கையில் உறுதியுடையவராக இருந்தார் என்று பேராசிரியர் சி. தில்லைநாதன் நினைவு கூருகிறார்.

இந்த உறுதியும், வேகமும் தான் அவரை 350ற்கு மேற்பட்ட சிறுகதைகள், 10ற்கு மேற்பட்ட நாவல்கள், 9 குறுநாவல்கள், அகஸ்தியர் பதிவுகள், மானிட தரிசனம் நீ நாட்டுக்கூத்துக் கலைஞர் பூந்தான் யோசேப்பு, கலை இலக்கியமும், வர்க்க நிலைப்பாடும் போன்ற கட்டுரைகள், 40ற்கு மேற்பட்ட மேடை வானொலி நாடகங்கள் எனப் பல்வேறு துறைகளில் பல்லாயிரக்கணக்கான ஆக்கங்கள் எழுதக் காரணமாயின. இவற்றை விட மிருதங்க வித்துவானாக கர்நாடக சங்கீத அறிவும், ஆற்றலுமுள்ளவனாக, நாட்டுக்கூத்துக் கலைஞனாக மிளிரவும் செய்தார். மொத்தத்தில் கலை இலக்கியப் பணி புரிந்து மானிட நேயத்தைப் பாதுகாக்க அயராது உழைத்த அந்த எழுத்துலகப் படைப்பாளிக்கு ஈழத்து இலக்கிய உலகம் செய்யும் நன்றிக் கடன் அவரது ஆக்கங்களை நாலுருவாக்குவதே.

ந. பார்த்திபன்

## நீடிக்கப்பட்ட காஷ்மீர் யுத்த நிறுத்தம்:

# சமாதானத்துக்கான வாஜ்பாயின் காய் நகர்த்தல் எந்தளவுக்கு வெற்றியை தரப்போகின்றது?




வட இந்தியாவில் யுத்தத்தால் சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் காஷ்மீரில் இந்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரையில் எந்தளவுக்குப் பலனைக் கொடுக்கப் போகின்றது?

காஷ்மீர் பிரச்சினையை புது டெல்லியிலுள்ள செங்கோட்டை வரையில் தீவிரவாதிகள் கொண்டுவந்துள்ள அதேவேளையில். ஒரு மாத காலத்துக்கே இந்த யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருக்கும் என இந்தியப் பிரமர் அடல் பிஹாரி வாஜ்பாய் முதலில் அறிவித்த போதிலும், மேலும் ஒரு மாத காலத்துக்கு இப்போது நீடிக்கப்பட்டிருக்கின்றது. காஷ்மீரில் அமைதி நிலைமையைத் தோற்றுவிக்கும் நோக்கத்துடன் வாஜ்பாய் மேற்கொண்ட இந்தக் காய் நகர்த்தல், உரிய பலனைக் கொடுப்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக புதுடில்லி வட்டாரங்கள் கூறுகின்றன. இதனால்தான் யுத்த நிறுத்தத்தை அவர் மேலும் நீடித்திருக்கின்றார் எனவும் அவ்வாட்டாரங்கள் கூறுகின்றன. இருந்த போதிலும் கள நிலைமைகள் முரண்பாடானதாக இருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

காஷ்மிர் நெருக்கடியில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் விட்டுக்கொடுப்புடன் முன்னெடுக்கப்படும் காஷ்மிர் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்குமா என்பதுதான் இப்போது எழும் கேள்வி. யுத்த நிறுத்தத்தை மேலும் நீடித்து பேச்சுவார்த்தைகள் ஊடாக பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதில் தனக்குள்ள அக்கறையை பிரதமர் வாஜ்பாய் வெளிப்படுத்தியிருக்கின்ற அதேவேளையில் - காஷ்மீருக்கு தனி ஆட்சி கோரிப் போராடும் தீவிரவாதக் குழுக்கள் சில தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியிருக்கின்றன.புதுடில்லி செங்கோட்டையிலும். பின்னர் காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீ நகரிலுள்ள இராணுவத் தலைமையகத்திலும் தீவிரவாதிகள் நடத்தியுள்ள தாக்குதல்கள் - சமாதான முயற்சிகளைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கான அவர்களின் அறிவிப்பாகவே இருக்கின்றன.

யுத்த நிறுத்தம் மேலும் நீடிக்கப்படுவதாக இந்தியா அறிவித்த அதேவேளையில் பாகிஸ்தான் வெளியிட்ட மற்றொரு அறிவிப்பு இந்திய அரசுக்கு உற்சாகத்தையளிப்பதாக இருந்துள்ளது. இந்திய - பாகிஸ்தானின் சர்ச்சைக்குரிய எல்லைப்பகுதியிலிருந்து தமது படைகளில் ஒரு பகுதியை தாம் ஏற்கனவே வாபஸ் பெற்றுவிட்டதாக பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்திருக்கின்றார்கள். எவ்வளவு துருப்புக்கள் வாபஸ் பெறப்பட்டன என்பதை பாகிஸ்தான் தெரிவிக்காத போதிலும், நிலைமைகளை முன்னேற்றுவதற்காக எடுக்கப்பட்டுள்ள ஒரு துணிகரமான நடவடிக்கை என இதனை பாகிஸ்தான் வர்ணித்திருக்கின்றது. இதேபோன்ற நல்லெண்ண நடவடிக்கைகளை இந்தியாவும் பதிலுக்கு மேற்கொள்ள வேண்டும் என பாகிஸ்தான் கேட்டிருக்கின்றது.

யுத்த நிறுத்தம் நீடிக்கப்படுவதை அறிவித்த வாஜ்பாய் இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இது உதவுவதாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்திருக்கின்றார். இரு நாடுகளும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதிலேயே அக்கறை காட்டுவதைக் காணக்கூடியதாக உள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களும் தெரிவிக்கின்றன. இரு நாடுகளினதும் அணுகுமுறை காஷ்மீர் மக்களிடையே அதிகளவுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகவும் இந்த வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. தீவிரவாதிகளின் ஆயுதப் போராட்டம் உச்ச கட்டத்தையடைந்ததையடுத்து கடந்த ஒரு தசாப்தகாலத்தில் இங்கு சுமார் முப்பத்தையாயிரம் பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அன்றாடம் மலிந்துவிட்ட வன்முறைகள் பொது மக்கள் மத்தியில் பெருமளவுக்கு விரக்தியையும் ஏற்படுத்திவிட்டிருக்கின்றது. தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகிவருவதும் இதனால்தான். இந்திய அரசும் இதனை உணர்ந்து கொண்டுதான் செயற்படுகின்றது.

காஷ்மீரில் வன்முறைச் சம்பவங்கள் குறைவடைந்தால் தாம்யுத்த நிறுத்தத்தை நீடிப்பதாக பிரதமர் வாஜ்பாயும் உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானியும் ஆரம்பத்திலேயே தெரிவித்திருந்தார்கள். இதனால் யுத்த நிறுத்தம் நீடிக்கப்படும் என்பது பெருமளவுக்கு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். முஸ்லிம்களின் புனித மாதமான ரம்ழான் ஆரம்பமான போது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட இந்த யுத்த நிறுத்தம், இப்போது நோன்புக் காலம் முடிவடைந்துள்ள நிலையில் மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்டிருக்கின்றது.

காஷ்மீரின் சுதந்திரத்துக்காகப் போராடும் பல குழுக்களில் பெரும்பாலானவை இந்த யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தை முயற்சிகளில் ஈடுபடுவதற்கான விருப்பதையும் அவை வெளிப்படுத்தியுள்ளன. தீவிரவாதக் குழுக்களின் கூட்டமைப்பான அனைத்துக் கட்சி ஹுரியத் (சுதந்திர) மாநாட்டுக் கட்சி சமாதானப் பேச்சுக்களுக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்க முன்வந்துள்ளமை தமது முயற்சிகளுக்குக் கிடைத்த முக்கிய வெற்றிகளில் ஒன்று என இந்திய அரசு நம்புகின்றது. ஆனால் இந்தியாவின் யுத்த நிறுத்தக் கோரிக்கைக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பதில் ஹுரியத் அமைப்பில் கருத்து முரண்பாடுகள் உள்ளன என்பதும் உண்மைதான்!

இதேபோல, இந்த யுத்த நிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ள பாகிஸ்தான், எல்லைப் பகுதியிலிருந்து பெருமளவு துருப்புகளை வெளியேற்றி ஊடுருவல்களைத் தவிர்த்து பீரங்கித் தாக்குதல்களையும் நிறுத்திக் கொண்டிருப்பது தமக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி என இந்தியா கருதுகின்றது. இந்த இரண்டு வெற்றிகளினதும் அடிப்படையில்தான் சமாதானத்துக்கான அடுத்த காய் நகர்த்தலை வாஜ்பாய் செய்யப் போகின்றார்.

இந்தக் கட்டத்தில் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளாத தீவிரவாதக் குழுக்கள் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி யிருப்பது, அமைதி முயற்சிகளைப் பாதிப்பதாக இருக் குமா? என்ற கேள்வி தான் சகல தரப்பினராலும் எழுப்பப்பட்டிருக்கின்றது. பாகிஸ்தானில் நிரந்தரத் தளத்தை அமைத்துக்கொண்டு ஜம்மு - காஷ்மீரில் செயற்பட்டு வரும் லஷ்கர் தொய்பா மற்றும் ஹிஸ்புல் அமைப்புக்கள் இந்த யுத்த நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. இந்த அமைப்புக்கள் தான் பலத்த பாதுகாப்புக்களுடன் கூடிய புதுடில்லி செங்கோட்டையில் இடம்பெற்ற தாக்குதல்களுக்கும், காஷ்மீரில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதல்களுக்கும் காரணம் என அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இருந்த போதிலும் இந்த அமைப்புக்களால் சமாதான முயற்சிகளில் பாரிய தாக்கம் எதனையும் ஏற்படுத்திவிட முடியாது என இந்தியா கருதுகின்றது. அதனைவிட ஏனைய சக்திவாய்ந்த குழுக்களையும் இணைத்துக்கொண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் போது வன்முறையில் ஈடுபடும் இவ்வாறான அமைப்புக்கள் தனிமைப்படுத்தப்பட்டுவிடும் எனவும் இந்தியா கணக்குப் போட்டுள்ளது.

எனவே, தீவிரவாத அமைப்புக்களின் நிலைப்பாடு தொடர்பாக இந்தியா பெருமளவுக்கு அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை. பாகிஸ்தானின் போக்கைக் கண்காணித்தே யுத்த நிறுத்தத்தை நீடிக்க வேண்டும் என இந்தியா காத்திருந்தது. அமெரிக்கா பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகியன இந்த யுத்த நிறுத்த அறிவிப்பை வரவேற்றிருந்தன. பாகிஸ்தானை இதற்கு இசைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியவையும் இந்நாடுகள்தான். ஐக்கிய நாடுகள் சபை கூட இதற்குச் சாதகமான ஒரு நிலைப்பாட்டையே எடுத்துக்கொண்டது. இவ்வாறு சர்வதேச ரீதியாக ஆதரவான ஒரு நிலைப்பாடு எழுந்துள்ள நிலையில்தான் யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பதற்கான நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் எடுத்திருக்கின்றார்.

ஹுரியத் தலைவர்கள் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக இரண்டு குழுக்களை நியமித்திருக்கின்றார். ஒரு குழு இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த மற்றைய குழு பேச்சுக்களை நடத்துவதற்காக பாகிஸ்தான் செல்லவுள்ளது. காஷ்மீர் தொடர்பான எந்தப் பேச்சுவார்த்தையிலும் பாகிஸ்தானையும் ஈடுபடுத்தி அது முத்தரப்பாக நடத்தப்பட வேண்டும் என்பதுதான் அவர்களது நிலைப்பாடாகவும் உள்ளது.

ஆனால் இந்தியா அரசைப் பொறுத்த வரையில் முத்தரப்புப் பேச்சுவார்த்தை என்பது அதனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒரு விடயமாகும். காஷ்மீர் குழுக்களுடன் இருதரப்புப் பேச்சுக்கள் மட்டுமே நடத்தப்படும். பாகிஸ்தான் எல்லைப் பகுதியூடாக மேற்கொள்ளும் ஊடுருவல்களையும் - மறைமுகப் போர் நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொண்டால், பின்னர் அந்த அரசுடன் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக கவனம் செலுத்தலாம் என்பதுதான் இந்தியாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இந்த முரண்பாடுகள்தான் சமாதானப் பேச்சுக்குத் தடையாக இருந்து வந்தது. இப்போது ஹுரியத்தின் ஒரு குழு பாகிஸ்தான் சென்று அந்நாட்டு அரசுடனும், அங்குள்ள காஷ்மீர் குழுக்களுடனும் பேச்சுக்களை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்கான அனுமதியை இந்தியா வழங்கியுள்ளது என்பது ஒரு முக்கியமான திருப்பு முனைதான்.

பாகிஸ்தான் அரசியலில் ஏற்பட்டு வரும் சில மாற்றங்களைக் கணிப்பிட்டே, இந்தத் தளர்வுப் போக்கை இந்தியா கடைப்பிடிப்பதாகத் தெரிகின்றது. பாகிஸ்தானின் இராணுவத் தலைவரும் ஆட்சியாளருமான முஷாரப் இந்தியாவுடன் சமரசம் செய்துகொள்ள வேண்டும் என்ற அழுத்தத்தையும் மேற்கு நாடுகளே கொடுப்பதாக இராஜதந்திர வாட்டாரங்கள் தெரிவித்தன. இந்தியாவுடன் சமரசம் செய்துகொள்ளவிட்டால், நம்மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் விலக்கப்படமாட்டாது என முஷாரப் உணர்வதாகத் தெரிகின்றது.

ரதன்

தொடர்ச்சி 17ம் பக்கம்

# கதைகள் மூன்று

## தீர்வு




"சிறைக் கூடத்தில் அவங்கள் சேர்ந்து விட்டாங்கள்"

"அதனால் என்ன"

"பிரச்சினை மேல் பிரச்சினை"

"கும்பிட பிள்ளையார், படிக்க பத்திரிகை கேட்கிறார்களா?

"இல்லையில்லை"

"பிறகு"

"சுவாசிக்கக் காற்று இல்லாவிடின் தங்களை வெளியில விடட்டாம்."

"வெளியில விடுறதா"

"ஓமோம்- அவர்கள் தங்கள் கோரிக்கைகளில் தீவிரமாக உள்ளனர். எனவே என்ன செய்யிறது"

"என்ன செய்வதா"

"ஏன் சிரிக்கிறியள் என்ன செய்வது என்று சொல்லுங்கள்"

"சிறைவாசல் கதவை நன்கு திறந்து விடுங்கள்"

"ஏன்"

"வெளியே பலர் பசியோடு இருக்கிறார்கள் அவர்கள் வந்து இவர்களைச் சாப்பிடுவார்கள்- தீர்ந்தது பிரச்சினை"

## அவலம்



"ஐயா- ஐயா"

"என்ன நெளியிறது என்ன விசயம்"

"இல்லை ஐயா வந்து..."

"என்ன வந்து... போய் விசயத்தை சொல்லு மிச்ச நேரம் கரைச்சல் கொடுக்க வேண்டாம்."

"ஐயா- ஒரு உதவி ஐயா."

"என்ன"

"ஒரு கடிதம் தாங்கோ-"

"ஏன்"

"என்ர கையில இருக்கிற காயம்- நீங்கள் துவக்குப் பிடியால அடிச்சதால வந்தது எண்டு- அடுத்த சென்றிப் பொயின்ரைத் தாண்டி நான் ரவுனுக்குப் போக வேணும். இல்லாட்டி..."

"ம்... என்ன இல்லாட்டி"

"அடுத்த பொயின்றில இந்தக் காயம் பெருத்து விடும் ஐயா"

## அடிமைத்தனம்

"ஐயா உங்கடை விருப்பப்படி உடுப்பு போட்டிருக்கிறம்."

"ம்..."

"உங்களுக்குப் பிடிக்காத சாப்பாடுகளை நாங்கள் சாப்பிடுறதில்லை."

"ம்"

"நீங்கள் நினைக்கிறதை அடுத்த கணமே நாங்கள் செய்து முடிக்கிறம்."

"ம்"

"எங்கடை உடல், பொருள், ஆவி எல்லாத்தையுமே உங்களுக்கே அர்ப்பணித்துள்ளோம்"

"ம்"

"எங்கடை இனத்தை விரோதித்துக் கொண்டே இதுகளைச் செய்யிறம். அப்படியிருந்தும் நீங்கள் தாற சலுகைகள் எங்களுக்கு காணாது."

"ஹ....ஹ"

"ஏன் ஐயா சிரிக்கிறியள்"



இணுவையூர்
சிதம்பரச் திருச்செந்திநாதன்

# சிறுகதைகள்



# தீட்டு

## தில்லைச் சிவன்

இது ஒரு அந்தக்காலக் கதையல்ல; தொழாயிரத்து தொண்ணூறில் நிகழ்ந்த உண்மை கதை.

கார்த்திகை மழை பெய்து ஓய்ந்திருந்த வேளை. இருவாட்டி நிலம், ஈரமும் தூர்வைப் பதமுமாக இருந்தது. தோட்டத்தைச் சுற்றிப் பார்த்த அருளின் மனதில் புதிய சிந்தனைகள் தோன்றின. தீவின் மேற்கே யுத்தமேகங்கம் சூழ்ந்திருந்தது. அது கடுமையாவதன் முன், தருணத்தைப் பயன்டுத்தி இந்த இரண்டாயிரம் கன்று நிலத்தைக் கொத்தி நட்டுவிட வேண்டும். நாற்று மேடைகளில் புகையிலைக் கன்றுகளும் செழித்திருந்தன. தொழில் இன்மையால் கூலியாட்களைப் பிடிப்பதிலும் கஷ்டம் இராது. எனவே தோட்டத்தை கொத்திப் பரவிக் குளிஎரு வைத்துவிட்டால் போதும். படிப்படியாக நாற்றினை நடலாம் என்று நினைவுகளைச் சுமந்து கொண்டு வீடுநோக்கி நடந்தான்.

போகும் வழியில் சில குடியிருப்புகள் இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் சமூக மக்கள் வாழ்ந்தனர். அவர்களனைவரும் அருளிற்குப் பழக்கமானவர்கள். அவர்களிலும், தனது சமூகத்தவர்களிலும் இருந்து திறமையான சிலரை வேலைக்கு அழைத்து விட்டுத் தனது வீடுபோய்ச் சேர்ந்தான். மறுநாள் நடக்கும் வேலைக்கு வேண்டிய உபகரணங்களையும் கவனித்தான். அந்நாள் வெள்ளிக்கிழமையானதால் எல்லாருக்கும் காலை, மதிய வேளைகட்கு ஆதாரச் சாப்பாடு என்பதால் அதற்குரிய காய் பிஞ்சுகளையும், காலைப் பிட்டுக்குக் கிழங்கும் சேகரித்து வந்தான். இவற்றினோடு வாழைமடற்கட்டு ஒன்றும் வந்தது.

பொழுது விடிந்து காலையானபொழுது, ஒவ்வொரு குடியிருப்பிலுமிருந்து குறிப்பிட்ட கூலியாட்கள் அருளின் வீட்டுமுற்றத்தில் நின்றனர். இவர்களில் குறிப்பிடாத சிலரும் நின்றனர். எல்லாருமாக இருபது பேர்.

வீட்டு முற்றத்தில் தருவிக்கப்பட்டிருந்த மண்வெட்டிகளில் ஒவ்வொன்றை எடுத்துக் தமது தேவைக்கேற்பத்தோது பார்த்துக் தோளில் வைத்துக் கொண்டும், வெற்றிலையைச் சப்பித் துப்பிக் கொண்டும் தங்களுக்குள் ஏதோ குசுகுசுத்தனர். என்னவோ ஏதோவென்று அருள் விசாரிக்கவும், "இவ்வாண்டுப் போகத்துக்குரிய முதல் வேலை உங்களது சாமான் சட்டு விலைஏற்றம். நாங்களும் தொழிலின்மையால் உங்களுடன் பேரம் பேசவில்லை. சென்ற வருடம் பேதமின்றித்தலைக்கு நூறு ரூபா தந்தீர் இவ்வருடம் கூடத்தான் தர வேண்டும்". என்று சொல்லிக் கொண்டே நடந்தனர். பின்னே நடந்த அருளும் விடவில்லை. "காலப்போக்கைப் பார்த்தால் இன்றோ, நாளையோ ஆமி இந்தப் பக்கமாக வரலாம். அப்போது எல்லாவற்றையும் விட்டு ஓடவேண்டியது தான். விதைத்த நெல்லு, வயலில நட்ட புகையிலை தோட்டத்தில இதற்காகச் செய்த தொழிலைச் செய்யமாலிருப்பதா! என்றுதான் தொடங்குகிறேன். இதற்காக உங்கள் கூலியைக் குறைக்கமாட்டேன். ஊரின் வழக்கப்படி எல்லாம் நடக்கட்டும் சுலுத்தான் அல்லது பக்கிரி என்று கொண்டே தோட்டத்தில் இறங்கினான். தொழிலாளர் இரு பகுதியாகப் பிரிந்து நின்று வேலைசெய்தனர். எந்தப்பந்தி முந்துகின்றது என்று அவர்களுக்குள் போட்டி. இதனால் வேலை


சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்த நேரத்தில் அருளின் மனைவி தேனீரும், காலை ஆகாரமும் கொண்டு வந்திருந்தாள். காலை ஆகாரம் வழங்கப்பட்ட பின் கைகளை அலம்பி, வெற்றிலை பாக்கு எடுத்துக்கொண்டு தொழிலாளர் வேலையைத் தொடங்க, அருளும் மனைவியும் மதிய உணவிற்கான ஆயத்தங்களைச் செய்யப்புறப் பட்டனர்.

நேரமும் ஒரு மணியை எட்டிவிட்டது. சாப்பாடு கொண்டுபோகக் சுணங்கிவிட்ட தயக்கம் வேறு. உதவிக்கு ஒருவரைத் தேடி அயற்குடிசையிலிருந்து ஒரு நளவ சமூகச் சிறுவனைக் கூட்டி வந்த அருள், அவன்தலையில் சோறு கறி நிரம்பிய கடகத்தைச் சுமத்திவிட்டார். தான் அவனின் பின்னே வாழை இலை மடல்போன்ற ஏதனங்களையும் குடிநீர்ச் சாடிகளையும் கொண்டு சென்றார்.

தோட்டத்தில் சீமெந்தால் கட்டிய துரவும், கிணறும் கிணற்றைச் சுற்றி நாலைந்து தென்னைகள் அவற்றின் நிழலில் இருந்துதான் சாப்பிடுவோம். அவற்றின் கீழ்ப் போய்நின்ற சிறுவனை எல்லோரும் ஏறிட்டுப் பார்த்தும் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. தலைகளைக் கவிழ்ந்து கொண்டு தம் கருமத்தைப் பார்த்தனர் அந்தப் பெடியன் உணவுக்கடகத்தை கீழே இறக்குவதற்குப் படும் அவஸ்தையை கண்டு காணாதவர்கள் போல் நின்றனர்.

ஒருவரும் உதவிக்கு வராததால் தானாகவே இறக்க முயன்றபோது, சில கறிவகைகள் கீழே கொட்டும் சமயத்தில் அருள் ஓடோடி வந்து உதவியதுடன், சிறுவனை ஆசுவாசப்படுத்திவிட்டுச் சோற்றுக் கடகத்தைக் கிணற்றடியில் தூக்கி வைத்தார். இலைகள், தடல்களைக் கழுவி எடுத்துக் கொண்டு வேலைக்காரரைச் சாப்பாட்டுக்கு அழைத்தார்.

எல்லா வேலையாட்களும் மண்வேட்டிகளைத் துடைத்து ஓரத்தில் வைத்தனர். தலைப்பாகைகளை அவிழ்த்து உதறிக்கொண்டு கைகால் முகம் கழுவிக் கிணற்றடிக்குச் சென்றனர். ஆனால் பள்ளி வகுப்பைச் சேர்ந்த இருவர் மட்டும் தலைப்பாகையை அவிழ்த்து உதறினார்கள். கால்முகங்களைக் கழுவாமலே தங்களுக்குள் எதையோ பேசிக்கொண்டு மண்வெட்டிகளைக் கிணற்றடியில் வைத்தனர். நாங்கள் விரதகாரர்கள். தீட்டுப் பட்ட உணவைப் புசிப்பதில்லை என்று சொல்லிக் கொண்டே நடந்தார்கள். எல்லா விழிகளும் அவர்களைப் பார்த்து விழித்திருந்தன. சிறுவன் குனிந்து கொண்டு கிணற்றுக் கட்டிலிருந்தான்.



# "எழுத்தாளர்களைக் கைதூக்கிவிடும் பணி நிறைவையும் திருப்தியையும் தருகிறது"

## — எஸ். தில்லை நடராஜா

**பதினான்கு வயதிலேயே "மாணவன்" என்ற சஞ்சிகையை அச்சிட்டு வெளியிட்டவர். தந்தையாருக்கு கலை இலக்கியத் துறைகளிலிருந்த ஆர்வமும், அவரின் தூண்டுதலும் இத்துறைகளில் வளரிளம் பருவத்திலேயே நெருக்கத்தை உண்டாக்கிற்று. அரசபணி, நாடக ஆர்வத்திற்கு துலக்கமும் உத்வேகமும் அளித்தது. நெருக்கடியான காலத்தில் அரசாங்க அதிபராக இருந்து தனது மக்களுக்காக எதையெல்லாம் செய்ய முடியுமோ அதை அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாமல் செய்தவர். இப்போது கல்வி அமைச்சில் மேலதிகச் செயலாளர் தமிழ் நூல்களைக் கொள்வனவு செய்து, படைப்பாளிகள் நடுவே பேசப்படுபவர். மானிட நேயம் இவரது கொள்கை. இரண்டு சிறுவர் நூல்கள், சமகால அரசியல் பற்றிய கருத்தாக்கம், இரு பதிப்புக் கண்ட "நிர்வாணம்", சிரிப்புச் சித்திர மான "கல்யாணம் முடித்துப் பார்", "கெட்டிக் கதாவ" சிங்களச் சிறுகதைத் தொகுதியின் சொந்தக்காரர்.**

❒ படைப்பாளியாயும், நடிகனாகவும், நிர்வாக அதிகாரியாகவும் ஆளுமை கொண்ட நீங்கள் முதல் இருதுறை களிலும் ஆர்வம் கொண்டதற்கான சந்தர்ப்பம் எவ்வாறு வாய்த்தது?

தந்தையாரின் ஊக்குவிப்பு காரண மாக சிறுவயது முதல் பல்வேறு வகையான படைப்புகளை வாசிக்க முடிந்ததுடன், சில படைப்பாளிகள் பற்றியும் அவர்கள் சமூகத்தில் ஏற்படுத் திய மாற்றங்கள் தாக்கங்கள் போன்ற வற்றின் தகவல்களை தந்தையார் சேகரித்து அவராகவே சில திரைப் படங்களையும் நாடகங்களையும் பார்வை யிட என்னை அனுப்பிவைப்பார். மிகச் சிறிய வயதிலேயே திரைப்படங்களையும், நாடகங்களையும் பார்வையிட ஏற்பாடு செய்த தந்தை அவற்றைப் பார்வையிட்ட பின், அவற்றை விமர்சனம் செய்யவும் வைப்பார். எனவே எல்லாவிடயங்க ளையும் வெகு நுணுக்கமாக அவதா னித்து மதிப்பீடு செய்தால் தான் தந்தை யைத் திருப்திப்படுத்த முடியும்- ஒரு சம்பவத்தைக் கூறட்டுமா?

உடுப்பிட்டியில் படித்துக் கொண்டிருந்த போது யாழ்ப்பாணத் திலிருந்து அப்பா எழுதிய கடிதத்தில் "அடுத்த சனிக்கிழமை யாழ். நகர மண்டபத்தில் வானொலி நடிகர்களின் "ஸ்புட்னிக் சுருட்டு" நாடகம். டிக்கட் வாங்கிவிட்டேன். அவசியம் வந்து பார்க்க வேண்டும்" என்றிருந்தது. சி. சண்முகம் எழுதி, கொழும்பு கலைச்சங்க பாலச்சந்திரன் தயாரித்த நாடகத்தில் எஸ்.எஸ்.கணேசபிள்ளை- இராஜேஸ்வரி சண்முகம் உட்பட பிரபலமானவர்கள் பங்கேற்றார்கள். நாடகம் முடிந்து தந்தையாரைச் சந்தித்த போது- கதை நடிப்பு மட்டும் கேட்கவில்லை. ஒலி ஒளி காட்சியமைப்பு மேடை நிர்வாகம்- நடிகர்களின் பின்னணி எல்லாம் கேட்டார். இப்படியாக எனக்கு அனுமதி வழங்கி கேள்விகள் மூலம் என்னை உருவாக்கினார்.

எனது உடுப்பிட்டிக்கிராமம் உட்பட அயல் கிராமங்கள் அந்த நாட்களில் நடிகமணி வி.வி.வைரமுத்து, செல்வராசா குழுவினரின் கூத்து நாடகங்கள் நடைபெறும். கால்நடையாகச் சென்று இரவு முழுவதும் நாடகம் பார்த்து அதிகாலை நாடக வசனங்களை உரத்தகுரலில் பேசிக் கொண்டே ஊர்திரும்பியதும்- பல நாட்களுக்கு திரும்பத் திரும்ப நாடகங்களை அயல்வீட்டாருக்கும், பள்ளித்தோழருக்கும் நடித்துக் காட்டியதும் இன்னும் நினைவில் நிற்கிறது. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி மேடைகள் களமமைத்துத் தந்தன.


கலைத்தென்றல் கணேசபிள்ளை- கலாஜோதி சானா, கே.எம்.வாசகர் ஆகியோரது தொடர்புகள் வானொலி மேடை நாடக வாய்ப்புகளைத் தந்தது. குறிப்பாக "அசட்டு மாப்பிள்ளை", "வாடகை வீடு" தொலைக்காட்சி நாடகமான "புதிய அத்தியாயம் ஆரம்பமாகிறது" ஆகியன எனக்கு திருப்தியையும், பாராட்டுகளையும் பெற்றுத் தந்தன.

இன்னொரு தடவை தந்தையாரைப் பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு சாதாரண சாப்பாட்டுக் கடையான "தில்லைப்பிள்ளை கிளப்"பில் வேலை செய்தாலும் நாற்பது ஐம்பதுகளில் "ஆனந்தவிகடன் சிங்காரம்" என்ற பட்டப்பெயரும் அவருக்கிருந்தது. அக்காலப் பகுதியில் ஆனந்தவிகடன் குறுக்கெழுத்துப் போட்டிகளில் பரிசில் பெறும் பாக்கியசாலிகளில் அப்பாவும் ஒருவராக இருந்தார். "ஆனந்தவிகடன்", "நாரதர்" போன்ற பத்திரிகைகளில் அப்பாவின் பெயரையும் முகவரியையும் அடிக்கடி பார்த்தபோது எனது பெயரும் அப்படி வரவேண்டுமென்று விரும்பினேன். இந்த விருப்பம் வாசிக்கவும் எழுதவும் தூண்டுகோலாக அமைந்தது என்றும் குறிப்பிடலாம்.

நிர்வாக சேவைக்கு வருவதற்கு படைப்பு நடிப்பு ஈடுபாடுகள் தந்த ஆற்றல் காரணமாக அமைந்தாலும் நிர்வாக சேவையில் உயர்வு பெறுவதற்கும் நிலைத்து நிற்பதற்கும் கடமைக்கு முக்கிய இடம் முதல் இடம் கொடுப்பதால் வசதியைப் பொறுத்தே, இப்போது இவற்றில் ஈடுபாடு கொள்கின்றேன்.

❒ நிர்வாகியாக இருந்தபோதே நெருக்கடியும் அவலமும் நிறைந்த வாழ்வைச் சந்தித்து அனுபவசாரம் பெற்றவர் நீங்கள். இவற்றில் தங்களால் மறக்க முடியாத காலம் எது? இவற்றைப் படைப்பாக எழுதும் எண்ணம் உண்டா?

பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு பதவிகளிலும் கடமையாற்றினாலும் வவுனியா, கிளிநொச்சி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தை எளிதில் மறக்கமுடியாது. நூற்றுக் கணக்கான புதுப்புது அனுபவங்கள். பலமுறை செத்துப்பிழைத் தாலும் சில தடவை வைக்கும் கையொப் பங்கள் பல கோடி பெறுமதியானவை என்பதுடன் பல உயிர்களையும் காப்பாற்றியிருக் கின்றது. புகழ் வசதிகள் ஒரு புறம் மகிழ்ச்சியைத் தந்தாலும் நெஞ்சை நெகிழ வைத்த விடயங்கள் ஏராளம். பயங் கரத்தை ஏற்படுத்திய சம்பவங்களும்



ஏராளம். சந்தர்ப்பம் ஏற்பட்ட போது சிலவற்றை நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டதும் உண்டு. உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களூடாக அவை செய்திகளாக்கப்பட்டு பரவலாக்கப் பட்டதும் உண்டு. காலம் வரும் போது படைப்புகளாக எழுதும் எண்ணமும் உண்டு. அதற்கு முன் குறிப்பாக உயர் உத்தியோகத்தர்களுக்கும் பொதுவாக எல்லோருக்கும் பயன்படக் கூடிய வகையில் "கூட்டம் விழா கொண்டாட்டம்" என்ற தலைப்பில் ஒரு சிறு நூலை எழுதும் எண்ணம். மறக்க முடியாத அன்றைய அனுபவங்களை வைத்து "இப்படி ஒருகாலம் இருந்தது" தலைப் பிட்டு சில அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பும் மனம்- தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகள் மூலம் வானொலி பத்திரிகை தொலைக்காட்சிக்காக சுமார் பத்து ஆண்டுகளாக பலர் கண்ட பேட்டிகளின் ஒரு பகுதியையாவது "சுவையான சந்திப்புகள்" எனத் தொகுத்தால் எப்படி? இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கின்றேன்.

❒ ஒரு படைப்பாளி- மானிட நேயமிக்க நிர்வாகி என்ற விதத்தில் உங்களைப் பாதித்த நிகழ்வை எழுத்தாகப் பதிவு செய்திருக்கிறீர்களா? அதன் தாக்கம் என்ன?

என்னை நன்றாகப் பாதித்த நிகழ்ச்சிகளை இன்னும் பதிவு செய்யவில்லை என்று சொல்வது தான் பொருத்தம். பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு விமான மூலம் வரும் போது இடைத்தங்கல் பயணியாக (TRANSIST PASSENGER) இலங்கை வந்து சென்றது சந்தோஷம்- பிறந்த மண்ணில் சொந்தச் சகோதரியை அனுமதி பெற்று காவல் கட்டுப்பாடு களுக்கு மத்தியில் சுமார் 10 நிமிடங்கள் சந்தித்தது ஒரு "திரில்" அனுபவம்- அரசாங்க அதிபர் அடையாள அட்டை யைப் பார்த்த பின்பும் கூட எனது பிரயாணத்தை தடுத்து நிறுத்திய சாதாரண படைவீரன்- உலகமெல்லாம் செல்லும் செய்தித்தாளின் ஒரு பிரதியை எனது வாசிப்புக்காக எடுத்துச் சென்ற போது- தடைசெய்யப்பட்ட பொருளை பெருமளவில் கடத்திச் செல்பவனுக்கு நேரும் கஷ்டங்கள் போல கஷ்டப்பட்டது- இப்படி இன்னும் பலபல... அவை எழுத்தாக வராமலா போகப் போகிறது?

❒ சிறுவர் இலக்கியத்தில் பங்களிப்புச் செய்து வருகிறீர்கள்... இத்துறைக்கு வந்ததற்கான காரணம்?

என்னை ஆளுமையுள்ளவனாக ஆக்கிய அப்பா சிறுவர் நூல்களையும் வாங்கித்தந்தார். மிகச்சிறிய வயதில் கல்கண்டு (ஆரம்ப காலத்தில் கேள்வி பதில் சினிமாச் செய்திகள் மிகக் குறைந்த பக்கங்களிலேயே இடம் பெற்றன.) கரும்பு போன்ற சஞ்சிகைகள் அழ. வள்ளியப்பா- வாண்டுமாமா போன்றவர்களின் நூல்களும் வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டியது. பன்னிரண்டு, பதின்மூன்று வயதுகளில் பிரபலமான பத்திரிகைகளிலும் வானொலியிலும் சிறுவர் பகுதிகளில் எனது ஆக்கங்களுக்கு இடம் கிடைத்தது. பதினான்கு வயதில் "மாணவன்" என்ற சஞ்சிகையை அச்சிட்டு வெளியிட்டேன். இரண்டு இதழ்கள் வெளியான மாணவனின் முதலாம் இதழைப் பொன்னிலும் மேலாகப் போற்றி இன்னும் என்னுடன் வைத்திருக்கிறேன்.

**நேர்காணல்**
**செ. யோகநாதன்**
**த. நடராசா**

(தொடர்ச்சி 17ம் பக்கம்)




திடுக்கிட்டெழுந்தாள் கமலா. விடிநிலாவின் சோம்பலான வெளிச்சம் யன்னல் வழியே அறையினுள் விழுந்திருந்தது. காற்றும் மௌனமாய் எங்கோ மறைந்து விட்டாற் போல சுற்றுப் புறமெல்லாம் அசைவற்றிருந்தது. இருளிற்குப் பழகிவிட்ட கண்கள் நேரத்தினைத் தேடின. நாலு ஐம்பது.

ஆனந்தியைப் பார்த்தாள். "ம்மா" என்ற முனகல். மழலையுடன் புரண்டு படுத்தாள். நேற்று இரவு குதூகலமாகப் பாடிக் கொண்டிருந்தவள் தகப்பனின் அதட்டலுக்குப் பிறகு முகத்தைச் சுழித்தவாறே தாயை இழுத்து அணைத்தபடியே படுத்துவிட்டாள். அவளைப் பார்க்கவே கமலாவுக்கு பாவமாக இருந்தது. ரவியோடு அவளுக்காகப் பேசினால் எரிந்து விழுவான். இன்னொரு தலைவலி என்று சொல்லிக் கொண்டு சண்டையைத் தொடங்குவான். இரவே நரகமாயிருக்கும். இப்போது போல நேரத்தோடு எழுந்திருக்க முடியாது. எதுவும் பேசாமல் ஆனந்தியின் தலையை இதமாக வருடியவாறே தானும் நித்திரையாகி விட்டாள்.

ரஞ்சன் நேற்றுக் கம்பெனியில் எல்லாரையுமே திட்டினான். வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டிய கவுண்களில் சில, அவற்றின் தரத்துக்கு குறைந்த தாயுள்ளது என்று வந்திருந்த முறைப்பாடே அவனது எரிச்சலுக்கு காரணம். அதைவிட ஜெர்மனியிலிருந்து ஒரு நிறுவனம் அவர்களிடம் புதிய கொள்வனவு ஒன்றுக்கு அவசரக் கடிதம் அனுப்பியிருந்தது. ஒரு மாதத் திற்குள் அந்த ஆடைகளைத் தயார் செய்து அனுப்பவேண்டும். எனவே எவரும் எக்காரணங் கொண்டும் விடுமுறை கேட்கவே கூடாதென்று உறுமலோடு சொல்லி விட்டான். எல்லோர் முகத்திலும் அப்போது வேதனையும் கலவரமும் நிறைந்தது. தொடர்ச்சியாக வேலை செய்கின்றதை நினைத்த போதே உடலே புண்ணாக நொந்ததை உணர்ந்தனர்.

ரஞ்சன் சொன்னான்-

"உங்களுக்கே தெரியும். எங்களுடைய கம்பெனி வாசலிலே மூன்று மொழியிலும் டெயிலர்ஸ், கட்டர்ஸ், ஹெல்ப்பேர்ஸ் தேவை என்று "போர்ட்" எழுதி வைத்திருக்கிறம். உங்களில் எத்தனை பேர் வராமல் நின்றாலும் பரவாயில்லை. அடுத்த நாளே ஆட்களை எடுத்திடுவோம். பதினைந்து நிமிஷம் பிந்தி வந்தாலே, கம்பெனிக்குள்ளை வரவே வேண்டியதில்லை. வீட்டுக்குப் போய் விடலாம். இதை இனி நான் சொல்லப் போற தில்லை..."

கமலா இப்போதும் தன் அருகே அவனது குரல் கேட்கிறாற்போல எரிச்சலடைந்தாள். யன்னல் வழியாக வெளியே பார்த்தாள். அடிவானிலே சரிந்து கொண்டிருக்கிற நிலவை பெரிதான மேகமொன்று மூடிக்கவிந்தவாறு கீழிறங்கிற்று, ரோஹிணி நட்சத்திரம் தணற் பொட்டாய் மின்னிற்று.

கட்டிலில் இருந்து எழுந்தாள். மணி நாலு ஐம்பத்தைந்து. மேசையில் இருந்த மணிக்கூட்டின் அலாரப் பொத்தானை அமுக்கி விட்டு குளியலறையை நோக்கி நடந்தாள்.

குளித்துவிட்டு வெளியே வந்தபோது ரவி புன்னகையோடு நின்றான். அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவன் விறுவிறுவென்று உள்ளே நுழைந்தான். தேநீர் தயாரித்து விட்டு, அடுப்பில் இட்டலிச் சட்டியை வைத்தவளின் மனதில் அவனது புன்னகை வந்து நின்றது. இப்போது மனதினுள்ளே கலவரம் அழுத்தமாகக் கால்பதித்தது. அந்தப் புன்னகையின் அர்த்தம் அவளுக்குத் தெரியும்.

சட்டென்று அவன் அவளைப் பின்புறமாக வந்து அணைத்துக் கொண்டான். கழுத்துப் புறத்தில் வெறியோடு முத்தமிட்டான். கமலா அவனை எரிச்சலோடு உதறினாள். அதை எதிர்பாராத ரவியின் முரட்டுப்பிடி தளர்ந்து விடுபட்டது.

"இரவு எத்தனை தரம் உன்னை எழுப்பினனான். பிரேதம் போலக் கிடந்தனி..."

வாயில் விரலை வைத்தாள் கமலா.

"ஆனந்தி எழும்பி விடும்..."

அவளது கையைப் பற்றினான் முரட்டுத்தனமாக.

"நீயென்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய். நான் உணர்ச்சி ஏதுமில்லாத மரக்கட்டை என்றா நினைத்துக் கொண்டிருக்கிறாய்?"

சாந்தமாக அவனைப் பார்த்தாள்.

"பாருங்க... இன்றைக்கு நான் கட்டாயம் வேலைக்குப் போக வேண்டிய ஆகவேணும்..."

அவளது கையை உதறினான்.

"இன்றைக்கு என்ன கிழமை?"

"இனி வாற மூன்று மாத காலத்திற்கு இப்படித்தான் ஞாயிற்றுக் கிழமையிலும் லீவு நாட்களிலையும் வேலை செய்ய வேணும். பதினைந்து நிமிஷம் பிந்தி விட்டாலே வேலை போய் விடும்..."

அவன் பற்களை நறுவினான்.

"அப்போ வீட்டுத் துணிமணிகளைத் தோய்க்கிறது யார்? சுத்தம் பண்ணுறது யார்? ஞாயிற்றுக் கிழமையிலை தான் வாய்க்கு ருசியாக சாப்பிட முடியுது. அதைச் செய்யிறது யார்?"

வேதனையோடு சிரித்தாள் அவள்,

"வேறை யார்? நான் தான். வேலை முடிஞ்சு வந்தும், இனி விடியற்காலையிலை நாலு மணிக்கு எழுந்து நான் தான் இந்தச் சமையல் வேலையைச் செய்ய வேணும்... இந்தக் கிழமை மட்டும் பொறுங்க. அடுத்த ஞாயிறு கட்டாயம் கோழிக்கறி வைக்கத் தருவன். கட்டாயம்..."

"இப்ப நீ என்ன சொல்லுறாய்?"

கெஞ்சியகுரலில், "பாருங்க, இப்பவே பத்து நிமிஷம் போயிட்டுது.. இனி, சமைச்சு... அடுப்பிலை சுடுதண்ணி கொதிச்சுப் பொங்குது..." என்றாள்.

"என்னைப்போல அதுவும் கொதிக்குது..." என்றவன் அவளை வாரித்தூக்கினான். அவள் சில கணங்கள் காலை உதறினாள். முரண்டு பிடித்தால் அவன் முரட்டுமிருகமாகி விடுவான் என்பது அவளுக்குத் தெரியும். மரக்கட்டையானாள், உடல் பச்சைப் புண்ணாக நொந்து வலித்தது. வாயை மூடியவாறே விசும்பினாள். அவன் முகத்தில் காறித்துப்ப வேண்டும் போல இருந்தது. அருவருப்போடு அவனை ஏறிட்டாள்.



கம்பனி வாசலுக்கு வந்தபோது ஒன்பது மணி ஒரு நிமிஷம், நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள். ரம்யாவும் அவளின் பின்னே வந்தாள். கமலாவை பரிவோடு பார்த்து கனிவாகக் கேட்டாள்.

"கமலா, என்ன உனக்கு முகமெல்லாம் வீங்கியிருக்கிறது. இரவு முழுவதும் அழுதாயா?"

கமலாவின் மனதினுள்ளே துயரம் திரண்டு பொருமிற்று.

ஏதாவது சொன்னாலே அழுகை வந்துவிடும் போலிருந்தது. புன்னகையோடு வருவித்தாள்.

"சொல்லமாட்டாயா?" ரம்யா அவளை உலுப்பினாள்.

"பஞ்க் கார்ட்"டை இந்திராணி யிடம் அவசர அவசரமாகக் கொடுத்து விட்டு, "ரம்யா, இரவு முழுவதும் முட்டுவலி. நித்திரை யில்லை, அதை விட இன்றைக்கு ஞாயிற்றுக் கிழமையும் வேலைக்குப் போக வேணுமென்று ரவியோடும் சண்டை. அது தான் என்றாள் கமலா.

"என் வீட்டிலும் இதே கதைதான், கல்யாணம் முடிக்காமலே இருந்தால் நிம்மதியாக இருந்திருக்கலாம்..." பெருமூச்சு விட்டாள் ரம்யா.

"ரஞ்சன் எங்களையே பார்க்கிறான்..." என்றவாறே தனது இடத்துக்கு விரைந்தாள் ரம்யா.

இன்றைக்கு அந்த மண்டபமெங்கும் அனல் காற்று அதிக உஷ்ணமாக இருப்பதை உணர்ந்தாள் கமலா. தையல் இயந்திர ஓசை ஒரேலயத்துடன் கேட்டது மிக மிக மெல்லிதாக குண்டூசி விழுந்தாலே சத்தம் கேட்கிற ஓசை ஒடுக்கம்.

"மெடம்..."

மெல்லிய குரலைக் கேட்டு பின்னாலே திரும்பினாள் கமலா. "ஹெல்ப்பர்" சந்திரா ஏக்கம் நிறைந்த பார்வையுடன் நின்றாள். பதினான்கு வயதானவள். வயதை மீறிய வளர்த்தி பதினேழுவயதென்று கூறி வேலைக்குச் சேர்ந்தவள் சந்திரா என்பது அங்கு வெகு சிலருக்கு மட்டுமே தெரியும். எப்போதும் மெதுவாகவே பேசுவாள். தனியாகவே தான் எவ்வேளையிலும் இருப்பாள்.

"என்ன சந்திரா?"

"மெடம்... ருக்மணிக்கு சுகமில்லை... அழுகிறா..."

"என்ன சுகமில்லை..." அவசரம் தொனித்தது குரலிலே.

"வந்து பாருங்க..."

சந்திராவைப் பின் தொடர்ந்தாள் கமலா, யோசனையோடு.

துணிகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மேசையின் ஓர மாக, அதில் சரிந்தவாறே கண்ணீர் வழிய நின்றாள் ருக்மணி. கறுப்பு நிறமான பளபளக்கின்ற கண்களுள்ள பதினைந்து வயதுச் சிறுமி.

கமலா அருகே சென்று அன்போடு அவளது முகத்தை நிமிர்த்திவாறு கேட்டாள். "ருக்கு என்ன சுகமில்லை..."

மௌனமாக தலையைக் குனிந்தாள் அவள் சட்டென்று நிமிர்ந்தவளின் கண்களிலே சொல்லுக்கடங்காத நாணம். பிறகு தலையைக் குனிந்தவாறே, தன் கையை உயர்த்தி விரல்களையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

"மேடம் ருக்கவுக்கு டிரஸ் மாற்றவேணும்..."

எதுவும் விளங்காமலே சொன்னாள் சந்திரா.

கமலா ருக்மணியிடம், உண்மையா" என்றாள்,

கண்களைத் துடைத்தவாறே, "ம்ம்" என்றாள் ருக்மணி.

கொஞ்சத்தூரம் தள்ளி, துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த லட்சுமியை சைகை செய்து அழைத்தாள் கமலா.

"லட்சுமி... இந்திராணியை இங்கே கூட்டிக் கொண்டு வா... ஏனென்று கேட்டால், ருக்மணி "அற்றெயின்ட்" ஆகிவிட்டதாகச் சொல்லு..."

புன்னகையோடு ருக்மணியைப் பார்த்து விட்டு, அங்கிருந்து வெளியே நடந்தாள் லட்சுமி. சந்திரா ருக்மணியை வினோதமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

தொடரும்...

## நீடிக்கப்பட்ட காஷ்மீர் ... 13ம் பக்கத் தொடர்ச்சி

சவுதி அரேபியா போன்ற நாடுகளின் ஆலோசனையை ஏற்று ஆயுள் கைதியாக வைக்கப்பட்டிருந்த அந்நாட்டின் முன்னாள் பிரமர் நவாஸ் ஷெரிப் மற்றும் அவர்களது குடும்பத்தினர் நாட்டை விட்டு வெளியேறி சவுதி அரேபியாவில் வசிப்பதற்கு முஷாரப் அனுமதி வழங்கியுள்ளார். ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் அவரது சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதுடன் இருபத்தைந்து வருடங்களுக்கு அரசியலில் ஈடுபடக்கூடாது எனவும் அவருக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. முஷாரப்பின் மற்றொரு அரசியல் எதிரியான பெனாஸிர் பூட்டோ, ஏற்கனவே லண்டனில் அடைக்கலம் புகுந்திருக்கின்றார். அவர் மீதும் லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருக்கின்றன. பாகிஸ்தானில் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கக் கூடிய இந்த இரு தலைவர்களும் அஞ்ஞானவாசம் அனுப்பப்பட்டிருப்பது முஷாரப்புக்கு சாதகமான ஒரு விடயம். பாகிஸ்தானில் அரசியல் போட்டிகளை அவர் இப்போதைக்கு எதிர்கொள்ள வேண்டிய நிலை இல்லை. இதனால் காஷ்மீர் பிரச்சினையை வைத்து அரசியல் நடத்த வேண்டிய தேவை அவருக்கு இன்றைய நிலையில் ஏற்படப் போவதில்லை என்றே கருதப்படுகின்றது.

இதனைவிட, பின்லேடன் விவகாரத்தில் ஆப்கானிஸ்தானை எச்சரித்திருக்கும் அமெரிக்கா, இவ்விடயத்தில் பாகிஸ்தானையும் சந்தேகக் கண்களுடனேயே நோக்குகின்றது. இவை அனைத்தும் தன்னுடைய தீவிரவாத இஸ்லாமிய நிலைப்பாட்டை தளர்த்திக்கொள்ள வேண்டிய தேவையைத்தான் பாகிஸ்தானுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இதனால், எதிர்வரும் மாதங்களில் காஷ்மீர் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே தொடரும் சர்ச்சைகளுக்கு முடிவு கட்டப்பட்டு, அமெரிக்காவின் ஆலோசனைப்படி எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டையே இரு நாடுகளுக்கும் இடையேயான நிரந்தர எல்லையாக மாற்றியமைக்கக் கூடியவிதமாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படலாம் என்றே புதுடில்லி வட்டாரங்கள் நம்புகின்றன..!

## எழுத்தாளர்களை... 15ம் பக்கத் தொடர்ச்சி

மாணவப் பருவத்தில் எழுதி சுதந்திரன் "வாரஇதழில் வெளியான சிறுவர் தொடர்கதை பூர்த்தியான இதழில் எனது புகைப்படத்துடன் என்னை "மந்திரக் கதை மருமகன்" என இடம் சூட்டி மகிழ்ந்தார்- தற்போதைய தினமுரசு துணையாசிரியர் திரு இரா.பத்மநாதன். மாணவனாக இருக்கும் போது எழுதிய இன்னுமொரு சிறுவர் தொடர்கதை "கடற்கன்னி". வேலைக்கு சேர்ந்த வருடமே "ராதா"வில் எனது சிறுவயது தோற்றத்திலுள்ள படத்துடன் வெளியானது. இந்த இரு சிறுவர் கதைகளும் நூலுருவம் பெற்றபோது ஒரு லட்சம் பிரதிகள் அச்சாகின என்பது குறிப்பிடத்தக்கது.

❒ ஈழத்துப் படைப்பாளிகளுக்கு மிக உற்சாகத்தையும் உதவியையும் வழங்குபவராக விதந்துரைக்கப்படுகிறீர்கள். இதைப்பற்றி...?

சிலவேளைகளில் அதிர்ஷ்டவசமாக மனதில் ஏதோ எண்ணுவேன். அவை நிறைவேறிவிடும். புத்தகங்கள், விழாக்கள், மேடைகள் ஆகியவற்றுக்கும் எனக்கும் நல்ல ராசிப் பொருத்தம். வடக்கு கிழக்கு மாகாணசபை, இந்து சமயபண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் ஆகிய வற்றில் தமிழ்ப் புத்தகங்கள் வாங்குவதும் எனது கடமைகளில் ஒன்று. கல்வி அமைச்சுக்கு வந்தபோது அதனை தொடர எண்ணியபோது அதைச் செயற்படுத்தக் கூடிய அதிர்ஷ்டம் கிடைத்தது. இத்திட்டத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாவுக்கு தமிழ்ப் புத்தகங்களையும் குறிப்பாக இலங்கை எழுத்தாளர்களின் புத்தகங்களையும் வாங்கக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக இறைவனுக்கும், சிறுவயது முதல் பணம் கொடுத்து புத்தகம் வாங்கவும், படிக்கவும் தூண்டிய தந்தையாருக்கும் நன்றி. ஒரு சந்தர்ப்பத்தில் இலட்சக்கணக்கானவர்களுக்கு உணவு வழங்குவது எனது கடமையாக இருந்தது. அதைவிட சில நூறு எழுத்தாளர்களை கைதூக்கிவிடும் பணி நிறைவையும் திருப்தியையும் தருகிறது.

❒ நூல்கள் கொள்வனவு செய்வதில் பாராட்டைப் பெறும் நீங்கள் தமிழ்ப்பதிப்புத்துறைபற்றி அறிவீர்கள். தமிழ் நூல்களைக் கழிவின்றி கொள்வனவு செய்ய அரசுக்குப் பரிந்துரைத்தால் என்ன?

தமிழ்ப் பதிப்புத்துறை பற்றி நன்றாக அறிவேன். ஆனால் நூல் கொள்வனவுக்கு நிதி தருவது தமிழ் மொழி தெரியாத பலர் பணியாற்றும் உலக வங்கி அவர்கள் உள்ளடக்கம், உருவம், நல்லதாள், அழகான தெளிவான எழுத்து, கட்டமைப்பு எல்லாவற்றையும் சொல்லியதுடன் கழிவு விடயத்தையும் கண்டிப்பாகச் சொல்கின்றார்கள். அதாவது, விற்பனை விலையில் முப்பது வீதம் (30%) கழித்துக் கொள்வனவு செய்ய வேண்டுமென்றும் எல்லாவகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நூலானால் முப்பது வீதம் கழிவு என்பதை ஒரு புறம் வைத்துக் கொண்டு ஐந்நூறு பிரதிகளை கொள்வனவு செய்கிறோம் என்ற விடயத்தையும் தயவு செய்து மனதில் எடுத்துக் கொள்ளுங்கள். சில மொழிகளில் ஆயிரக்கணக்கில் இலட்சக் கணக்கில் பிரதிகள் விற்கலாம். தமிழில் வெளியாகும் பிரதிகளை அப்படி விற்பது சிரமம். எனவே பதிப்பாளர்களும் எழுத்தாளர்களும் சில விடயங்களை புரிந்து கொள்வார்கள் என எண்ணுகின்றேன்.

## தொடரும் தடைகளால்... 9ம் பக்கத் தொடர்ச்சி

இதே சமயம் குடா நாட்டில் சமீப நாட்களில் மீண்டும் மோதல்களும் சண்டைகளும் உக்கிரம் பெறத் தொடங்கியுள்ளன. இந்த மோதல்கள் மக்கள் குடியிருப்புக்களை விலகியே இடம்பெறுவதால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ள போதிலும், இந்த உளவியல் ரீதியான தாக்கங்களைப் பொதுமக்களால் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.


அண்மையில் நடைபெற்று முடிந்த க.பொ.த. பரீட்சையின் போது படையினர் வலிகாமத்தில் இருந்த ஆட்லறி நிலைகளில் இருந்து சரமாரியாகப் பொழியப்பட்ட ஷெல்கள் மாணவர்களை கிலி கொள்ள வைத்தது. சுன்னாகம், தெல்லிப்பழை, மல்லாகம், வசாவிளான், அச்செழு, யாழ்ப்பாணம் என்று பரவலாக உள்ள ஆட்லறி நிலைகளில் பொருத்தப்பட்டுள்ள ஆட்டிலறிகள் ஷெல்களை ஏவும் போது பெரும் அதிர்வுகள் உண்டாக்குகின்றன.

இந்த அதிர்வுகள் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்த மாணவர்களின் மன நிலையைப் பாதித்திருந்ததோடு, பரீட்சை எழுதிக் கொண்டிருந்த மாணவர்கள் பெரும் மனக் குழப்பத்துக்கும் பதற்றத்துக்கும் உள்ளாக நேரிட்டதாக பரீட்சை மேற்பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர். பரீட்சை இடம் பெற்ற இரு நாட்களில் மிக மோசமான ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு படை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அத்தோடு மிக- 27 விமானங்களும் பரீட்சை நடைபெற்ற வேளைகளில் கூட தாழப்பறந்து தாக்குதல் நடத்தியமை மாணவர்களின் மனநிலையைப் பெரிதும் பாதிக்கச் செய்துள்ளது. இது ஏற்கனவே இடம்பெயர்ந்து கல்வி வாய்ப்புக்களை இழந்து போயிருக்கும் யாழ். மாணவர்களின் பெறுபேறுகளில் பெரும் வீழ்ச்சியை உருவாக்கக் கூடும் என்று ஆசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

தெல்லிப்பழையிலுள்ள ஆட்லறி நிலைகள் இங்குள்ள மனநோய் மருத்துவமனைக்கு அருகேயிருப்பதால் உளரீதியாக பாதிக்கப்பட்டவர்களை காப்பாற்றுவதற்கு இது தடையாக இருப்பதாகவும் மருத்துவ வட்டாரங்களில் பரவலாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. குடாநாட்டு மக்களின் உளவியல் பாதிப்புக்களைத் தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் படை நடவடிக்கைகள் மட்டும் தொடர்கின்றன.

## சந்தி



(சென்றவாரத் தொடர்ச்சி..)

இலங்கை பெரும்பாலும் பல்லின மக்கள் வாழும் நாடாகும். இந்தப் பல்லின அரசில் பல்லின மக்களின் தனித்துவத்தை ஏற்றுக் கொள்ளல் வரலாற்று ரீதியில் கட்டியெழுப்புவதற்கு ஆதிக்கம் செலுத்திய ஆட்சியாளர்களுக்கு முடியாது போயிருந்தது ஆயினும், இதற்கான பதில் தேசிய இன அடிப்படையில் நாட்டைத் துண்டுகளாக பிரிப்பதல்ல.

இலங்கையில் உக்கிரமடைந்துள்ள பிரச்சினையில் பிரிந்து போகும் கோட்பாடு ஒவ்வாத ஒன்றென நாம் சுட்டிகாட்டுவது இனவடிப்படையிலாகும். உண்மையாகவே நாம் பிரிந்து போக வேண்டியது தமிழ் மக்கள் சிங்கள மக்களிடமிருந்தோ, சிங்கள மக்கள் தமிழ் மக்களிடமிருந்தோ அல்ல. இலங்கை வாழ் மக்கள் என்றடிப்படையில் இன்று நாம் பிரிந்து போக வேண்டியிருப்பது கடன் மூலதனத்தின் மூலம் எம்மை நாலாதிசைகளிலும் சுற்றி வளைத்து தாக்கி சிறைப்படுத்தி வைத்திருக்கும் ஏகாதிபத்தியத்திடமிருந்தாகும். உலக வங்கி நாணய நிதியம் சர்வதேச வர்த்தக அமையம் போன்ற ஏகாதிபத்திய வணிகத்துறையும் வேறுசில அமைப்புகளும் இன்று எம்மை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது.

# பிரிவினை யாரிடமிருந்து? எதற்காக?

ஏகாதிபத்தியவாதிகள் எமக்கு அவர்களின் சுரண்டலிருந்து விடுபடுவதறகான உரிமையை ஏற்க மறுக்கின்றனர். அதேவேளை சிங்களவர்களிடமிருந்து பிரிந்து போவதற்கு தமிழனுக்கான உரிமையை ஏற்கிறது. எதனால் என்றால், சிங்களவன், தமிழன் என்று நாம் பிரியும் அளவுக்கே, உண்மையான எதிரியிடமிருந்து பிரிந்து போவதைப் பற்றி நாம் சிந்திக்க மாட்டோம். என்பதை கிரகித்தாலும் கூட அக்காரியம் அவ்வளவு சுலபமானதல்ல. தமிழ் ஈழ அரசொன்று உருவாக்கப்பட்டு விட்டதாக சற்று சிந்தியுங்கள்! உலக பல்தேசிய இரத்தவெறியர் அந்த பூமிக்கு பாய்ந்து வரமாட்டார்களா? கடன் பொறியில் இந்த ஈழ போலி அரசு சிறைப்படாதா? சதாகால அடிமைத்தனம் இந்தப் போலி அரசுக்கு உரிமையாக்கப்படாதா? எத்தியோப்பிரயா,போன்ற நாடுகளுக்கு ஏற்பட்டது போல் வறுமை, பசி, யுத்தம் வரட்சி போன்ற நிலைமைகள் கட்டாய பலனாக மாற்றப் படாதா? இறுதியாக மிகவும் பலவீனமான இரண்டு அரசுகளை ஆட்டுவிப்பதற்கு மேற்குலக ஏகாதிபத்தியத்திற்கு சுலபமாகாதா? (இன்று எத்தியோப்பியா எரித்திரியாவை ஆட்டுவிப்பதுபோல்)

கார்ல் இன்டபேத் போன்றோர் பிரிந்து போகும் உரிமையை எமக்கு சொல்லிக்கொடுக்க வருவது இதற்காகவேயாகும். இலங்கை வாழ் தமிழ் மக்கள் இந்த உண்மையை புரிந்துக்கொள்ளும் அளவுக்கு பிரிந்து போவது யாரிடமிருந்து என்பதை தேர்வு செய்வது கஷ்டமான காரியமல்ல.

இன்யைத் தேவை, சிங்கள மக்களிடமிருந்து பிரிவதற்கு வாய்ப்பளிக்கும் தமிழ் மக்களின் அரசியல் அல்ல. அனைவருக்கும் எதுவித இனவேறுபாடின்றி, உரிமைகளை வழங்குகின்ற மனிதாபிமான அரசாக இந்த நாட்டை மாற்றியமைக்கும் அரசியலாகும். அதனுடன் ஏகாதிபத்திய பன்முக சுரண்டலிருந்து விடுக்கின்ற அரசுக்கான அரசியலாகும். தேசிய சுதந்திரத்தை கைப்பற்றிக் கொள்கின்ற அளவுக்கு ஒற்றுமை, சகோதரத்துவம், தேசிய இனச் சுதந்திரம் யதார்த்தமாகும். அதை நோக்கியே எமது பாதங்களை நகர்த்த வேண்டும். பிரிவினைக்கான திசை, சகலரின் அழிவுக்கான திசைவழியாகும். தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்து, தேசிய இனங்களிடையே சுந்திரம் ஒற்றுமை சகோதரத்துவத்தை வென்றெடுக்கும் திசையானது, ஏகாதிபத்தியத்திற்கு சந்தோஷமின்மையும், இலங்கை வாழ் சகல மக்களுக்கும் சந்தோஷத்தை கொடுக்கும் திசைவழியாகும். எந்தப் பாதையை நாம் தேர்ந்தெடுப்போம்? பிரிந்து அழியும் பாதையா? இணைந்து வெற்றிக் கொள்ளும் பாதையா?

விமல் வீரவன்ச
பிரச்சார செயலாளர்
மக்கள் விடுதலை முன்னணி

# சிறுபான்மை மக்களின் நெருக்கடியும்....

5ம் பக்கத் தொடர்ச்சி...

இரண்டு தலைவர்கள் இருந்தனர். ஸ்ரீ நிஸ்ஸங்கா, வில்மட் பெரேரா அவ்விருவருமாவர். இடது சார்புத் தலைவர்களினது செயற்பாடுகள், சம்பிரதாய தமிழ் சிங்கள முஸ்லிம் தலைவர்களின் செயற்பாடுகளுக்கு வித்தியாசமானவைகளாக இருந்த போதிலும், அவர்கள் தேசிய சுதந்திரத்தை தேவையற்ற அளவுக்கு வகுப்புவாதப் போராட்டங்களாக மாற்றிக்கொள்ளும் முயற்சியின் காரணமாக பெற்றுக்கொள்ள முடியுமான வெற்றிகளையும் குறைத்துக் கொள்ளக் காரணமாக அமைந்தன.

யாழ்ப்பாண இளைஞர் பேரவை பரந்த அளவிலாக முன்னேறிக்கொண்டு இருந்தது நாட்டின் அனைத்து இனங்களையும் ஒன்று திரட்டி முன்னெடுக்கப்படும் அஹிம்சை முறையிலான செயற்பாடுகளின் மூலம் சுதந்திரத்தை வென்றெடுக்க வேண்டுமென்பது அவர்களது கருத்தாக இருந்தன. யாழ்ப்பாண குலபேதங்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த முதல் குழுவினராகும் கௌரவம் அவர்களுக்குரியதாகும். வெவ்வேறு இனங்களை அடிப்படையாகக் கொண்ட சர்வதேசியமான ஜனநாயக முறையொன்றிற்காக அவர்கள் முன்நின்றனர். டொனமூர் அரசியலமைப்பின் கீழ் 1931ம் ஆண்டு நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலின்போது, அவர்கள் மிக வெற்றிகரமான முறையில் பகிஷ்கரிப்புப் போராட்டமொன்றை யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்தனர். அந்தப் போராட்டத்தில் பங்கு கொள்ளுமாறு கோரினர். தென்னிலங்கை மக்களிடமிருந்து அதற்குத் தேவையான ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் சிங்களத் தலைவர்களிடையே மிகப் பிரபல்யமான உடையாக மாறிய தேசிய உடையை முதன் முறையாக குணபால மலல சேகரவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தது, யாழ்ப்பாணச் சங்கமாகும். படித்த சம்பிரதாயத் தலைவர்கள் எல்லோருமாக ஒன்று சேர்ந்து யாழ்ப்பாணச் சங்கத்தை அடக்கி வைத்தனர். அது அவ்வாறாக நடந்திருக்கா விட்டால் தமிழ் சிங்கள உறவு இதை விட வித்தியாசமானதாக அமைந்திருக்கும். ஸ்ரீ நிஸ்ஸங்கா, வில்மட் பெரேரா என்பவர்களது கண்ணோட்டங்களும் இதற்குச் சமமாகவே இருந்தன. அவர்கள் இருவருக்கும் பலம் கொண்ட சிங்கள மானசீகத்தன்மைகள் இருந்த போதிலும் எச்சந்தர்ப்பதிலும் அவர்கள் தமிழ் முஸ்லீம் எதிரிகளாக இருக்கவில்லை. தோட்டத்துறை தமிழ் மக்களது பிரஜா உரிமையை இல்லாதொழிக்கும் சாசனத்துக்கு இவர்கள் இருவரும் எதிராக இருந்தனர். இது நியாயத்துக்கு எதிராக அமைந்திருப்பதால் அதனைத்தான் எதிர்ப்பதாக ஸ்ரீ நிஸ்ஸங்க கூறினார். ஸ்ரீ நிஸ்ஸங்கா ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஆரம்ப ஸ்தாபகர்களில் ஒருவராக இருந் போதிலும், அந்தக் கட்சி சிங்களம் மட்டும் என்ற அமைப்போடு சேர்ந்து கொள்ளும் போது அவர் உயிரோடு இருக்கவில்லை. இருந்தாலும் 1956ம் ஆண்டு வரைக்கும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய வில்பட் பெரேரா, 1956ம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டி போடாமலிருந்தது பண்டார நாயக்காவின் சிங்களம் மட்டும் என்ற கொள்கையோடு அவருக்கிருந்த விருப்பமின்மையின் காரணமாகவேயாகும். அதன் மூலம் பண்டாவும் அழிந்து (பண்டார நாயக்கா) முழு நாடும் அழிவை நோக்கிச் செல்லுமென அவர் தனது நண்பர்களிடம் கூறியுள்ளதாகத் தெரியவருகின்றது.

பிற்காலத்தில் நாட்டில் முடிவில்லாத அளவுக்கு இரத்தம்சிந்தும் நிலை ஏற்படக்காரணம் இரத்தம் சிந்தாமல் பாரிய சமுதாயச் செயற்பாடுகள் இல்லாமல் பெற்றுக் கொண்ட சுதந்திரம். அதன் மூலம் ஏற்படுத்திக் கொண்ட அரசியல் முறையை முன்னெடுத்துச் செல்லத் தேவையான ஐக்கிய ஜனநாயகரீதியிலான அரசியல் முறைமையை முன்னெடுத்துச் செல்லத் தேவையான ஐக்கிய ஜனநாயகரீதியான சமுதாய முறையொன்றை அதற்கு ஏற்ற தேசிய அடிப்படையிலான அரசியல் முறையொன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் போனதன் காரணத்தினாலாகும். இது மாறுபட்ட ஜனநாயக முறையொன்றின் சிக்கலான நிலையொன்றெனக் கூற வேண்டியுள்ளதோடு நாட்டில் தற்போது நிலவும் இனங்களுக்கிடையேயுள்ள பிரச்சினையும்



அதன் பெறுபேறேயெனக் கொள்ள வேண்டியுள்ளது.

தற்போது நாட்டின் முன்னுள்ள முக்கியமான சவால் இப்பிரச்சினைக்கு தீர்வு தேடிக் கொள்வது எவ்வாறு என்ற கேள்வியேயாகும். அதற்காக இந்தச் சமுதாய முறையோடும், அரசியல் முறையோடு இரண்டறக் கலந்துள்ள இந்தப் பாரிய திரிபுபடுத்தலை இல்லாதொழிக்கும் வகையிலான ஜனநாயக முறையொன்றை நோக்கிக் கொண்டு செல்லல் வேண்டும். அதற்கான செயற்பாடுகள் பாரிய அளவினதாக இருக்க வேண்டியதோடு பாரிய சமுதாயச் செயற்பாடுகளை உள்ளடக்கியதாககவும் இருத்தல் வேண்டும். சிந்தனை ரீதியாக அவ்வாறான செயற்பாடுகளை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதுபோன சுதந்திரப் போராட்டத்தை முழுமையாக மாற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் சமுதாய, அரசியல் முயற்சியொன்றாக இதனைக் கொள்ளல் முடியும். இதற்குத் தேவையான மூலாரம்ப நிலையை உள்வாங்கிக் கொள்ள முடிவது, தென்னிலங்கைச் சிங்கள சமுதாயத்திலிருந்து கிளர்ந்தெழுந்து கொண்டிருக்கும் ஜனநாயக உரிமைகளுக்கான கேள்விகளும் வட கிழக்கில் எழுந்து கொண்டிருக்கும் சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்கான கேள்விகளையும் சரிவர ஏற்று திரட்டப்படுகையில் மட்டுமேயாகும்.

அவ்வாறானதொரு ஒன்று திரட்டலுக்காக சிங்கள சமுதாயத்தினர் சிறுபான்மை இன மக்களது நியாயமான உரிமைகள் சம்பந்தமாக எழுப்பப்படும் வேண்டுதல்கள் பற்றி அக்கறை கொள்ளல் கட்டாயமாவதோடு தமிழ் முஸ்லிம் இனத்தவர்களும் தென்னிலங்கையில் இருந்து எழுந்து கொண்டிருக்கும் ஜனநாயகரீதியினை அபிலாஷைகள் பற்றியும் தெளிவானவர்களாக இருத்தல் வேண்டும். இந்த அர்த்தத்தோடு பார்க்கையில் அரசியல் துறையை ஜனநாயக ரீதியிலானதொன்றாக மாற்றிக் கொள்வதற்காக சுயாதீனமான நான்கு கமிஷன் சபைகள் பற்றிய வேண்டுதலோடு, தெளிவுபெற்ற தமிழ் முஸ்லீம் சமுதாயம் தூரமாக இருத்தல் கூடாது. அதற்கு ஆதரவளித்து அந்த முயற்சியைப் பயன்படுத்தி, போஷனை செய்தல் வேண்டும். சிறுபான்மையினரின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான மிக ஆரோக்கியமான பின்னணி உருவாவது சர்வாதிகாரத்துக்குப் பாரமான அரசியலமைப்பொன்றின் மூலமன்றி அதிகமான அளவில் ஜனநாயக முறைக்குச் சாதகமான அரசியலமைப்பொன்றின் மூலமேயாகும். இந்தச் சுயாதீன கமிஷன் சபைகள் நான்கு பற்றிய வேண்டுதல்களுள் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்று இல்லாவிடினும், ஜனநாயத்தை வலுப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் சிறுபான்மையினருக்குத் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வேண்டிய சாதகத் தன்மைகளையே ஏற்படுத்தும். உதாரணமாக சுயாதீன நீதிமன்ற முறை சிங்கள பெரும்பான்மை இனத்தவருக்கு மட்டுமன்றி சிறுபான்மை இனத்தவர்களுக்குமாகும்.

சிங்களத் தலைவர்கள் சிறுபான்மை இனத்தவர்களை தொந்தரவுக்குள்ளாக்கும் எவ்வித நடவடிக்கைகளை மேற்கொண்டாலும், சுயாதீனமான நீதிமன்றமோ அல்லது ஜனநாயக முறையிலான சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அர்ப்பணித்து நீதிமன்ற முறையொன்று நாட்டில் உண்டெனில் இந்தளவு பாரிய அழிவுகள் ஏற்படாமலிருந்திருக்கும் என்பதை சிறுபான்மையினர் மறந்துவிடக் கூடாது. சிறுபான்மையினரிடையே வேற்றுமை காட்டும் சட்டஅமைப்புக்கு இடமளிக்காத நடவடிக்கைகள் சோல்பரி அரசியல் அமைப்பினுள் அடங்கியிருந்தன. டி.எஸ். சேனாநாயக்கா இடது சார்புக்கட்சிகளை பலமிழக்கச் செய்வதற்காக தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமைகளை இல்லாதொழிப்பதற்கான சட்ட வரைவுகளை ஏற்படுத்தியதும், பின்பு பண்டார நாயக்கா தமக்கு அவசரமான இலகுவான வெற்றியைப் பெற்றுக் கொள்ளக் காரணமாக அமைந்த சிங்கள மொழிச் சக்திகளை சந்தோஷப்படுத்துவதற்காக சிங்களம் மட்டும் என்ற சட்டத்தை ஏற்படுத்தியதும் சோல்பரி அரசியலமைப்பின் நிபந்தனைகளைப் புறக்கணித்தேயாகும். செல்வநாயகம் அவர்கள் இந்த அரசியலமைப்புக்கு எதிரான பாரிய போராட்டங்களை மேற்கொண்ட போதிலும், அதில் அவர் தோல்வி கண்டது அந்தச் செயற்பாட்டில் இருந்த தவறுகளினாலன்றி சமுதாய அரசியல் தாக்கங்களின்றி, நியாயத்தை வென்றெடுக்கும் அளவுக்கு நீதிமன்றம் சுயாதீனமாக இருந்திருக்காமையின் காரணத்தினாலேயேயாகும். இது எமது நாட்டில் ஏற்பட்டுள்ள சமுதாயச் சீரழிவுகளுக்கு நீதிமன்றம் சம்பந்தமான முதல் சந்தர்ப்பம் இல்லையென்பதையும் கூறல் வேண்டும்.

அரசிலமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ கால எல்லையை நீட்டிக் கொள்ளும் முயற்சிகளுக்கு சந்தர்ப்பம் கொடுக்கக் கூடாதென்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட மூல தர்மமாகும். இருந்தாலும் அந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட மூலதர்மத்திற்கு மாற்றாக அரசியல் முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தக் காரணமான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பொன்றின் மூலம் பாராளுமன்ற உத்தியோகபூர்வ காலத்தை ஆறு ஆண்டுகளாக நீட்டிக் கொள்ள ஜே.ஆர் ஜயவர்த்தன முன்னெடுத்த கபடத்தனமான செயற்பாட்டிற்கு உயர் நீதிமன்றம் அனுமதியை வழங்கியது. அது சட்டத்துக்கும் அனுகூலமானதாக இருக்கவில்லை என்பதனாலாகும்.

இப்பிரச்சினைக்கு தீர்வுகளைத் தேடிக் கொண்டாலும் அதனூடோ பிரச்சினைகள் மேலெழும் சந்தர்ப்பங்களில் அவைகளை முழுமையாகத் தீர்த்துக் கொள்வதற்காக வேண்டி நீதிமன்றத்தின் முன் செல்ல நேரும். இந்த அர்த்தத்தில் சுயாதீனமான நீதிமன்ற முறை பெரும்பான்மை இனத்தினருக்கு மாத்திரமன்றி, தமிழ் முஸ்லிம் சிறுபான்மை இனத்தவர்களுக்கு மிக முக்கியமானதொன்றாக இருக்கும்.

# அரசின் அடுத்த.......

6ம் பக்கத் தொடர்ச்சி.....

மக்களினால் நிராகரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வந்து புலிகள் இயக்கத்தை உடன்பட வைக்க முடியும் என எண்ண முடியாது.

எது எப்படியாக இருந்த போதிலும், போர் காலத்திற்குள் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானால் விடுதலைப் புலிகள் பதில் என்ன என்பதை அரசு அறிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும். இது வரை விடுதலைப் புலிகள் அரசினால் முன்வைக்கப்பட்ட அரசியல் யாப்பு பற்றி தமது பத்திரிகை ஊடாக வேனும் எவ்வித கருத்தையும் முன்வைக்கவில்லை. ஏனென்றால் அரசு முன்வைத்திருக்கும் அரசியல் தீர்விற்கு விடுதலைப் புலிகள் இணங்கமாட்டார்கள், நான் கூறியுள்ளது போல் தற்போது உத்தேசித்துள்ள அரசியல் மறுசீரமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பிராந்தியங்களுக்கு மாகாண சபைக்குள்ள அதிகாரமும் இல்லை. அதன் காரணமாக விடுதலைப் புலிகள் இதனை எவ்வாறு தமிழ் மக்களுக்கான தீர்வாக ஏற்றுக் கொள்வர்கள். மாகாண சபைகளுக்குள்ள அதிகாரமும் மிகவும் குறைவானதே.

புதிய அரசியல் யாப்பினை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியாது போனால் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இதனை நிறைவேற்றிக்கொள்ளப் போவதாக சந்திரிகா கூறியுள்ளார். உண்மையாகவே விடுதலைப் புலிகளின் இணக்கப்பாடு அல்லாத ஒரு அரசியல் யாப்பிற்காக பெரும்பான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றிட முடியும் என்பது பைத்தியக்காரத்தனமானதாகும். தமிழ் பேசும் மக்கள் பங்கு கொள்ளாத சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தமிழ் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண முயல்வது எவ்வாறு ஜனநாயகமாகும்.

இன்று, இடதுசாரித்துவ செயற்பாட்டாளர்கள், மக்கள் விடுதலை முன்னணிக்கும் சிஹல உறுமயவிற்கும் எதிராக வீதிகளில் இறங்கி விட்டார்கள். நான் கலந்து கொண்ட குருநாகல் ஊர்வலத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் அணிதிரண்டனர். அதுபோல் கண்டி ஊர்வலத்திலும் ஐநூறுக்கும் அதிகமான மக்கள் பங்கு கொண்டனர். ஏனென்றால் இவ் ஊர்வலங்கள் பற்றி சிங்கள பத்திரிகைகளில் வெளிவருதில்லை. அதனால் சிஹல உறுமய சிறுதொகை மக்களுடன் வீதியில் இறங்கினாலும் அதனை பெரிதுபடுத்தி வெளியிடுவர்.

அரசு மேற்கொள்ளப் போகும் அடுத்த நடவடிக்கை என்ன என்பது முக்கியமானதாகும். எடுக்கப் போகும் நடவடிக்கைக்கு தொழிலாள வர்க்கத்தின் ஆதரவு கிடைக்கா விடில், ஓர் அங்குலமேனும் முன்நோக்கி செல்ல முடியாது. அது மாத்திரமல்ல, அரசாங்கம் மிஞ்சுமா என்பதும் கேள்விக்குறியே?

# நூல் அறிமுகமும் விமர்சனமும்

முதலாவது. ஆண்டு மலரினை யாத்ரா வெளியிட்டுள்ளது. சிறந்த தொகுப்பு. இன்று இலங்கையின் கவிதைத்துறையில் சொல்லப்படுகின்ற பல புலம்பல்களுக்குச் சரியான விதத்தில் தெளிவானதும், அழுத்தமானதும், ஆற்றல் மிக்கதுமான பதிலைக் கொடுக்கின்ற விதத்திலே இம்மலரிலுள்ள பெரும்பாலான ஆக்கங்கள் அமைந்துள்ளன. யாத்ரா தனது கவிதை நோக்கை முதற்பக்கத்திலேயே வெளியிட்டுள்ள கவிதை பற்றிய அறிமுகத்தில் வெளிப்படுத்துகின்றது எனச் சொல்லத்தோன்றுகிறது.

கவிதை வீட்டுக்கு வீடு
ஒரு விளக்கை
எடுத்துச் செ ல்லையானால்
ஏனிழகளு தன் அர்த்தம்
என்னவென்று விளங்க ல்லையானால்
அதை விட்டொழிப்பது
உத்தமம்
மஹ்முது தர்வீஷ்.

இந்த மலரில் மொழியெர்ப்புக் கவிதைகள், ஏற்கனவே வெளியான நெடுங்கவிதைகள் இன்றைய ஆக்கங்கள் உட்பட, நாற்பது கவிதைகள் வரை உள்ளன. இவற்றோடு ஒலிநயமும், திறனாய்வுக் கொள்கைகளும் பற்றி கே. எஸ். சிவகுமாரன், சுபத்திரன் கவிதைகள் குறித்து லெனின் மதிவானம், ஹெச்.ஜி.ரசூலின் "தமிழ் வாசகனின் பார்வைகள்", அந்தனி ஜீவாவின் "கவிஞர் குறிஞ்சித் தென்னவன்" அஷ்ரஃப் சிகாப்தீனின், "ஒரு யுகத்தின் தலைவ்னான கவிஞன்", எஸ். நளீமின் சுதந்திரம், இந்திரா பார்த்தசாரதியின் "ஹைக்கூ கவிதைகள்", செ. யோகநாதனின், "தமிழ்க்கவிதை நேற்றும் இன்றும் இனியும்" பங்கரிலிருந்து பல்கலைக்கழகம் வரை என்ற மொழி பெயர்ப்பும், ஜிப்ரானின் "நமது இலக்கிய உலக"மும் ஆகிய கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

இப்போது சிந்தனை வீச்சோடும், சிறப்பாகவும் எழுதிக் கொண்டிருக்கின்ற கவிஞர்களையெல்லாம் இந்த மலரிலே இடம் பெறச்செய்ய ஆசிரியர் எடுத்துக் கொண்ட முயற்சி, இம் மலரினை இன்றைய கவிதைப் போக்கைத் தெளிவாகவே பதிவு செய்வதாக அமைந்திருக்கிறது. அதோடு கனதியான ஆவணமுமாக ஆக்கி இருக்கின்றது. சி. சிவசேகரம், எம். ஏ. நுஃமான், மேமன்கவி, மரினா இல்யாஸ் ஷாபி, முல்லை முஸ்ரிபா, ஷிபான், அமர், விஜிலி, அவார், ஜிப்ரான், இப்னு ஹஸன், அறபாத், ஏ. இக்பால், றுஸ்தா, வரோதயன், ரபீக், அன்புடீன், அஷ்ரஃப் சிகாப்தீன், ஆகியோரது கவிதைகள் சமகால வாழ்வினைத் தொட்டு, விமர்சித்து, கடிந்து, எதிர்த்துக் குரல் கொடுக்கின்றன. இவற்றின் சில கவிதைகள் அடித்தளமும் கருதுகோள்களும் முரணும், தவறுகளும் கொண்டிருக்கின்றன என்பது வேறு விஷயம். ஆனால் தன் காலத்தைப் பிரதிபலிக்க முயலும் உணர்வே இக்கவிதைகளின் அடிச்சரடு என்பதை அறிகையில் இலக்கியமென்பது மறைமுகமான அரசியல் என்ற கருத்தின் வலிவை உணர்ந்திட முடிகின்றது. கவிஞர்கள் சி. சிவசேகரம், ஏ. இக்பால், ஸதக்கா கவிதைகளில் இன்றைய அரசியல் அழுக்குத்தனங்களிற்கு எதிரான குரல் எளிமையாகவும், அழுத்தமாகவும் வெளிப்படுத்தப்படுகிறது. ஓட்டமாவடி அறபாத்தின் கவிதை பல தளங்களை உயிர்ப்போடும், கவித்துவம் செறியவும் சொல்கிற சொற்சித்திரம், இது போன்றதே என்னைத் தீயில் எறிந்தவள் என்ற நெஞ்சை நெகிழச் செய்யும் கவிதைச்சரம்.




யாத்ரா
கவிதைகளுக்கான இதழ்
37 தங்கனத்த வீதி,
மாபொல, வத்தளை.
விலை ரூபா 60.00

கே. எஸ். சிவகுமாரன், இந்திரா பார்த்தசாரதி, இப்னு அஸூமத் கட்டுரைகள் இன்றைய கவிஞர்களுக்குப் பல விளக்கங்களையும், புதிய நெறிப்பாடுகளையும் தெளிவுபடுத்துகின்றன. சிந்திக்கவைக்கின்றன. ஜிப்ரானின் நமது இலக்கிய உலகம் கட்டுரையில் அவர் இவ்வளவு ஆங்கில வார்த்தைகளைச் சேர்த்திருக்கத் தேவையில்லை. தமிழ் இன்றைக்கு இணையமொழியாக வளர்ந்திருக்கிறது. அது எதையும் தெளிவாகவும், கருத்துச் செறிவோடும் சொல்லுகின்ற வளமான மொழி. அவர் இந்தக் கட்டுரையில் கையாண்டுள்ள அத்தனை வார்த்தைகளுக்கும் அர்த்தம் செறிந்த, இலகுவான தமிழ் வார்த்தைகள் உள்ளன. சாதாரண வழக்கத்தில் பேசப்படுகின்றன. இப்படி எழுதுகின்றவர்கள், தமிழகத்திலும், இப்போது இலங்கையின் சில ஊடகங்களிலும் ஆங்கிலக் கொச்சைவார்த்தைகளைப் பயன்படுத்தும் மோசடித் தனத்துக்கு உட்பட்டு விட்டார்களோ என எண்ணத்தோன்றுகிறது. அப்படி இல்லையாயின் இவர்கள் சென்னைப் பல்கலைக்கழக ஆங்கில தமிழ் அகராதியினை வாங்கிப் பயன்படுத்தலாம். சொற்களைக் கற்றுக் கொள்ளலாம்.

லெனின் மதிவானத்தின் சுபத்திரன் கவிதைகள் அறிமுகம் சுபத்திரன் என்ற பாட்டாளி வர்க்கப்பதாகையினை உயர்த்திப் பிடித்த கவிஞனின் தனித்துவத்தை அருமையாகக் கோடிட்டுக் காட்டுகின்றது. அதோடு லெனின் மதிவானம் குறிப்பிட்ட தகவலின் படி, சுபத்திரனின் வெளிவராத கவிதைகளை அவரோடு நன்கு தோழமை கொண்டிருந்த மௌனகுரு நூல்வடிவாக்க உள்ளதாகச் சொன்னது இன்னும் அப்படியே செயற்படாதிருப்பதையும் நினைவுபடுத்த வேண்டியுள்ளது. இப்போது சாருமதியென்ற கவிஞனும் நம்மிடையே இல்லை.

கவிஞர் அப்துல் காதர் லெப்பையைப் பற்றிய அறிமுகம் மிகவும் பயனுள்ளது. அவருடைய செய்யனம்பு நாச்சியார் மான்மியத்தின் ஒரு பகுதியினையும் இம்மலரில் காண முடிகின்றது. கவிஞரின் புதல்வர் கலாநிதி அமீர் அலி, பொருளாதாரப் போராசிரியராக அவுஸ்திரேலியாவில் கடமை புரிபவர், இலக்கிய ஆர்வலர். விடுமுறைக்கு அவர் இலங்கைக்கு வந்திருந்தபோது, பல்கலைக்கழகத்திலேயே நண்பராக இருந்த அவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் மனதிலே தகப்பனாரின் ஆக்கங்களை நூலாக்கும் எண்ணமிருந்தது. யாத்ரா அவரோடு தொடர்புகொண்டு கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் படைப்புகளை பதிப்பிப்பது பயனான இலக்கியப் பணியாக அமையும். அத்தோடு தமிழிற்கு இது வளமும் பெருமையும் சேர்க்கும்.

ஆய்வாளர்களுக்கு அகப்படாத ஒரு புலவரின் சிறுகாவியமான வெள்ளப்பிரளயக்காவியம் யாத்ராவில் இடம் பெற்றுள்ளது. 1957 வெள்ளப்பெருக்கு, அது விளைத்த அனர்த்தங்கள் பற்றி 1958ல் எழுதப்பட்டு மூன்று பதிப்புகள் கண்ட நூல். நமது முதுசம். அருமையான காலப்பதிவு செய்தமைந்த காவியம்.

இந்த மலரில் மிகக் குறிப்பிட்டுச் சொல்லும் சிறப்பினை மொழிபெயர்ப்புக் கவிதைகள் பெற்றுள்ளன. எமது சிறந்த கவிஞர்கள் செய்துள்ள மொழி பெயர்ப்புகள் மிகுந்த தரத்துடன் உள்ளன.

பாகிஸ்தானின் சிறந்த மக்கள் கவிஞரான ஃபைஸ் அஹமத் ஃபைஸின் கவிதையை, சிறந்தமொழி பெயர்ப்பாளரும், கவிஞருமான பண்ணாமத்துக் கவிராயர் தமிழில் தந்துள்ளார். அறபு மொழியிலிருந்து இரண்டு கவிதைகளை ஏ.சி.ஏ. மஸாஹிர், தமிழாக்கியுள்ளார்.எல்.சல்வடோர் தேசப் பெண்கவிஞரான க்ளோடியா லார்ஸ் எழுதிய மூன்று கவிதைகளை கவிஞர் சி.சிவசேகரம் தமிழாக்கியுள்ளார். சர்வதேச மொழிக்கவிதைகளை வீச்சோடும் உயிர்த்துடிப்போடும் மொழிபெயர்த்து வருகிற சிவசேகரம், இன்றைய கவிதைத் துறைக்கு செய்யும் அர்ப்பணிப்பான பங்களிப்பு ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு துணை புரியத் தக்கதாயிருக்கிறதென்பதை மென்மையான இக்கவிதைகள் இன்னொரு முறை உறுதி செய்கின்றன. மென்மையும் ஆழமும் செறிந்த கவிதைகள்.

இப்போது, நமது மொழிபெயர்ப்புத்துறைக்கு வாய்த்துள்ள இன்னொரு பொக்கிஷம் இப்னு அஸூமத். கவிஞனுடைய மொழிபெயர்ப்பில் மேலான கவித்துவம் செறிந்திருக்கும். இப்னு அஸூமத்தும் அப்படியே. விஜயரத்ன தேனுவர, என்.எம்.நாளக்க இந்திக்க, செனிவிரத்ன கே.பண்டார ஆகிய சிங்களக் கவிஞர்களின் இதயசுத்தியான குரலை உயிர்ததும்ப தமிழிலே கேட்க வைத்திருக்கிறார் கவிஞர். நேர்காணல்கள் இரண்டு. தமிழ்கவிதையில் குறிப்பிட்டுப் பேசப்படும் மு. சடாட்சரத்தின் கருத்துக்கள் மிகத் தெளிவானவை, "யதார்த்தப்படைப்பே மக்கள் இதயத்தைத் தொடும். வாழ்வியலைப்படம்பிடிப்பதே எனது இலட்சியம். அதுவே நிரந்தரமானது, மக்கள் இலக்கியமாக மிளிரத்தக்கது என்கிறார் அவர். அவர் மீண்டும் முனைப்பாக இயங்க இந்த நேர்காணல் வழிசெய்யும். நாவல், சிறுகதை, கவிதைத்தளங்களில் அடையாளம் பதித்த அல் அஸூமத்தின் பல கருத்துக்கள் விவாதத்திற்கு களம் அமைக்கும். விவாதங்கள் தெளிவைத்தரும்.

கவிதை ஆய்வாளர்களில் இளைஞர்களதும் புத்தக அலுமாரியில் தவறாமல் இருக்கும் சகல தகுதிகளும் கொண்டது இந்த மலர்.

**செ.யோ**

---

2000ம் ஆண்டிலிருந்து க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு பொது விழிப்பு என்றொரு பாடம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. உயர் வகுப்பு மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதி பெறவேண்டுமானால் - நாடு தழுவிய ரீதியில் அனைத்து மாணவர்கள் மத்தியிலும் நடாத்தப்படும் இப் பாடத்தில் சித்தியடைதல் வேண்டும்.

தமக்குரிய 3 பாடங்களில் "ஏ" தரத்தில் சித்தியடைந்த ஒருவர் இப் பாடத்தில் ஆகக் குறைந்தது 40 புள்ளிகளையாவது பெற்றுக் கொள்ளாவிடின் அவருக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படமாட்டாது.

இப்பாடத்திற்கென திட்டவட்டமான முறையிலான பாடத்திட்டம் ஒன்றை அரசாங்கம் வெளியிடவில்லை. மாணர்வகளின் தேடிக் கற்கும் ஆற்றலை வளர்ப்பதற்காகவே அரசாங்கம் இவ்வாறு வெளியிடவில்லை.

எனினும் கடந்த இரண்டு ஆண்டுகளில் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் நிகழும் முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களே இதன் பாடத்திட்டமாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதுவரை 12க்கு மேற்பட்ட பொது உளச்சார்பு, பொது அறிவு போன்ற போட்டிப் பரீட்சைக்கான நூல்களை எழுதியுள்ள - இலங்கை நிருவாக சேவை அதிகாரியான ஏ.எல்.எம் பளீலால் மாணவர்களுக்கு இலகுவில் புரியும் விதத்தில் அழகாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளது.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் அவசியமான பாடக் குறிப்புக்கள், முக்கியமான ஆண்டுகள், பெயர்கள் என்பன எழுதப்பட்டுள்ளன. அத்துடன் கடந்த காலங்களில் எவ்வகையான கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அவற்றிற்கான விடைகளும், அவ்விடைகளைத் தேர்வு செய்வதற்கான காரணங்களும் கூடத் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன.




பொது விழிப்பு
(பல்கலைக்கழக அனுமதிக்கான
போட்டிப் பரீட்சை நூல்)
வெளியீடு - பல்கலைக்கழக
கல்வி நிலையம், இலங்கை.
விலை - 155.00

இப்பரீட்சை தொடர்பாக அரசாங்கம் இதுவரை இரண்டு மாதிரி வினாத்தாள்களை வெளியிட்டுள்ளது. அவ்வினாக்களுக்குரிய பாடக் குறிப்புக்கள் யாவும் இந்நூலில் உள்ளக்கப்பட்டிருப்பது மாணவர்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைகிறது.

2000 ஆகஸ்டில் இலங்கையில் முதன் முதலாக இப் பரீட்சை நடாத்தப்பட்ட போது, அரசாங்கத்தால் வினாத்தாள் மாத்திரமே பகிரங்கமாக வெளியிடப்பட்டது. அதற்கான விடைகளை அரசாங்கம் இதுவரை வெளியிடவில்லை. வெளியிடவும் மாட்டாது. அதனால் சரியான விடைகள் எவையாக இருக்கும் என்று மாணவர்கள் அங்கலாய்த்த வண்ணம் உள்ளனர். ஆனால் இந் நூலில் அவ்வாறான பரீட்சை வினாக்களும் தொகுக்கப்பட்டு அவற்றிற்கான விடைகளும் வழங்கப்பட்டுள்ளன. இது மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது.

பொது விழிப்பு பாடத்துக்கென இலங்கையில் வெளியிடப்பட்டுள்ள ஒரேயொரு நூல் இதுவாகும்.. பல்கலைக்கழகப் பரீட்சையில் எப்படியாவது சித்தியடைந்து விட வேண்டும் என்ற அவா கொண்டுள்ள மாணவர்களுக்கு இந் நூல் சிறந்ததொரு வழிகாட்டியாகும்.

இதனை நாட்டின் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ள முடியும். தூர இடத்து மாணவர்கள் ரூபா 98.00 விசேட விலையில் தபால் மூலம் பெற்றுக் கொள்ள விசேட பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி -
DIVISIONAL SECRETARY,
(EDUCTIONAL UNIT),
DIVISIONAL SECRETARIAT,
KALMUNAI

கே. கருணாகரன்,
அதிபர்.

# நான் பேச விரும்புகிறேன்

—லிவ் உல்மன்



1980லிருந்து சர்வதேச மீட்புக்குழுவின் துணைத்தலைவராக இருக்கும் லிவ் உல்மன் உலகின் பல்வேறு பகுதிகளில் அகதிகளாக அல்லுறும் மக்களுக்காகவும், எய்ட்ஸ் நோயாளிகளுக்காகவும் நிவாரணம் தேடும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். 1980லிருந்து யுனிசெப்பின் நல்லெண்ணத் தூதுவராக இருந்து வரும் லிவ் 1981ம் ஆண்டுக்கான ஐ.நா. சபையின் சமாதான வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். நோர்வே தேசத்தில் பிறந்த இவர் சர்வதேச புகழும் சிறந்த நடிகையுமாகத் திகழ்பவர். நடிப்பு அனுபவம் இவரை திரைப்பட இயக்குநராக மாற்றியது. 1992ல் லிவ் உல்மனின் இயக்கத்தில் 'சோபி' என்ற திரைப்படம் அவரை உலகிற்குச் சிறந்த திரைப்பட இயக்குநராக வெளிப்படுத்திற்று. 1996ம் ஆண்டில் 'ரகசிய பாவமன்னிப்பு' வெளியாகிற்று. இந்த ஆண்டில் 'அவநம்பிக்கை' என்ற இன்னொரு சிறந்த படத்தை இயக்கி வெளியிட்டுள்ளார். இப்போது வெளியாகியுள்ள இவரால் எழுதப்பட்ட சுயசரிதை நூல் சிறந்த படைப்பாளியாக இவரை இனங்காட்டியுள்ளது.

என் எந்த வெற்றியும் அவளை திருப்தி செய்வதில்லை. என் எந்த சந்தோஷமும் அவளுக்குக் கிளுகிளுப்பு ஊட்டுவதில்லை. பல அதிகாலை நேரங்களில் விழிப்பு வந்ததும், இனிமேல் அவளுடைய வாழ்க்கையை வாழ்ந்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானம் உருவெடுக்கும். படுக்கையில் பக்கத்தில் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் என் செல்ல மகள் லின் மூலமாக எனக்குள் வாழும் அந்தச்சிறுமியின் வாழ்வை வாழ்ந்துவிட ஆசை மிகக் கொள்வேன். மகளின் தூக்கம் கலைந்து விடாதபடி அவளுடைய கம்பளிக்குள் நுழைந்து அவளைச் சேர்த்து அணைத்துக் கொண்டு அவளுடைய உடம்பின் கதகதப்பையும் அவள் மூச்சுக் காற்றின் வெதுவெதுப்பையும் அப்படியே உள்வாங்கி சில நிமிடங்கள் அவளாகவே ஆகிக் கணமயங்கிப் படுத்திருப்பேன்.

இரண்டாம் உலகப் போர் வரலாற்றின் அடுத்த நிகழ்ச்சி நிரலாக இருந்தபோது - 1938 டிசம்பர் 16ல் பிறந்தார் லிவ் உல்மன்.

பிறந்திருப்பது பெண் குழந்தையாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். இந்திச் செய்தியை உங்கள் கணவரிடம் நீங்களே தைரியமாகிச் சொல்லி விடுவீர்களா? என்று லிவ் பிறந்த சில நிமிடங்களில் ஆஸ்பத்திரியின் நர்ஸ் லிவ் உல்மனின் தாயாரின் காதருகே கிசுகிசுத்தாள்.

நார்வே தேசத்தின் பெருமிதமாக பின்னர் உணரப்பட்டு மதிக்கப்பட்ட- ஒரு நாடக - திரைப்பட நடிகையாக - உலகம் மதிக்கும் நுட்பமான கலைஞராக - லிவ் உல்மன் உருக்கொண்டார். ஆண்-பெண் உறவு குறித்து ஆழமான கேள்விகளையும், புரிதல்களையும் முன்வைத்த வாழ்க்கையாக உல்மனின் வாழ்க்கை தொடர்கிறது.

ஆறு வயதுச்சிறுமியாக இருக்கையில் லிவ் தந்தையை இழந்தார். அந்த இழப்பு-அந்த வெறுமை தனக்குள் ஒரு பள்ளத்தை உருவாக்கிவிட்டதாக- பிற்காலத்தின் அனுபவங்களை எல்லாம் கொட்டி நிரப்புவதற்கான ஒரு பள்ளம்போல ஆகிவிட்டதாக உணர்ந்தார்.

வெள்ளைச் சலவைக்கல்லால் ஆன அந்தக்கல்லறைதான் உன் அப்பா என்று பெரியவர்கள் கூறியதைச் சிறுமியான உல்மனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. ஒருமுறைதன் பொம்மைகள் விளையாட்டுப்பொருட்கள் எல்லாவற்றையும் பொண்டுபோய் அப்பாவின் கல்லறைக்கு அருகே புதைத்து வைத்தாள் லிவ்- அப்பாவை மட்டும் அந்த மயானத்தில் தனியாக விட்டுவர மனம் ஒப்பாமல்.

அன்று இரவில் மரணம் பற்றி தன் பிரியமான சோகம் ததும்பிய குரலில் அம்மா அவளுடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். அம்மாவின் அன்பைப் போல மரணமும் அன்று உல்மனுக்கு அழகானதாகத் தோன்றியது. நான் சீக்கிரம் மரணத்தைச் சந்திக்க வேண்டுமென அன்று மிகவும் ஆசைப்பட்டேன் என்று லிவ் தன் சுயசரிதையில் எழுதுகிறார்.

தன் நேசருடன் இரவைப் பகிர்ந்துகொண்டு காலையில் கட்டிலைவிட்டு எழுந்து வருவது போன்ற ஒரு நிறைவான வாழ்க்கை வேறு இல்லை என உல்மனின் தாய் விட்ட ஏக்கப் பெருமூச்சுகளால் அவருடைய பால்யகாலம் சற்றே வாடி இருந்தது. சோகம் ததும்பிய கனவுகளால் நிறைந்திருந்தது.

அவருடைய வாழ்வில் இருமுறை விவாகரத்துச் செய்துகொள்ள நேரிட்டது. ஒவ்வொரு முறையும் விவாகரத்துப் பத்திரத்தில் கையெழுத்திட்ட நாளில்தான் தாங்கள் எங்கே தவறு செய்தோம் என்பது இருவருக்குமே தெளிவாகத் தெரிந்ததாக எழுதுகிறார். சேர்ந்து வாழ்ந்த நாட்களைவிடப் புரிந்த பிறகுதான் தான் ஆண்களை மிகவும் புரிந்துகொண்டு நேசித்ததாக, நேசிப்பதாக உல்மன் கூறுகிறார்.

ஆழமான மன உணர்வுகளை - மனித உறவுகளை மையமாகக்கொண்டு - நுட்பமாகப் படங்கள் எடுத்த உலகப்புகழ் பெற்ற ஸ்விடிஷ் திரைப்பட இயக்குனர் இங்மர் பெர்க்மனுடன் ஐந்தாண்டுகள் வாழ்ந்தார் லிவ். திருமணம் என்கிற அமைப்புக்குள் போகாமலேயே வாழ்ந்த அந்தக் காதல்வாழ்வின் அடையாளமாக மகள்- லின் பிறந்தாள், எனினும் பெர்க்மனையும் லிவ் ஒரு நாள் பிரிய நேரிட்டது.

பிரிவு எனும் புயல் தாக்கிய ஒவ்வொருமுறையும் நிலைகுலைந்து தடுமாறிய லிவ் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் பாடம் பெற்றார். தனக்குள் ஏதோ மாற்றம் நிகழ்ந்ததைக் கண்டுணர்ந்தார்.

எப்போதும் பற்றிக்கொள்ள ஒரு விரல் தேடும் தன் மனோபாவம் மாறிவந்ததைக் கண்டார். தடுமாறி நடந்தாலும் தன் சொந்தக்காலில் நடக்கமுடியும் என்பது மிகப்பெரிய பாதுகாப்பு உணர்வைத் தந்தது. தான் மாறிக் கொண்டே வந்திருப்பதைத் தன் சுயசரிதையில் பதிவு செய்த உல்மன், அப்புத்தகத்துக்கு "மாறிக் கொண்டே........" என்றே பெயர் வைத்தார்.

காதல் உள்ளிட்டு எல்லாமே நிரந்தரமாய் மாறிக் கொண்டே இருக்கிறது என்பதுதான் வாழ்க்கை தனக்குக் கற்றுக் கொடுத்த பாடம் என்று எழுதுகிறார் லிவ்.

தானும், தன் மகள் லின்னும் சேர்ந்திருக்கும் நேரங்களே தான் அதிகமாகக் கற்றுக் கொள்ளும் நேரம் என கருதும் லிவ் தன் சுயசரிதையை தன் மகளுக்கு எழுதும் கடிதத்தோடு முடிக்கிறார்.

அன்புள்ள லிவ்,

வெளி உலகம் நான் உன்னோடு இருக்க வேண்டிய நேரத்தை நிறைய எடுத்துக் கொள்கிறது. நீ தனிமையில் இருக்க நேரிடுகிறது. விழிபிதுங்குகிற அவசரத்தில் ஓடுகிற ஒரு அம்மா உனக்கு வாய்த்து விட்டாள். அவசரமாக உன்னை அணைத்து விடைபெற்று ஓடுகிற அம்மா.

நாம் இருவரும் சேர்ந்து பெற்றிருக்க வேண்டிய மகத்தான ஒன்றை இழந்துதான் நான் வெளி உலகில் வெற்றிகளை குவித்தேன் என்பதை நினைக்கவே அச்சமாக இருக்கிறது. ஈந்தக் காலம் முழுவதும் என் தொழிலோடு நான் போராடிக் கொண்டிருந்தேன். நான் யார் என்பதையும் நான் ஏன் என்பதையும்? கண்டுபிடிப்பதற்காக.

உன் மிருதுவான உடம்பு வாழ்க்கைக்கு மிக நெருக்கமானது. "நான் இருக்கும்போது நீ ஏன் சோகமாக இருக்கிறாய்?" என்று நீ கேட்கும் போது-

"நீ என்னோடு இருப்பதாலேயே என் வாழ்வை செழிப்பானதாக்குகிறாய்".

ஜன்னலருகே நின்றபடி நீ தோட்டத்தில் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன். அச்சமயங்களில் எனக்குத் தெரிந்த எதையும் விட நான் உனக்கு நெருக்கமானவளாகிறேன்.

நீ என்னுடைய பகுதி- முழுச்சுதந்திரம் பெற்ற பகுதி. இன்னும் கூடவே இருந்து இன்னும் நெருக்கமாக உன்னைக் கவனித்து எப்படி உன் சுதந்திரம் உனக்குள் வாழ்கிறது என்பதை உள்வாங்க ஆசைப்படுகிறேன்.

நீ மற்ற குழந்தைகளோடு சிரிக்கும்போது- தனியே உன்ரகசிய வியைாட்டுக்களில் ஆழ்ந்துவிடும்போது- விதவிதமான வண்ணங்களும் வாசனைகளும் அழகுகளும் இன்னும் உன் உலகமாக இருக்கும்போது நான் எல்லாவற்றையும் விட்டு உன்னிடம் ஓடிவந்து உன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்துவிடத் துடிக்கிறேன்.

நான் இடைவிடாது தேடிக்கொண்டிருக்கிற-தொலைந்து விட்ட பால்யகாலத்து சாம்ராஜ்யம் அதுவாகவே இருக்கலாம்.

நன்றி : விசை

இப் பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கறன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியன்தல வீதி 83ம் இலக்க ராவய அச்சகத்தில் 2000ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது